Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 வெள்ளி - 35 21-27-ஒக்டோபர்-2005




## அஞ்சலி

காற்றில் கலந்த பேரோசை என்று தன்னுடைய ஒரு புத்தகத்திற்குப் பெயரிட்டிருந்தார் சுந்தர ராமசாமி.இன்று அவர் ஒரு பேரோசையாகக் காற்றிலே கலந்துவிட்டார். அவர் தன்னுடைய ஒரு கவிதையில் சொன்னதைப்போல,

காற்றை அறியும் கருவியைக் கண்டு பிடித்தால் சுந்தர ராமசாமியின் பேரோசையைக் கேட்கலாம் என்றமாதிரி அவர் காலத்தோடு, காற்றோடு கலந்துவிட்டார்.

சுந்தர ராமசாமி என்ற மிகப் பெரிய படைப்பாளியை தமிழர்கள் 15.10.2005 இல் இழந்து விட்டார்கள். சுந்தர ராமசாமி தமிழின் மிகச் சிறந்த படைப்பாளி. கடந்த ஐம்பது வருடங்களாக தரங்குன்றாமல் எழுதி வந்தவர். நான்கு தலைமுறைப் படைப்பாளி களோடு இடையறாத பயணத்தைச் செய்தவர்.



# சுந்தர ராமசாமி

# “காற்றில் கலந்த பேரோசை”

**கருணாகரன்**

தன்னுடைய எழுத்துக்களாலும் சிந்தனையாலும் தமிழை வளப்படுத்தியவர்.

தமிழ் நவீன படைப்புலகம். திரட்சியடைந்த 1950களில் சுந்தர ராமசாமி எழுதத்தொடங்கினார். அது புதுமைப்பித்தன், ந.பிச்சமூர்த்தி, மௌனி காலம் சிறுகதையிலும் நவீன கவிதையிலும் புதுமைப்பித் தனையும் ந.பிச்சமூர்த்தி யையும் தொடர்ந்தார் சுந்தர ராமசாமி. இந்தத் தொடர்தல் அடுத்த தலைமுறைப் படைப்பாளி என்ற வகை யிலேயே நிகழ்ந்தது.

புதிய தலைமுறைப் படைப்பாளிக்கிருக்கவேண்டிய ஆர்வங்கொள்ளல்,அறிதல், இயங்குதல் என்றவாறாக சுந்தர ராமசாமி இயங்கினார். யாரையும் " போலச் செய்தலாகவோ மாதிரி பண்ணுதலாகவோ அல்ல.

முதல் தலைமுறைப் படைப்பாளிகளை எப்படி விளங்கிக்கொள்ள வேண்டும். எப்படி அவர்களைத் தொடர வேண்டுமென்பதற்கு ஒரு நல்ல அடையாளமாக சுந்தர ராமசாமியின் எழுத்து முறையையும் மதிப்பீட்டு முறையையும் காணலாம்.

புதுமைப்பித்தன், பாரதி, ப.ஜீவானந்தம், மு.தளையசிங்கம், ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, க.நா.சு.மௌனி என தன் கவனத்தை ஈர்த்த தமிழ்ப் படைப்பாளுமைகள்-சிந்தனையாளர்களைப் பற்றி தனியே விரிவாக எழுதியிருக்கிறார்.

ஒரு புளிய மரத்தின் கதை சுந்தர ராமசாமியை துலக்கமாக அன்றே அடையாளங்காட்டிய முக்கிய மான நாவல். இன்றைக்கும் அதன் வடிவமும் மொழிதலும் பொருளும் தமிழ் நாவற்பரப்பில் குறையாதே இருக்கின்றது. பிறகு அவர் எழுதிய ஜே.ஜே சில குறிப்புகள் தமிழ் நாவலுக்கு ஒரு புது முகத்தையளித்தது. ஜே.ஜே சில குறிப்புகளின் வருகையினால் தமிழ்ப் படைப்புலம் ஒருவகையில் அதிர்ச்சியடைந்தது. அந்தளவுக்கு அதன் புதுமையும் தீவிரமும் இருந்தது.

சுந்தர ராமசாமி பசுவய்யா என்ற பெயரில் கவிதைகளையும் எழுதினார். அவருடைய கவிதைகளின் முழுத் தொகுப்பு பசுவய்யா 107 கவிதைகள். தமிழ் நவீன கவிதையில் பசுவய்யாவின் இடம் தனியானது.அது பிரமின், நகுலன் போன்றோருக்கு நிகரானது.

பசுவய்யாவின் கவிதை இயக்கம் எழுத்து விலிருந்து தொடங்கியது. அது இளமையும் முதிர்ச்சி யுமுடையது.

தவிர சுந்தர ராமசாமியின் கட்டுரைகள் மிக முக்கியமான கவனத்திற்குரியவை. தமிழ்ப் பண்பாடு பற்றி, தமிழ் வாழ்க்கை பற்றி, தமிழ் அடையாளம் பற்றி, தமிழ் இலக்கியம் பற்றி, கல்வி பற்றி, தமிழ் மொழி பற்றிய அவருடைய சீரிய அக்கறை கள் அவரை ஒரு சமூகச் சிந்தனையாளராகவும் தெளிவுடையவராகவும் காட்டுகின்றன.

ஒருவகையில் சொன்னால், சுந்தர ராமசாமி ஒரு மென் கலகக்காரன். அவருடைய சுபாவம் அமைதியானதாக இருந்தாலும் படைப்புச் சிந்தனை, அவருடைய நோக்கு,தீர்மானம் என்பவற்றில் அவர் உறுதியும் தெளிவும் தீர்மானமும்-தீவிரமுமுடையவர்.

சுந்தர ராமசாமியின் சிந்தனையும் எழுத்தும் மிக விரிவு கொண்டவை. நவீனத்துவமானவை. தமிழின் விரிந்த தளத்தை அவர் அறிந்த விதமும் அதனை சர்வதேசத்தளத்தில் மேலும் விரிவுபடுத்தவேண்டும் என்று அவர் கொண்டிருந்த அக்கறையும் பெரிது. இதற்காக உள்ளும் வெளியுமாக அவர் தொடர்ந்து ஓயாது இயங்கியிருக்கிறார்.

சிற்றிதழ் பாரம்பரியத்தில் காலச் சுவடுவுக்கு ஓர் தனிப்பங்களிப்புண்டு. சுந்தர ராமசாமி முதல எட்டாண்டுகள் அதன் ஆசிரியராக இருந்தார். இலக்கிய உரையாடல், கல்விபற்றிய புதிய நோக்கு, விமர்சன மொழிதல் படைவீச்சு எல்லாவற்றிலும் அவர் காலச்சுவடுவை பகிர்ந்திருந்தார்.

சுந்தரராமசாமியின் படைப்புலகம் மனித வாழ்வின் உண்மைகளைக் கண்டறிவதாகவே இருந்தது. அதிகாரம் பொய்மைப்பண்பாடு என்பவற்றை அவர் தீவிரமாக மறுத்துவந்தார்.

தன் அறிதலையும் அனுபவத்தையும் விரித்த படியே இருந்த சுந்தர ராமசாமி தகழியை மலையாளத்திலிருந்து தமிழுக்கு அறிமுகப்படுத்தினார். அதேபோல ஆங்கிலம் வழியாக பல படைப்புகளை தமிழ்ப்படுத்தினார்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் பற்றிய தெளிவான புரிதலுடன் சுந்தர ராமசாமி இருந்தார். 1980 இன் நடுப்பகுதியில் தமிழகத்திலிருந்து வெளிவந்த தமிழீழ விடுதலைப்போராட்ட இலக்கிய இதழான புது யுகத்தில் குறிப்பிடக்கூடிய பங்களிப்பை அவர் செய்திருக்கிறார். தன் எழுத்துக்களாலும் அக்கறைகளாலும் ஈழத்தில் அவருக்கு படைப்பாளிகளிடத்திலும் வாசகர்களிடத்தும் பரிச்சயம் இருக்கிறது; உயரிய மதிப்பும் இருக்கிறது. புலம்பெயர்ந்து வருகின்ற ஈழத்தமிழர்களிடை யேயும் புலம்பெயர் இலக்கி யப் படைப்புகள் படைப்பாளி களிடையேயும் சுந்தர ராமசாமியைக் காணலாம்.

நெகிழ்வும் விரிவும் கொண்டு ஒரு சிறந்த மனிதராக அவர் தன் வாழ்க்கையில் இருந்திருக் கிறார். அது ஒரு தனி அடையாளம். தனி இயல்பு. இந்தச் சிறப்பே சுந்தர ராமசாமியை சகலரும் இயல்பாக நெருங்க உதவியது.

ஒரு இயக்கமாக தன்னளவில் இயங்கி வந்த பெரும்படைப்பாளியாகவே தன்னுடைய இறுதிக்காலம் வரை செயற்பட்ட சுந்தர ராமசாமியின் இழப்பு தமிழர் களுக்கு பேரிழப்பே. ஒரு அஞ்சலிக் குறிப்புடன் அது முடிந்து விடக் கூடிதல்ல. அதை எளிதில் எழுதிவிடவும் முடியாது.

மரணத்தின் வலியை நன்குணர்ந்தவர்கள் நாங்கள். கொத்துக்கொத்தாக ஒப்பற்ற வீரர்களையும் ஆற்றலாளர் களையும் ஆளுமையாளர் களையும் இழந்தவர்கள் நாம். அந்த அனுபவம் அசாதாரண மானது. அதில் ஒன்றாக சுந்தர ராமசாமியின் இழப்பும் சேர்ந்திருக்கிறது.

## படித்ததில் பிடித்தது

### ஒரு மரத்தைக் கொல்வது பற்றி

ஒரு மரத்தைக் கொல்ல நிறைய நேரம் ஆகிறது.
கத்தியின் எளிய குத்தலில் அது முடிந்துவிடுவதில்லை
அது பூமியை மெல்லத்தின்று
அதிலிருந்து மேலெழும்பி
அதன் இறுகிய மேற்பரப்பை உண்டு
சூரிய ஒளி காற்று தண்ணீர் என
பல்லாண்டுகள் உறிஞ்சி
தொழுநோயாளிக்குரிய தன் மறைவை நீக்கி
இலைகளை முளைக்கவிடுகிறது.

ஆக, வெட்டி துண்டு போடுவது
மட்டுமே பலித்து விடுவதில்லை
மிதமிஞ்சிய வலியால் முடிந்துபோய்விடுவதுமில்லை.
ரத்தம் பீறிடும் மரப்பட்டைப் புண்ணாறும்
மண்ணையொட்டி சுருண்ட பச்சைக்கிளைகள் முளைக்கும்
அந்தச் சிறிய கிளைகளை அதன் போக்கில் விட்டால்
அவை மீண்டும் பழைய அளவுக்கே விரியும்.
விடக்கூடாது,
வேரை அடியோடு பிடுங்கிவிட வேண்டும்
நங்கூரம் பாய்ச்சி நிற்கும் பூமியிலிருந்து.
பூமிக் குகையிலிருந்து கயிற்றால்
கட்டியிழுக்க வேண்டும்; பிடுங்கவேண்டும்.
துண்டித்து அல்லது முழுமையாகப் பிடுங்கி
மரத்தின் பலத்தை அம்பலப்படுத்தவேண்டும்.
பூமியின் உள்ளே பல்லாண்டுகள் மறைந்துகிடந்த உணர்வு மிகுந்த
வெண்மையும் ஈரமும் கொண்ட அந்த மூலசக்தி

கடைசியில் அந்தப்பொருள்
சூரிய ஒளியிலும் காற்றிலும் காய்ந்து
மூச்சுத்திணறி பழுப்பேறி இறுகி
முறுகி வாடி வதங்குகிறபோது
அதன் கதை முடிந்துபோகிறது.

**ஆங்கில மூலம்: ஜீவ்பட்டேல்**
**தமிழில்: பசுவய்யா.**

### வெடி

கொளுத்தி
நடுவீதியில் எறியப்பட்ட
நீண்ட வெடிச்சரம்
இன்னும் வெடிக்கவில்லை

ஆனால், என் மூளைக்குள்
அது வெடித்து பல விநாடி
ஆகிறது

ஒரு கவிதையை எழுதி
முடிக்கும் முன்பே
வெடி இன்னும் வெடிக்கவில்லை


கிடைக்கும் முன்பே ஒருத்தியின்
காதல் எனக்குக் கிடைத்திருக்கிறது

இதோ
வெடிச்சத்தம் வெடிக்கிறது

காத்து நின்றவர்கள்
களிப்போடு சிரிக்கிறார்கள்
அடுத்தவெடி வெடிக்கிறது
எனக்குள்

**தமிழில்: இ.றஜித்.**
**ஆங்கிலத்தில்: M.மார்க்வொன்**





# மகிந்தவும் ஜே.வி.பியும்

**தனது தலைவர்கள் பிரதானிகளுக்கு அதிகம் பாதுகாப்பான; உத்தரவாதமான ஒரு அரசியற் சூழல் உருவாகும் வரைக்கும் மகிந்தவுடன் ஒட்டிக்கொண்டிருப்பதே அவர்களுடைய திட்டம். அப்படியொரு காலம் கனிந்தவுடன் அவர்கள் எஸ்.எல்.எவ்.பியை உடைக்கும் வேலையை மேலும் முடுக்கிவிடக் கூடும். அதாவது ஜே.வி.பி அதிகம் உள்நோக்கங்களோடும் நீண்ட காலத்திட்டங்களோடும் இயங்கி வருகிறது.**

அண்மையில் கொழும்பு மைய ஊடகவியலாளர் ஒருவருடன் கதைத்துக்கொண்டிருந்தபோது கேட்டேன். அங்கே யாருக்கு சாதகமாக அலை வீசுகிறது என்று. அவர் சொன்னார் அப்படியொரு அலையே இன்னமும் எழவில்லை என்று. அங்கே திரு. ரணிலுக்கும் திரு. மகிந்தவுக்குமிடையில் போட்டி கடுமையாகக் காணப்படுவதால் யாருக்கு வெற்றிவரும் என்று உறுதியாக எதிர்வுகூற முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பி வழமைபோல பெருமெடுப்பில் ஒரு சுவரொட்டிப் புரட்சியை முன்னெடுத்துச்செல்வதாகக் கூறிய அவர் இரண்டு ஜே.வி.பி சுவரொட்டிகளின் நடுவே ஒரு மகிந்தவின் சுவரொட்டி ஒட்டப்பட்டு வருவதாகவும் சொன்னார். மகிந்தவின் பிரச்சாரக் கூட்டங்களில் 106 கூட்டங்களை ஒழுங்குசெய்யும் பொறுப்பு ஜே.வி.பியிடமே தரப்பட்டதாம். குறிப்பாக தலைநகர் கொழும்பில் நடந்த கூட்டம் கூட ஜே.வி.பியால் ஒழுங்குசெய்யப்பட்டது தானாம்.

ஜே.வி.பி தனது பிரச்சார மேடையில் என்ன சொல்லிவருகிறது என்று கேட்டேன். அவர் சொன்னார் ஜே.வி.பி மகிந்தவை ஸ்தாபிப்பதைவிடவும் தன்னையே ஸ்தாபித்து வருவதுபோல தோன்றுகிறது என்று.

மகிந்தவுக்கும் இது தெரியும் என்று மற்றொரு கொழும்பு மைய தமிழ் மாற்று ஊடகவியலாளர் கூறுகின்றார். மூடிய அறைக்குள் நிகழ்ந்த கட்சியின் உயர்மட்டச் சந்திப்பொன்றின்போது மகிந்த சொன்னாராம்... "இந்தப் பயல்களை எப்படிக் கையாள்வது என்று எனக்குத் தெரியும்" என்று. இந்தக்கதை ஜே.வி.பிக்கும் கசிந்துவிட்டதாம். இந்நிலையில் முழுக்க முழுக்க சந்தர்ப்பவாதக் கூட்டு ஒன்றுக்கு உடன்பட்டதன் மூலம் ஜே.வி.பி எதைச் சாதிக்க நினைக்கிறது?

இப்பத்தியில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு சொல்லப்பட்டதுபோல தனது மெய்யான பகைவர் மகிந்தவே என்பது ஜே.வி.பிக்கும் நன்கு தெரியும். மகிந்த தம்முடன் கூட்டுச் சேர முற்பட்டவேளை அவர்கள் முன்வைத்த பன்னிரெண்டு நிபந்தனைகள் ஒருவகையில் பரீட்சை போன்றவை என்றும் கூறப்படுகிறது. சர்வதேச உறவுகளை மதித்து நடக்கும் ஒரு அரசுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நிபந்தனைகள் அவை என்பது ஜே.வி.பிக்கும் நன்கு தெரியும். மகிந்த அவற்றுக்கு எவ்வளவு தூரம் உடன்படுகிறார் என்று சோதிப்பதே அவர்களுடைய நோக்கமாய் இருந்திருக்கிறது. ஆனால், மகிந்தவோ எந்தவிதமான தயக்கமும் இன்றி அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு விட்டார். இது ஜே.வி.பியிடம் ஏற்கனவே இருந்து வந்த சந்தேகத்தை உறுதிப்படுத்தி விட்டது. எந்தவிதத்திலும் யதார்த்தமற்ற தனது நிபந்தனைகளுக்கு மகிந்த எதுவித தயக்கமும் இன்றி ஒப்புக்கொண்டது என்பது தேர்தலை முன்னோக்கிய ஒரு நாடகமே என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

சனாதிபதித் தேர்தலில் மகிந்த வெல்வாராக இருந்தால் அதன்பின்பும் இந்தக்கூட்டு நீடித்திருக்கவேண்டும் என்று அவர் விரும்பியிருந்திருந்தால் அந்த நிபந்தனைகளிலுள்ள யதார்த்தமற்ற பகுதிகளைக் குறித்து அவர் ஜே.வி.பியோடு முரண்பட்டிருந்திருக்கவேண்டும். ஆனால், மகிந்த அப்படியேதும் செய்யவில்லை. எனவே சனாதிபதித் தேர்தலில் வெல்வது அதாவது ரணிலைத் தோற்கடிப்பது என்ற ஒரே இலட்சியத்தோடுதான் அவர் தம்முடன் இணைகிறாரே தவிர, தமது நட்பு நீடித்திருக்கக்கூடிய ஒரு யதார்த்தபூர்வமான உடன்பாட்டுக்குவரும் நோக்கம் ஏதும் அவரிடம் இல்லை என்பது ஜே.வி.பிக்குத் தெரிந்துவிட்டது.

எனவே மகிந்தவுடன் சேர்ந்து தானும் நடிப்பது என்று ஜே.வி.பி முடிவெடுத்து விட்டது. இது விசயத்தில் அவர்களிடம் மிகத் தெளிவான ஒரு நீண்டகால நோக்கம் இருப்பதாக அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அந்த நீண்டகால அடிப்படையிலான நோக்கம் எது?

கடந்த தேர்தலில் அவர்கள் பெற்ற வெற்றி எனப்படுவது எஸ்.எல்.எவ்.பியின் வாக்குத்தளத்தை உடைத்துப் பெறப்பட்டதே. எனவே இம்முறை மகிந்தவுடன் சேர்வதன் மூலம் அந்த வெற்றிகளை அவற்றின் அடுத்தகட்டத்திற்கும் நகர்த்துவது என்று ஜே.வி.பி முடிவெடுத்துவிட்டது. அதன்படி மகிந்தவுடன் அவர்கள் நெருங்கிவர நெருங்கிவர திருமதி.சந்திகாவுக்கும் மகிந்தவுக்குமிடையிலான முரண்பாடுகள் அதிகரித்துக்கொண்டே செல்லும். பண்டாரநாயக்காக்களுக்கும் ராஜபக்ஷக்களுக்கும் இடையிலான இந்த வம்சப்போட்டியில் ராஜபக்ஷவின் பக்கம் நிற்பதன் மூலம் எஸ்.எல்.எவ்.பியை இரண்டாக உடைத்து இப்பொழுது அது வகித்துவரும் இரண்டாவது பெரிய கட்சி என்ற அதன் ஸ்தானத்தையும் உடைத்து அந்த ஸ்தானத்தை தான் அபகரிப்பதே ஜே.வி.பியின் இறுதியிலக்கு. இந்த இலக்கை நோக்கியே அது எல்லாக் காய்களையும் நகர்த்திவருகிறது.

தற்பொழுது மகிந்தவுக்காக கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதன் ஊடாக அவர்கள் எஸ்.எல்.எவ்.பியின் கட்சிக்கட்டமைப்பின் ஆக அடிமட்டம்வரை ஊடுருவத் தொடங்கிவிட்டார்கள். இந்தத் தேர்தலோடு அவர்கள் எஸ்.எல்.எவ்.பியின் அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் தமக்கென பலமான ஒரு தளத்தை ஸ்தாபிப்பதில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகளைப் பெறக்கூடும் என்று அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஜே.வி.பியின் இந்த நீண்டகால நோக்கிலான மூலோபாயத்தின்படி வரும் தேர்தலில் மகிந்த வெல்லக்கூடாது. ஏனெனில் அவர் வென்றால் அதிலிருந்து தொடங்கி ராஜபக்ஷக்களின் தலைமைத்துவத்தின் கீழ் எஸ்.எல்.எவ்.பி பலமடையத் தொடங்கிவிடும். அதாவது எஸ்.எல்.எவ்.பி உடனடியாகப் பாரதூரமான அளவுக்கு உடையாது. அது மட்டுமல்ல ஜே.வி.பியின் பிரதான கோட்டையான றுகுணுவில் (இது மகிந்தவின் சொந்தக்கோட்டையும் கூட) மகிந்த அசைக்கமுடியாதபடி பலப்பட்டுவிடக்கூடும். இதுவும் ஜே.வி.பிக்கு நல்லதல்ல. எனவே மகிந்த வெல்வது இத்தகையதொரு நோக்குநிலையில் ஜே.வி.பிக்குக் கூடாது.

ஆனால், அதேசமயம் ரணில் வெல்வாராயிருந்தால் வேறொரு ஆபத்து உண்டு. ஜே.வி.பி காரர்களின் பழைய வழக்குகள் யாவும் உயிரூட்டப்பட்டு சில சமயம் ஜே.வி.பி தலைவர்கள் சிறைக்குள் போகவேண்டியும் வரலாம். சோமவன்ச அமரசிங்க மறுபடியும் லண்டனில் தஞ்சம் கோரவேண்டியும் வரலாம். அல்லது சில சமயம், எஸ்.எல்.எவ்.பியை உடைப்பதற்கு ஜே.வி.பி தேவை என்று ரணில் கருதுவாராயிருந்தால் அவர் ஜே.வி.பியில் கைவைக்காமல் விடக்கூடும் என்று ஒரு அபிப்பிராயமும் உண்டு.

எனவே தேர்தல் முடிவு எதுவாயினும் ஜே.வி.பியை பொறுத்தவரை தனது பிரதானிகளையும் பாதுகாக்கவேண்டும். அதேசமயம் கட்சியை இரண்டாவது பெரிய கட்சி என்ற நிலைக்கு உயர்த்தவும் வேண்டும். இதை நிதானமாகவும், அவசரப்படாமலும் செய்யவேண்டும்.

அப்படிச் செய்வதற்கான ஒரு மூலோபாயம் ஜே.வி.பியிடம் உண்டு என்றே தோன்றுகிறது. இதன்படி இப்போதைக்கு மகிந்த வெல்லட்டும் அதே சமயம் மகிந்தவுடன் நிற்பதன் மூலம் பண்டாரநாயக்காக்களை கட்சிக்குள் பலவீனப்படுத்தி கட்சியை ஒப்பீட்டளவில் நலிவடையச் செய்யலாமா என்று முயன்றுபார்ப்பது என்று ஜே.வி.பி தீர்மானித்து விட்டது.

தனது தலைவர்கள் பிரதானிகளுக்கு அதிகம் பாதுகாப்பான; உத்தரவாதமான ஒரு அரசியற் சூழல் உருவாகும் வரைக்கும் மகிந்தவுடன் ஒட்டிக்கொண்டிருப்பதே அவர்களுடைய திட்டம். அப்படியொரு காலம் கனிந்தவுடன் அவர்கள் எஸ்.எல்.எவ்.பியை உடைக்கும் வேலையை மேலும் முடுக்கிவிடக் கூடும். அதாவது ஜே.வி.பி அதிகம் உள்நோக்கங்களோடும் நீண்ட காலத்திட்டங்களோடும் இயங்கி வருகிறது. தனது இரண்டு கிளர்ச்சிகளின்போதும் அவசரப்பட்டு தனது பிரதானிகளையும் போராளிகளையும் பலிகொடுத்ததுபோல இனியும் பலிகொடுக்க அது தயாரில்லை. தனது பிரதானிகளைப் பாதுகாத்தபடியே தனது இறுதி இலக்குகளைநோக்கி ஆக்கக்கூடிய முன்னெச்சரிக்கையோடு அடியெடுத்துவைக்கத் தேவையான முயற்சியும் அனுபவமும் இப்பொழுது அவர்களிடம் இருப்பதாகவே தோன்றுகிறது.

நிலாந்தன்

ஆனால் இந்தப்பக்குவங்கள் அனைத்தையும் போட்டுடைக்கும் ஓர் இடம் இருக்கிறது. அதுதான் தமிழின எதிர்ப்பு. தனது தலைவர்கள் பிரதானிகளை பாதுகாப்பதற்காகவும் தனது கட்சியை இரண்டாவது பெரிய கட்சி என்ற நிலைக்கு உயர்த்துவதற்காகவும் அவர்கள் பலியிட முயல்வது தமிழர்களையே. தோல்வியுற்ற தமது இரண்டு கிளர்ச்சிகளைப்போலவே தமிழீழ விடுதலைப்போராட்டத்தையும் யுத்தம் ஒன்றின்மூலம் நசுக்கிவிடமுடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஒரு யுத்த களத்தைத் தவிர வேறெங்கும் சோதித்துப் பார்க்கமுடியாத ஒரு நம்பிக்கை இது என்பதிலிருந்தே இலங்கைத்தீவின் இனிவரப்போகும் எல்லாத்துயரங்களும் தொடங்கப்போகின்றன.

# நறுக்கென...

## நழுவினாரா... நழுவவிடப்பட்டாரா..?



ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்குள் நுழைந்தவரிடமிருந்து கைத்துப்பாக்கி யொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

ஆனால் துப்பாக்கியைக் கொண்டுவந்தவர் தப்பிவிட்டார். இதனை விபரிக்கும் பொலிசார் கூறும் தகவல் இதுதான்.

பிரசாரக்கூட்டத்துக்கு வந்தவர்களை பரிசோதித்த போது ஒருவரின் சேட் பொக்கற்றுக்குள் ஒரு பொருள் இருந்தது. அது என்ன என்று வினவியபோது அதுவொரு "பேனை எனக் குறிப்பிட்ட நபர் தெரிவித்தார். ஆனால் அதில் சந்தேகம் கொண்ட பொலிசார் அந்தப் பொருளை இன்னுமொரு பொலிசாரிடம் கொடுத்து சோதித்தபோது அதுவொரு கைத்துப்பாக்கி என்பது தெரியவந்தது. ஆனால், இந் ..றுகிய நேரத்துக்குள் அதனை வைத்திருந்த நபர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த. கூட்டத்துக்குள் நழுவிவிட்டார் எனப் பொலிசார் கூறியுள்ளனர்.

உண்மையில் இந்தத் துப்பாக்கியைக் கொண்டுவந்தவர் நழுவினாரா நழுவ விடப்பட்டாரா என்பதில்தான் பிரச்சினையே உள்ளது.

ஏனெனில், அந்தக் கைத்துப்பாக்கியைக்கொண்டு வந்தவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவராகும். இதனால்தான் இவர் நழுவவிடப்பட்டிருக்கிறார் என்ற சந்தேகம் எழுகிறது.

உண்மையில் இந்தக் கைத்துப்பாக்கியைக் கொண்டு வந்தவர் ஒரு தமிழராக இருந்திருந்தால் அவர் நழுவவிடப்பட்டிருக்கவும் மாட்டார். அத்தோடு சுற்றம் சூழ இருந்த பல தமிழர்களும் கைது செய்யப்பட்டிருப்பார்கள்.

ஆனால், இவர் ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் நழுவவிடப்பட்டிருப்பதன் மூலம் ஒரு உண்மை மறைக்கப்பட்டிருக்கிறது.

அதாவது பல தாக்குதல்களுக்கும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கும் பெரும்பான்மை இனத்திலிருக்கும் சில கட்சிகளும் குழுக்களும்கூடக் காரணமாக இருந்திருக்கின்றன, இருக்கின்றன. ஆனால் இவை எல்லாவற்றையும் தமிழர்கள் மீது சுமத்தி அதிலிருந்து அரசியல் இலாபம் தேடியே வந்துள்ளனர். இதனைத்தான் இந்தச் சம்பவமும் உணர்த்துகின்றது.

## மகிந்தவின் சிந்தனையா..? இனவாதிகளின் சிந்தனையா..?



பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனமானது தேசியத்துவ அடிப்படையிலானது என ஜே.வி.பி யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக பல்வேறு விதமான கருத்துக்கள் உள்ளன. முதலாவது மகிந்தராஜபக்ஷ பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிறிலங்கா சுதந்திரக் கடசியின் கொள்கைகளை இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிப்படுத்தத் தவறிவிட்டது என சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே விமர்சிக்கப்படுகிறது.

அடுத்ததாக மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனமானது அவர் ஏற்றுக்கொண்ட ஜே.வி.பியின் நிபந்தனைகளையும் ஹெல உறுமயவின் நிபந்தனைகளையும் உள்ளடக்கி அந்தக் கட்சிகளின் கொள்கைகளைத்தான் வெளிப்படுத்துகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில் மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நோக்கும்போது அது அப்படியே தெரிகிறது.

பெயர் என்னவோ மகிந்தவின் சிந்தனையாக இருந்தபோதிலும் அது இனவாதிகளின் சிந்தனையாகவே வெளிப்பட்டு நிற்கின்றது.

இனப்பிரச்சினை தொடர்பாகவும், வெளிநாட்டு உறவுகள் தொடர்பாகவும் பொருளாதார மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பாகக் கூட இந்தத் தேர்தல் விஞ்ஞாபனமானது இனவாத ரீதியாகச் சிந்திக்கும் தரப்பால் மட்டுமே இப்படியொரு தேர்தல் விஞ்ஞாபனமானது தயாரிக்க முடியும் என்று கூறக்கூடிய அளவுக்கு மகிந்தவின் சிந்தனை என்ற இந்த இனவாதச் சிந்தனை காணப்படுகிறது.

நிலைமை இப்படியிருக்க இந்தத் தேர்தல் விஞ்ஞாபனமானது தேசியத்துவ அடிப்படையிலானது என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவிப்பதானது நகைப்பிற்குரியதாகவே உள்ளது.

ஏனெனில் இந்த இனவாதக் கூட்டத்தின் சிந்தனைகளும், செயல்களும் நடைமுறைக்கும் யதார்த்தத்துக்கும் பொருந்தாத வகையிலேயே காணப்படுகிறது.

இத்தகையதொரு நிலையில் இவர்கள் கூறும் தேசியத்துவம் என்பது எது. இதற்குக் கொடுக்கும் இவர்களின் விளக்கம் என்பது அடிமைப் படுத்தல், மேலாண்மைவாதம், புறக்கணிப்பு ஏனைய இனங்களையும், மதங்க்ளையும் மதித்து நடக்காமல் விடுதல் என்பனவா என கேட்கத்தோன்றுகிறது.

ஏனெனில் இவர்கள் கூறும் மகிந்தவின் சிந்தனை என்ற இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நியாயமான தேசியத்துவ சிந்தனைகள் எதனையும் பிரதிபலிக்க வில்லை என்பது சாதாரண பாமர மக்களுக்கே விளங்கும்.

இந்த நிலையில் விமல் வீரவன்ச தன்னையும் முட்டாளாக்கி நாட்டு மக்களையும் முட்டாளாக்க முனைகிறார் என்பது போலவே உள்ளது.

## இது என்ன பிரச்சாரம்?



சும்மா சொல்லக்கூடாது சனாதிபதி சந்திரிகாவும் அநுரா பண்டாரநாயக்காவும் ஐக்கிய தேசியக் கட்சிக்காக வித்தியாசமான முறையில் தேர்தல் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

அதாவது மகிந்த ராஜபக்ஷவுக்கு தமது ஆதரவு இல்லை என்பதை எல்லா சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளாது புறக்கணித்ததன் மூலம் வெளிப்படுத்தியாயிற்று. அதாவது மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராகத் தேர்தல் பிரச்சாரங்களைச் செய்ய முடியாது. ஏனெனில் தமது கட்சியின் வேட்பாளர் அவர் ஆதலால் அதனை செய்யமுடியாது.

ஆனால் மகிந்தராஜபக்ஷவோடு கூட்டுச் சேர்ந்திருப்பவர்களை விமர்சிப்பதன் மூலம் இதனை செய்யலாம் என்ற முடிவுக்கு சனாதிபதி சந்திரிகாவும் அவரது தம்பியாருமான அநுரா பண்டாரநாயக்காவும் தீர்மானித்திருக்கிறார்கள் போலுள்ளது.

ஆதலால்தான் இப்போது இவர்கள் ஜே.வி.பியையும் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்கவையும் கடுமையாக விமர்சித்து விருகின்றனர்.

போதாக்குறைக்கு ஒரு பிரச்சாரக்கூட்டத்தில் சோமவன்ச அமரசிங்கவும் தத்தாபித்தா என்று சிறிலங்கா இராணுவத்தின் பலவீனங்களை சுட்டிக்காட்டி பேசக் கூடாத முறையில் பேசிவிட ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமன்றி சந்திரிகாவும் அநுராவும் அதை வைத்தே எதிர்ப்பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

அண்மையில் சோமவன்சவைப்பற்றி அநுரா பண்டாரநாயக்கா குறிப்பிடும் போது "இராணுவ வீரரைப்போன்று கருத்துக்களைக் கூறுபவர்கள் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரே நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை கட்டாயமாக ஏற்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அநுரா பண்டாரநாயக்கா கூறுவருவது என்ன?

ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஜே.வி.பியின் தலைவர் கைது செய்யப்படுவார் என்பதா?

இரண்டு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஒரு குற்றவாளி என்பதா?

எதுவாக இருந்தாலும் சோமவன்ச அமரசிங்க கைது செய்யப்பட வேண்டியவர். ஆனால் அக்கா சந்திரிகாவின் காலத்தில் சுயநல அரசியல் இலாபங்களுக்காக கைது செய்யப்படாமல் இருக்கிறார் என்பதையும் ஒரு குற்றவாளியின் தயவில் தான் ஒரு குறிப்பிட்டகாலம் ஆட்சியை அக்கா கொண்டு செல்லவேண்டியிருந்தது என்பதையும் அல்லவா தம்பி அநுரா சொல்லாமற் சொல்லியிருக்கிறார்.

இதைத்தான் சொல்வது வாயடக்கம் வேண்டும் என்று.

## ரணிலின் உண்மை முகம்..!



தேர்தல் திகதி நெருங்கவும் மகிந்தவின் இனவாதம் உச்சத்துக்குப் போகத் தொடங்கவும் ரணிலின் உண்மையான முகம் அம்பலத்துக்கு வரத் தொடங்கியுள்ளது

மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனமே இனவாதத்தின் எழுத்து வடிவம் என்பதுபோல வெளிப்பட்டு நிற்கும் நிலையில் இனியும் எத்தனை நாளைக்குத்தான் நானும் ஒரு கனவான் அரசியல் நாடகத்தை நடிக்க முடியும் என ரணில் நினைத்து விட்டாரே தெரியவில்லை.

சமாதானப் பிரியராக தன்னைக் காட்டிக்கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு இடத்திலும் இன்னமும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகப் பேசுவேன் என்றோ, சமாதான முயற்சி எந்த நிலைப்பாட்டிலிருந்து முன்னெடுக்கப்படும் என்றோ தெளிவுபடுத்தவில்லை.

கழுவும் மீனில் நழுவும் மீனாக சமாதான முயற்சி தொடர்பில் தெளிவான நிலைப்பாடு எடுக்காத ரணில் விக்கிரமசிங்க அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரம் ஒன்றில் " தமிழர் பிரச்சினை தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை தெளிவாகத் தெரிவிக்கவில்லையெனில் புலிகள் தனி நாட்டை பெற்றுக்கொள்ளும் நிலை உருவாகும் என்று தெரிவித்துள்ளார்"

உண்மையில், ரணில் விக்கிரமசிங்க, மகிந்தராஜபக்ஷ தெளிவான நிலைப்பாட்டை தெரிவிக்கவில்லையென்று குற்றம் சுமத்துவதற்கு எந்தத் தகுதியும் அற்றவர், ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க வெறும் வார்த்தை யாலங்களால் சமாதான முயற்சியில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பேசிவருகிறாரேயொழிய அவர் வேறு எந்த வகையிலும் திடமான திட்டங்கள் எதுவும் முன்வைக்கவில்லை என்பதே உண்மை.

ரணில் விக்கிரமசிங்கவின் ஒரே நோக்கம் எப்படியாவது சனாதிபதி பதவியை கைப்பற்றிவிடவேண்டும் என்பதேயாகும்.

ரணில் விக்கிரம சிங்கவுக்கு இலங்கையின் பொருளாதார திட்டம் தொடர்பாக ஒரு தெளிவான கொள்கை இருக்கிறதேயொழிய அதைவிட முக்கிய பிரச்சினையாக இருக்கும் தமிழர் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு என்ன என்பதில் தெளிவான நிலைப்பாடு இல்லை.

இதிலும் பொருளாதார முன்னேற்றம் தொடர்பாகவும் அது தொடர்பான கனவையும் காணும் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டம் கூட இலங்கைக்கேயுரிய தனித்துவமான பொருளாதார நிலைப்பாடுகளல்ல. பதிலாக தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் பயனாக விளைந்திருக்கும் சூழலை பயன்படுத்தி உலக நாடுகள் வழங்கப்போகும் உதவிகளின் அடைப்படையில் உருவாக்க முயலும் பொருளாதார கனவுகளேயன்றி வேறெதுவும் கிடையாது.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க உண்மையான தனது முகத்தை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளார்.

இதுவொருவகையில் ரணில் விக்கிரமசிங்க இனவாதத்துக்கு அடிபணிபவர் என்பதையே காட்டுகிறது.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் என்ற தமிழ் பழமொழியில் உண்மையில்லாமல் இல்லை. இதனையே ரணிலின் தேர்தல் பேச்சுகள் வெளிப்படுத்துகின்றன.

வேழினி

# யாழ். கோட்டையில் றோகண விஜேவீர

அன்பரசு

ஆனையிறவு இராணுவ முகாமைப்போல் யாழ் கோட்டையும் ஈழத்தமிழரின் அடிமைச் சின்னங்களில் ஒன்றாகும். இரண்டையும் ஒல்லாந்தர்கள் கட்டினார்கள். ஒன்றை எமதாக்கியுள்ளோம். அடுத்தது சில காலம் எம்வசம் இருந்தபின் மீண்டும் கை நழுவிப்போய்விட்டது.

வட பகுதியின் மிகப் பெரியதும் பாதுகாப்பு ஒழுங்குகளில் உயர்ந்ததுமான சிறைச்சாலையைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் யாழ் கோட்டைக்குள் அமைத்தார்கள். 1971மார்ச் 16ஆம் நாள் இராணுவ டிறக் வாகனத்தில் றோகண விஜேவீர கொ[illegible] மகசீன் சிறைச்சாலையில் வைத்து ஏற்[illegible]பட்டார். அடுத்தநாள் அவர் யாழ் கோட்டைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

முதலில் அவர் சிறைச்சாலையின் "பீ1" பகுதியினுள் ஒரு கூட்டுக்குள் அடைக்கப்பட்டார். ஒருசில நாட்களில் அவர் "எப்" பகுதியிலுள்ள இன்னுமோர் கூட்டிற்குள் மாற்றப்பட்டார். மே மாத முதல் வாரத்தில் "பீ 2" பகுதியிலுள்ள தனிமைச் சிறைக் கூட்டிற்கு மாற்றப்பட்டார். பிற கைதிகளோடு தொடர்பு வைக்க முடியாத



முறையில் அவர் இங்கு அடைக்கப்பட்டார்.

இதற்கிடையில் சிறிமாவோவின் நெருங்கிய உறவினனும் அரசை இயக்கியவர் என்று கருதப்படுபவருமாகிய நீதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கிரிமினல் நீதி விசாரணைச் சட்டம் (CRIMINAL JUSTICE COMMISSION ACT OF 1971) என்ற மிகவும் சக்திவாய்ந்த சட்டத்தை ஜே.வி.பி அமைப்பையும் அதன் தலைவரையும் நசுக்குவதற்கும் தண்டிப்பதற்கும் ஏதுவாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அடுத்ததாக இயன் விக்கிரமநாயக்கா என்ற பிரபல சட்டத்தரணியை றோகண விஜேவீரவை விசாரிப்பதற்காக யாழ் சிறைச்சாலைக்கு அனுப்பினார். இயன் விக்கிரமநாயக்கா அப்போது ஊழல் தடுப்பு ஆணையராகவும் பதவி வகித்தார் என்பதோடு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் தனிப்பட்ட நண்பருமாவார்.

இயன் விக்கிரமநாயக்கா தலைமையிலான விசாரணைக்குழு யாழ் வரமுன்பே மே 12,1971ஆம் ஆண்டு நான்குபொலிஸ் அதிகாரிகள் றோகண விஜேவீரவை யாழ்.சிறைச்சாலையில் விசாரணைசெய்தனர். இன்ஸ்பெக்டர்கள் சேர்னிவிஜயசூரிய, பீ.ஜெகநாதன், உபாலி சௌவிரத்தின ஆகியோருடன் சப்-இன்ஸ்பெக்டர் சமரசிங்கவும் விசாரணைக்கு வந்தனர்.

இவர்கள் அனைவரும் விசேட பொலிஸ் பிரிவைச் சேர்தவர்கள். இவர்கள் விஜேவீர மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர். யாவும் பதிவில் உள்ளன. 8,000 உறுப்பினர்களும் அவருடைய குடும்பத்தினரும் கொல்லப்பட்டுவிட்டதாகவும் அவர்கள் விஜேவீரவுக்குக் கூறினர். இன்ஸ்பெக்டர் ஜெகநாதன் தனது கைத்துப்பாக்கியை விஜேவீரவின் தலையைக் குறிபார்த்து சுடப்போவதாக மிரட்டினார்.

யாழ். சிறைச்சாலையின் பொறுப்பதிகாரியாக தங்கராஜா என்பவர் அப்போது பதவி வகித்தார் மே.17,1971ஆம் ஆண்டு றோகண விஜேவீரவை மேலதிக விசாரணைக்காக விசேட பொலிஸ் விசாரணைக்குழுவினிடம் தங்கராஜா கையளித்தார். இக்குழுவில் இன்ஸ்பெக்டர்கள் சேர்னிவிஜயசூரிய, ஜெகநாதன், இராமநாதன் ஆகியோர் இருந்தனர். யாழ் கோட்டைக்குள் தனித்துக் காணப்பட்ட ஒரு பொலிஸ் முகாமுக்கு விஜேவீரவை அவர்கள் ஒரு ஜீப் வண்டியில் ஏற்றிச் சென்றனர். அங்குவைத்து இன்ஸ்பெக்டர் ஜெகநாதன் விஜேவீரவைக் கழுத்திலும், நெஞ்சிலும் தாக்கியதாகப் பின்பு விஜேவீர முறைப்பாடு செய்தார். "நீ உறுப்பினர்களுக்கு வகுப்பு நடத்திய காலம் முடிந்துவிட்டது. இப்போ நாங்கள் வகுப்பெடுக்க வந்திருக்கிறோம்" என்று ஜெகநாதன் கூறியதாக விஜேவீரவின் முறைப்பாடு தெரிவிக்கிறது.

யாழ் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பின்பும் தனது அமைப்பினருடன் றோகண விஜேவீர தொடர்ச்சியான இரகசியத் தொடர்புகளைப் பேணிவந்தார். இதற்கான ஒத்துழைப்பை சிறைக் காவலர் வழங்கினார்களா தெரியவில்லை. வட-கிழக்கு முற்போக்கு இளைஞர் அமைப்புகளுடன் ஜே.வி.பிக்கு அப்போது தொடர்பு இருந்தது. 1970 இன் இறுதிப் பகுதியில் குண்டுகளும் துவக்குகளும் திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் அனுப்பப்பட்டன. ஜே.வி.பி உறுப்பினர்கள் குண்டுதயாரிக்கும் பயிற்சி வகுப்புக்களை திருகோணமலையில் நடத்தினார்கள்.

நாடு தழுவிய வேறு பல இடங்களில் இப்பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. அதேபோல குண்டுகளும் துவக்குகளும் பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டன. வட-கிழக்கு முற்போக்கு இளைஞர்களுடன் ஜே.வி.பி நெருக்கமான உறவைப் பேணுவதற்கு இரு காரணங்கள் உண்டு. முழுத் தீவையும் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு பரஸ்பர உதவிகள் தேவைப்பட்டன. அவர்களோடு இணைந்து தீவு தழுவிய சோசலிச சமுதாயத்தை உருவாக்கும்போது மொழிப்பிரச்சினை மறைந்துவிடும்.

குடியேற்றம் சம்பந்தமாகவும் றோகண விஜேவீர இறுக்கமான கருத்துக்கொண்டிருந்தார். சோழர் ஆட்சிக்கு முன்பு வட-கிழக்கு உஷ்ண வலயம் சிங்கள மக்களின் தாயகமாக இருந்ததாகவும் அவர்களைச் சோழர்கள் உட்பகுதிக்கு துரத்திவிட்டதாகவும் தனது பேருரை ஒன்றில் றோகண குறிப்பிடுகிறார். சிங்களக் குடியேற்றத்தை வட-கிழக்கில் நிறைவேற்றும்போது வரலாற்றுத் தவறு திருத்தப்படும் என்பது அவருடைய சித்தாந்தம்.

வட-கிழக்கு வாழ் மக்களை அவர் வெறுத்தாரோ தெரியவில்லை. ஆனால், மலையக மக்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் அங்கமாக அவர் மேடைதோறும் பகிரங்கமாக வர்ணித்தார். சீன கம்யூனிஸ்ற் தலைவர் சண்முகதாசனை மலையக தமிழர்களுக்கு ஆதரவானவர். இதை விரும்பாத விஜேவீர சண்முகதாசன் ஒரு இனவாதி என்று குற்றஞ்சுமத்தினார். எனினும் தனிப்பட்ட மலையக இளைஞர்களை விஜேவீர தன்னோடு இணைத்துக்கொண்டு உயர் பதவிகளும் வழங்கினார்.இன்றைய இராமலிங்கம் சந்திரசேகரன் நாடாளுமன்ற உறுப்பினர் இப்பாரம்பரியத்தில் தோன்றியவரே. இந்திய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றவேண்டும் என்ற ஆதங்கம் விஜேவீரவின் பேருரைகளில் தெளிவாகத் தெரிகிறது.

புளொட் அமைப்பிற்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான நெருக்கம் 1988வரை தொடர்ந்தது. ஆயுதப்பரிமாற்றம், கண்ணிவெடித் தொழில்நுட்பம், இராணுவப்பயிற்சி என்ற மூன்று துறைகளில் இரு பக்க உறவுகள் காணப்பட்டன. நூறு வரையிலான லொறி எஞ்சின்களை ஜே.வி.பியினர் புளொட்டுக்கு வழங்கினர். கடற் போக்குவரத்தில் படகுகளில் இவை பொருத்தப்பட்டன. வவுனியா கிளிநொச்சி காடுகளில் ஜே.வி.பி போராளிகளுக்கு புளொட் உறுப்பினர்கள் ஆயுதப் பயிற்சி வழங்கினார்கள். தெற்கிலுள்ள காடுகளில் பயிற்சி முகாம்களை நிறுவியதோடு ஜே.வி.பி இளைஞர்களுக்கு அங்கு புளொட் அமைப்பினர் போர்ப்பயிற்சி அளித்தனர்.

ஜே.வி.பியினருக்கு கண்ணிவெடி தொழில்நுட்பத்தை புளொட் வழங்கியது. புளொட் அமைப்பினரே பொலிசாருக்கு எதிரான கண்ணி வெடிகளை ஜே.வி.பியின் ஒத்துழைப்போடு வெடிக்கவைத்தனர். ஜே.வி.பி பொலிற்பியூறோ உறுப்பினர் உபதிஸ்ஸ கமநாயக்காவும் புளொட் மாணிக்கதாசனும் சிங்களச் சகோதரிகளின் பிள்ளைகள் என்பது இன்னுமோர் விடயம். கொழும்பில் வாழ்ந்த ஷேர்லிகந்தப்பா என்ற என்.ஜியோ இயக்குநர் புளொட் அமைப்புக்கு ஆதரவு வழங்கியதோடு ஜே.வி.பி-புளொட் இணைப்பை ஊக்குவித்தார்.

**புளோட் அமைப்பிற்கும் ஜே.வீ.பிக்கும் இடையிலான நெருக்கம் 1988வரை தொடர்ந்தது. ஆயுதப்பரிமாற்றம், கண்ணி வெடித்தொழில்நுட்பம், இராணுவப்பயிற்சி என்ற மூன்று துறைகளில் இரு பக்க உறவுகள் காணப்பட்டன. நூறு வரையிலான லொறி எஞ்சின்களை ஜே.வீ.பீயினர் புளொட்டுக்கு வழங்கினர். கடற் போக்குவரத்தில் படகுகளில் இவை பொருத்தப்பட்டன. வவுனியா, கிளிநொச்சி காடுகளுக்கு ஜே.வீ.பீபோராளிகளுக்கு புளொட் உறுப்பினர்கள் ஆயுதப் பயிற்சி வழங்கினார்கள். தெற்கிலுள்ள காடுகளில் பயிற்சி முகாம்களை நிறுவியதோடு ஜே.வீ.பீ இளைஞர்களுக்கு அங்கு புளொட் அமைப்பினர் போர்ப்பயிற்சி அளித்தனர்.**

500 போராளிகளோடு யாழ்ப்பாணம் வந்து தன்னை மீட்டுச் செல்லுமாறு றோகண விஜேவீர விடுத்த அழைப்புக்கு அமைவாக நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. சீன கம்யூனிசவாதியும் சில காலம் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த எஸ்.டி.பண்டாரநாயக்கா இதற்கான திட்டங்களை முன்நின்று உருவாக்கினார். அவர் தலையிட முன்பே ஒரு சிறைக்காவலர், ஒரு கடற்படை உறுப்பினர், ஒரு முன்னாள் இராணுவப்படையாள் ஆகியோரை ஜே.வி.பியினர் அணுகினர். இவர்களுடைய முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதன் பின்பே எஸ்.டி பண்டாரநாயக்கா களத்தில் இறங்கினார். இவர் பலமுறை கிளிநொச்சி, விசுவமடு ஆகிய குடியேற்றத்திட்டங்களுக்கு சீனக் கம்யூனிச கட்சி சார்பில் பரப்புரை செய்வதற்காக வந்துசென்றவர். ஜே.வி.பியின் கோரிக்கையை அடுத்து அவர் யாழ்ப்பாணம் பயணமானார். அங்கு பாஸ்கரன் என்ற தமிழ் வாலிபரைச் சந்தித்தார். பாஸ்கரன் இன்னுமொரு தமிழரை உதவிக்கு அழைத்தார். மீட்புக்குழுவொன்று உருவாக்கப்பட்டது. அவர்கள் செயற்படத் தொடங்கினர்.

ஜே.வி.பி அனுதாபியான ஒரு சுங்க இலாக்கா அதிகாரியுடன் மஞ்சு என்ற ஜே.வி.பி உறுப்பினரும் வேறு சிலரும் கோட்டையைச் சுற்றிப்பார்த்தார்கள். கடலேரிப் பக்கமாக பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்படவில்லை என்பதைக் கண்டறிந்தனர். சிறைச்சாலையைத் தாக்குவதற்கு முன்பு அதற்கு அண்மையிலுள்ள யாழ் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

தெற்கிலிருந்து வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட 500 போராளிகள் வரவில்லை. பதிலாக ஈபேர்ட்சில்வா பஸ் கொம்பனிக்குச் சொந்தமான ஒரு பேருந்தில் மாத்திரம் போராளிகள் வந்து சேர்ந்தார்கள். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் மீதான ஜே.வி.பி தாக்குதல் படுதோல்வியடைந்தது. பொலிஸ் தலைமைச் செயலகம் யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குத் தொலைபேசி மூலம் தாக்குதல் நடக்கப்போவதை முன்கூட்டியே அறிவிப்புச் செய்துவிட்டது. ஏப்ரல் ஐந்தாம் நாள் அதிகாலையில் குண்டுகள் சகிதமாக முப்பது ஜே.வி.பியினர் யாழ் பொலிஸ்நிலையம் மீது தாக்குதல் தொடுத்தனர். யாழ்பொலிஸ் நிலையத்தில் அப்போது ஒரு பொறுப்பதிகாரியும் ஒன்பது பொலிசாரும் கடமையில் இருந்தனர். தாக்குதல் நடத்தியவர்களில் பலர் கைது செய்யப்பட்டனர். ஒருசிலர் கொல்லப்பட்டனர்.

யாழ் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடந்துகொண்டிருக்கும் அதேவேளையில் யாழ் கோட்டை மீதும் இன்னுமொரு குழுவினர் தாக்குதல் நடத்தினர். கடலேரிப் பக்கமாக பேர்ட்டி றஞ்சித் என்பவர் தலைமையில இருபது பேர் தாக்குதல் நடத்தினர். கோட்டை பிரதான வாயிலூடாக உட்புக முனைந்த நிமால் வசந்த என்பவர் தலைமையில் இன்னுமொரு குழு கடும் எதிர்ப்பை சந்தித்தது. பேர்ட்டி றஞ்சித், நிமால் வசந்த உட்படப் பெருமளவானோர் கொல்லப்பட்டனர். ஒருசிலர் மாத்திரம் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ் நாகவிகாரை, சிங்கள மகாவித்தியாலயம் ஆகியவற்றில் மறைந்திருந்தோரும் கைதுசெய்யப்பட்டனர். கொழும்பு சிறைச்சாலைத் திணைக்களத் தலைவர் கொடுத்த அவசர தொலைபேசி எச்சரிக்கை காரணமாக யாழ் சிறைச்சாலை அதிகாரிகள் உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். தொலைபேசி கிடைத்திராவிட்டால் றோகணவிஜேவீர அன்று மீட்கப்பட்டிருப்பார் என்று சொல்லப்படுகிறது.

காரைநகர் கடற்படை முகாம் உட்பட யாழ். தீபகற்பத்திலுள்ள வேறு பொலிஸ் நிலையங்கள் மீதும் தாக்குதல் நடத்துவதற்கு அன்று திட்டமிடப்பட்டிருந்தது. மூஞ்சூறு விளக்குமாற்றைத் தூக்கிச் சென்றதைப்போல் ஜே.வி.பியினர் தமது சக்திக்கு மீறிய பேராசையை வளர்த்துள்ளனர். கடற்படை அதிகாரியான திலகரத்தினா காரைநகர் கடற்படை முகாம் தாக்குதலுக்கு உதவ முனைந்தார் தாக்குதல் நடைபெறவில்லை. திலகரத்தினா ஆனையிறவு ஊடாகத் தப்பிச்செல்ல எத்தனித்தார். அவரும் இன்னும் மூன்று ஜே.வி.பி உறுப்பினர்களும் கொழும்பு கடற்படைத் தலைமைச் செயலகம் விடுத்த கட்டளைப்படி ஆனையிறவு தடை முகாமில் வைத்துச் சுடப்பட்டனர்.

திருகோணமலை கடற்படைத் தளத்தில் பணியாற்றும் காலத்தில் திலகரத்தினா ஜே.வி.பியில் இணைந்தவர். இக் கட்டுரையின் முற்பகுதியில் நீதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா உருவாக்கிய கிரிமினல் நீதி விசாரணைச் சட்டம் பற்றிய செய்தியைப் பார்த்தோம். ஜே.வி.பி இயக்கத்தினரைச் சட்டத்தின் மூலம் தண்டிப்பதற்காகவே அது உருவாக்கப்பட்டது.

றோகண விஜேவீர யாழ் கோட்டைச் சிறையில், அடைக்கப்பட்டவுடனேயே பொலிஸ் விசாரணைகள் ஆரம்பித்தன. இதையும் இக்கட்டுரையில் படித்தோம். அதன்பின் விஜேவீரவை மீட்கும் முயற்சிகள் தொடங்கின. அவை பயனற்றவை ஆகின. இத்தனையும் நடக்கும்போது சிறிமாவோஅரசின் வேண்டுதலுக்கு அமைவாக இந்தியா, ரஷ்யா, பிரித்தானியா போன்ற நாடுகள் தமது ஆயுத மற்றும் படை உதவிகளை அனுப்பின. ஜே.வி.பி வெல்லக்கூடும் என்ற நப்பாசையுடன் இருந்த சீன அரசு நிலைமை மாறுவதை உணர்ந்து ஒரு உத்தியோகபூர்வ நட்பு மற்றும் ஆதரவுக் கடிதத்தை சிறிமாவோ அரசுக்கு அனுப்பியது. அத்தோடு ஒரு தொகுதி ரி56 ரைபிள்களையும் அன்பளிப்பாக வழங்கியது. இந்த ரி56 ரைபிள்களின் சிறிலங்கா வருகை இப்படித்தான் ஆரம்பித்தது.

பீலிக்ஸ் டயஸின் சட்டம் மே 17, 1972இல் நடைமுறைக்கு வந்தது. இதற்கு அமைவாக இயன் விக்கிரமநாயக்கா தலைமையிலான பொலிஸ் புலனாய்வுத் துறையினர் யாழ் சென்று றோகண விஜேவீரவை கடும் விசாரணைக்கு உட்படுத்தினர். இதன்பின் பிரதம நீதியரசர் நியமித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய நீதி விசாரணை ஆணையம் டிசெம்பர்

(17ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 21. 10 . 2005

மின் அஞ்சல :— weekly @ eezhanatham.com

# மக்களின் முடிவு..?

நடைபெறப் போகும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பெரும் பிரதான கட்சிகளின் பிரதான வேட்பாளர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை மதிக்கும் அளவுக்கு அல்லது நேசிக்கும் அளவுக்கு அவர்களின் அரசியல் உணர்வுகளையோ அல்லது அரசியல் விருப்பங்களையோ மதிக்கவோ அல்லது புரிந்து கொள்ளவோ தயாரில்லை என்பதையே இந்த இரு வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களாக இருந்தாலும் சரிதான் பிரச்சாரங்களாக இருந்தாலும் சரிதான் வெளிப் படுத்தி நிற்கின்றன.

நடந்து முடிந்த எல்லாத் தேர்தல்களையும் போல இந்த தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகள் 'கிங்மேக்கர்' ஆக இருக்கும் என்பதால் தத்தமது தேர்தல் வெற்றிக்கான விசையாக மட்டுமே நோக்க முயல்கிறார்கள்.

மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் தாயகம், தன்னாட்சி என்று தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரிப்பதாக தெரிவிக்கின்றார் என்றால் ரணில் விக்கிரம சிங்க இதனை இன்னுமொரு விதமாக நாடு பிளவுபட அனுமதிக்க மாட்டேன் எனத் தெரிவிப்பதோடு நேரடியாக தமிழ் மக்களின் உரிமை களை நிராகரிப்பவர்களோடு இணைந்தே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் என்கிறார்.

இது(-) இரண்டு வேட்பாளர்களினதும் பிரச்சினைக்குரிய தீர்வுக்கான உள்ளடக்கம் ஒன்றாக இருந்தாலும் அதனை வெளிப்படுத்தும் விதம் மட்டுமே வேறுபட்டு நிற்கிறது.

இலங்கையின் ஐம்பத்தாறு வருட காலத்திற்கு மேலான சுதந்திரப் பாதையில் அதற்கு சமாந்தரமாக தமிழ் மக்களுக்கு வரைந்து வைத்திருக்கும் அடிமைப்பாதையிலிருந்து மாறு படாத போக்கையே காட்டுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவும் மகிந்த ராஜபக்சவும் மாறி மாறி இனப்பிரச்சினைக்குரிய தீர்வாக தெளிவான நிலைப் பாட்டை முன்வைக்கவில்லை என குற்றம் சாட்டுவதில் மேடை களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறார்களேயொழிய உண்மையில் இரண்டு வேட்பாளர்களுமே இனப்பிரச்சினைக் குரிய தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை என்பதே உண்மை.

மேலெழுந்த வாரியாக இனப்பிரச்சினைக்குரிய தீர்வு என்று அதற்கான சில மகுட வாசகங்களை பிரயோகிக் கின்றனரே யொழிய சமாதான பேச்சுக்களிற்கும் சமாதான முயற்சிகளிற்கும் ஏற்கெனவே ஒரு பாதை திறக்கப்பட்டு அதில் பயணம் செய்யப்பட்டதை அவர்கள் நினைவு கொள்ளவோ அதில் பயணம் செய்யப்படும் என உறுதி அளிக்கவோ ஆர்வம் காட்டுவதாக இல்லை.

இந்த வேட்பாளர்களின் இந்த நிலைப்பாடானது தமிழ் மக்களின் அரசியல் விருப்புகளையும் உணர்வுகளையும் அவர்கள் உதாசீனம் செய்வதையே காட்டுகிறது.

இந்த விடயத்தில் இரண்டு வேட்பாளர்களுமே தமிழ் மக்களின் இன்றைய நிலைப்பாடுகள் தொடர்பாகக் கணிப்பிட முடியாதவர்களாகவே திணறுகின்றார்கள்.

இதனால் தான் தமிழ் மக்களை இலக்கு வைத்து தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆனால், உண்மையில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தேர்தலில் இந்தத் தலைவர்களை மட்டுமன்றி தேர்தல் ஆரவாரங்களையும் நிராகரிப்பதன் மூலமாக இந்தத் தேர்தலை புறக்கணிப்பவர்களே உள்ளனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுடைய அரசியல் வரலாற்றில் தமது உரிமைகளையும் உணர்வு களையும் மதிக்காதவர்களையும் நிராகரித்தே வந்துள்ளனர்.

இந்த வகையில் நடைபெறப் போகும் சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆர்வம் காட்டாததும் இதன் பாலானதேயாகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கக் காட்டிய ஆர்வமும் அதற்காக அவர்கள் செய்த அர்ப்பணிப்பும் இந்த நூற்றாண்டில் என்றுமே நடந்திராத ஒரு வரலாற்று நிகழ்வு என பல அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆனால் சிங்கள தேசத்தின் அதிகாரத்தை கைப்பற்ற நடைபெறப் போகும் சனாதிபதித் தேர்தலிற்காக தமிழ் மக்கள் ஒரு வரலாற்று நிகழ்வுக்குத் தயாராகப் போவதில்லை.

ஏனெனில் இந்தத் தேர்தலினூடாகவும் இந்தத் தேர்தல் மூலமாக தெரிவு செய்யப்படும் தலைவர் மூலமாகவும் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக எந்த சாதகமான போக்கையும் பெற முடியாது என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

# 'மகிந்த சிந்தனய' சட்டிக்குள்ளிருந்து அடுப்புக்குள்..!

"யுத்த நிறுத்த ஒப்பந்தம் பலனற்றது. அதனை சிலர் முன்னெடுக்க முனைகின்றனர். இதன் மூலம் நிலையான சமாதானம் ஏற்படாது"

"எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் இடமளிக்காத விதத்தில் யுத்தநிறுத்த உடன் படிக்கை புதிதாகத் தயாரிக்கப்படும்"

"யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் தொடர் பாக மீளாய்வு செய்யப்பட்டு பரிகாரங்கள் காணப்படும். இதன்போது பிராந்தியத்தின் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்ளப்படும்"

இவை'மகிந்தவின் சிந்தனைகள்' 'அரகத் மகிந்தவால்'தேவநம்பிய தீசனுக்கு வழங்கப்பட்ட உன்னத மான ஆலோசனைக்கமைய நாட்டை வழிநடத்தப் போவ தாக' அறிவித்துள்ள மகிந்தவின் சிந்தனைகள்.

கடந்த 18 ஆம் திகதி மகிந்த ராஜபக்சவின் (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சனாதிபதி வேட்பாளரின்) தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது. இந்த விஞ்ஞாபனத்துக்கு இடப்பட்டிருக்கும் மகுடமே 'மகிந்தவின் சிந்தனைகள்' (மகிந்த சிந்தனய)

மகிந்த எங்கே நிற்கின்றார்? எங்கே செல்ல முனைகிறார்? நாட்டை எங்கே கொண்டு செல்லப் போகி றார்? இந்தக் கேள்விகளுக்கு 'மகிந்த சிந்தனய' தெளிவாக விடையளிக்கிறது. இந்தச் சிந்தனைகள் நிச்சயமாக ஒரு பின் திரும்பல் ஆகும். சகல விடயங்களி லும் மகிந்த பின்திரும்பியிருக்கிறார். அரசியற் தீர்வு, பாதுகாப்பு, பொருளாதாரம், கல்வி உட்பட அனைத்து விடயங்களிலுமே மகிந்த தனது சிந்தனைகளை பின்நோக் கிக் கொண்டு சென்று விட்டார்.

அவரின் வார்த்தைகளும் சிந்தனையும் சிவப்பு மற்றும் காவி வர்ணங்களின் கலவையாக வெளிவந் துள்ளன. எனவே அங்கு எதிர்காலம் பற்றிய அக்கறையையும் தெளிவையும் காணமுடியவில்லை.

'யுத்தநிறுத்த ஒப்பந்தம் பலனற்றது' என்ற இந்த நான்கு வார்த்தைகளிலேயே இலங்கைத்தீவின் தற்போதய ஸ்திரநிலை தகர்ந்து போய்விட்டது. நாடு பதற்றத்துக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது. புதிதாக மற்றுமொரு யுத்த நிறுத்த உடன்படிக்கை தயாரிக்கப்படுமென மகிந்த சிந்தித்திருக்கிறார். ஆனால் இதனுடைய செயல் நிறைவேற்றம் எந்தளவுக்குச் சாத்தியமானது?

யுத்தநிறுத்த உடன்படிக்கை என்பது மகிந்த வின் வீட்டுக் கொல்லைப் புறத்தில் உருவாகுவதல்ல. தற்போதய புரிந்துணர்வு உடன்படிக்கையை ஆக்கி முடிக்க நடையாய் நடந்து, பறந்து உழைத்த நோர்வேத் தரப்பின் அனுபவங்கள் இதற்குச் சான்றும் விடையும் அளிக்கக்கூடியன. ஒரு ஒப்பந்தத்தின் சகல தரப்பும் அதன் சரத்துக்களில் திருப்தியடையும்போதுதான் அவற்றை ஏற்றுக்கொள்ளும்போதுதான் ஒப்பந்தம் உருவாக முடியும். அதைவிடுத்து ஒரு தரப்புதான் நினைத்ததை யெல்லாம் ஒரு காகிதத்தில் எழுதி விடுவதன் மூலம் புதியதொரு ஒப்பந்தம் வந்துவிடாது. மாறாக ஏற்கனவே இருக்கின்ற ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்வதற்கே வழிவகுக்கும்.

உண்மையில் தற்போதுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை மகிந்தவின் கூடாரத்தின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. மறுவளமாக இன்றைய இலங்கைத்தீவின் அற்ப சொற்ப நம்பிக்கையாக எஞ்சியிருப்பதுவும் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை மட்டுமே. கடந்த 31/2 வருட 'சமாதான முயற்சிகளின்' கைக்கெட்டிய பெறுபேறு இந்த MOU மட்டுமே. இதுவே இன்னமும்பல கதவுகளை மூடப்படாமல் பாதுகாக்கிறது என்பது இரகசியமானதல்ல.

அந்த MOU மகிந்தவின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கிறது. மறுவளமாகப் புதியதொரு போர் நிறுத்த ஒப்பந்தத்தை இந்தச் சண்டித்தனக் கண்ணோட்டத் தில் உருவாக்குவோம் எனக் கூறுவது எந்தவிதத்திலும் சாத்தியமானதாக இருக்கப்போவதில்லை. அப்படியாயின் இலங்கைத் தீவின் கதி என்ன?

யுத்தத்தைத் தாண்டி, எட்டப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள அரசியற் தீர்வு எப்படியானது? என்ற விடயம் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளித்து விடக் கூடியது. ஒற்றையாட்சிக்குள், பிராந்திய ஒருமைப்பாட் டிற்குள் காணப்படக்கூடியதாக மகிந்தவின் தீர்வு இருக் குமாம்! இது இல்லாத ஊருக்குக் காட்டப்படும் வழியல் லவா? போகாத ஊருக்குக் காட்டப்படும் வழிகூடப் பரவா யில்லை என்பதாக அமைந்துவிட்டது மகிந்தவின் சிந்தனை.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் தான் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒரு குறைந்தபட்ச இணக்கத்தையாவது எட்டமுடியும் என்பதுவும்.

இப்போது இவை அனைத்தையும் பிய்த்துக் கொட்டிவிட்டு ஐக்கிய இலங்கைக்குள், ஒற்றையாட்சிக் குள் ஒரு தீர்வைக் காணச் சிந்தித்திருக்கின்றார் மகிந்த!

இந்த அரிய முயற்சிக்கு அவர் யாரைத் துணைக்கழைக்க இருக்கிறார்? ஏனெனில் ஒரு காரியத் தின் செயல் நிறைவேற்றத்தில் துணை என்பதும் மிக முக்கியமான காரணியாகும். 'பிராந்திய சக்திகளின்' உதவி ஒத்துழைப்பு இதற்காகப் பெறப்பட உள்ளதாம். 'பிராந்திய ஒருமைப்பாடு', 'அரைகுறைச் சமஷ்டி' என்பவற்றுக்குள் சிக்கித் தவித்துக் கரையேறமுடியாமல் நிற்கும் இந்தப் பிராந்திய சக்திகள் தாமே நோய்க்கு மருந்தாகவன்றி மற்றுமொரு நோயாக விளங்குபவை.

அத்தோடு சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், இந்தியா என்பவற்றோடு பாதுகாப்பு வெளிவிவகாரங்களில் உடன் பாடுகள், ஒத்துழைப்புகள் எட்டப்படவுள்ளதாக மகிந்தவின் சிந்தனைகள் கூறுகின்றன.

சீனா மற்றும் ரஷ்யாவுடன் எட்டப்படவுள்ள உடன்பாடுகள் சிறிலங்காவின் தற்போதய 'மேற்கு முதன்மை' வெளிவிவகாரக் கொள்கையிலிருந்து சிறிது விலகுவதாக அமையும் அத்தோடு 'பிராந்திய சக்திகளிற்கு முதன்மையளிப்பதென்பது' மேற்கு முதன்மையை மேலும் சிதைவுக்குள்ளாக்குவதாகும்.

தற்போதய சிறிலங்கா என்பது மேற்குலகின் நிதியுதவிகளிலும் முதலீடுகளிலும் வெகுவாகத் தங்கி யிருப்பதாகும். வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை விடவும் கொடையாளி நாடுகளின் மாநாடு என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குமளவுக்கு கீர்த்தி பெற்றிருக்கிறது சிறிலங்காவின் பொருண்மியம்.

மகிந்த உறவுகொள்ளச் சிந்தித்திருக்கும் இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் எல்லாமே ஆயுதங் களையும் மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவு பொருளாதார, தொழில்நுட்ப உதவிகளையும் முதலீடுகளையுமே (முதலீட்டு விடயத்தில் சீனா புறநடையானது) சிறிலங் காவுக்கு வழங்கவல்லன. சிறிலங்காவின் பணப்பெட்டி டொலர்களையும் யூரோவையும் ஸ்ரேலிங் பவுணையுமே நம்பியுள்ளது. ரூபாக்களையும் யுவான்களையும், ரூபிள் களையுமல்ல அவை கிடைக்கப்போவதுமில்லை. அவற் றுக்கு உலக சந்தையில் கிராக்கியுமில்லை.

எனவே ஒட்டுமொத்தமாகவே மகிந்த சிந்தித்த விடயங்கள் இலங்கைத் தீவைத் தீயிடப் போகின்ற சமாச் சாரங்களாகவே இருக்கப்போகின்றன. சட்டிக்குள்ளிருந்து அடுப்புக்குள் சிறிலங்கா விழப்போகிறதா? என்பது நவம்பர் 17 ஆம் திகதி சிறிலங்கா மக்கள் போடப்போகும் புள்ளடிகளிலேயே தங்கியிருக்கிறது.

பு. சத்தியமூர்த்தி



# தொடரும் படைத்தரப்பின் வேவு நடவடிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வவுனியாவில் இருந்து 30 கி.மீ தொலைவில் உள்ள கனகராயன் குளத்துக்குக் கிழக்காகவுள்ள விஞ்ஞானகுளத்திற்கும், ஒன்பதாம் கட்டைக்கும் இடையில் சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான ஆளில்லாத வேவு விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியுள்ளது.

இந்த ஆளில்லாத வேவு விமானம் மூலமாக வவுனியாவில் உள்ள விமானப்படையின் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதியை வேவுபார்த்துக் கொண்டிருந்த நிலையிலேயே இந்தவிமானம் வீழ்ந்து நொருங்கியுள்ளது.

இந்த ஆளில்லாத வேவு விமானம் வீழ்ந்து நொருங்கியுள்ளதை ஒத்துக்கொண்டுள்ள படைத்தரப்பு அது வீழ்ந்து நொருங்கும்போது பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாக தெரிவித்தமையை படைத்தரப்பு உண்மையை முடிமறைக்க எடுத்துள்ள முயற்சியாகும்.

வீழ்ந்து நொருங்கிய விமானம் தொடர்பாக கருத்துத்தெரிவித்த விமானப்படைக் குழுத்தலைவர் அஜந்த டிசில்வா விழுந்துநொருங்கிய இந்த ஆளில்லாத வேவு விமானம் பயிற்சி விமானமேயொழிய, வேவுவிமானம் அல்ல எனத் தெரிவித்தமையானது இந்த விமானத்தை உற்பத்திசெய்த கம்பனியையும் நாட்டையும் கேலிசெய்வதாகவுள்ளது.

ஏனெனில் இந்த விமானத்தை உற்பத்தி செய்த இஸ்ரேல்நாடும் உற்பத்திதாரர்களும் இராணுவத் தேவைகளுக்கான வேவு விமானமாகவே உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளனர்.

விமானப்படைக் குழுத்தலைவர் அஜந்த டிசில்வா மேற்படி தெரிவித்திருக்க இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் நளின் விதாரணகே விழுந்து நொருங்கிய இந்த விமானம் ஆளில்லாத பயிற்சி விமானமே தவிர வேவுப்பணிகளில் அது ஈடுபடவில்லை என்பதோடு இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் மட்டுமே பயிற்சிகளுக்காக இந்த விமானம் பயன்படுத்தப்பட்டதால் இது சுட்டு வீழ்த்தப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் இல்லையெனவும் தெரிவித்துள்ளார். இது புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அரச கட்டுப்பாட்டு எல்லைப்பகுதி, மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி என்பன தெளிவாக வரையறை செய்யப்பட்டிருக்கும் இடத்திலிருந்து 30.கி.மீக்கு அப்பால் நடந்திருக்கும் சம்பவத்தை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனக் கூறுவதானது புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையையே கேலி செய்வதாகவும் உள்ளது.



ஆளில்லாத இந்த வேவுவிமானம் வீழ்ந்து நொருங்கியதையடுத்து கருத்துக் கூறுவதில் அவசரம் காட்டிய படைத்தரப்பு இந்த விமானம் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே வீழ்ந்து நொருங்கியதாகவும், அதேவேளை அது பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாகவும் காட்டஎடுத்த முயற்சியானது படைத்தரப்பின் யுத்த நிறுத்த மீறல் ஒன்றை மூடிமறைக்க எடுத்த முயற்சியாகும்.

இது இப்படியிருக்க இந்த விடயம் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத்தரப்பு இதுவொரு படையினரின் யுத்த நிறுத்த மீறல் என்பதில் சாதகமான போக்கையே வெளிப்படுத்தியுள்ளனர். கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலான் ஒலப்ஸ் டொட்டிர் கருத்துத் தெரிவிக்கும்போது சிறிலங்கா இராணுவத்தின் ஆளில்லாத விமானம் வீழ்ந்து நொருங்கியது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் கண்காணிப்புக் குழுவிற்கு தெரிவித்தனர். சிறிலங்கா இராணுவமும் தங்களது ஆளில்லாத விமானம் காணாமற்போனதாகத் தெரிவித்தனர் எனத் தெரிவித்திருந்ததோடு சிறிலங்கா இராணுவத்தின் உளவு நடவடிக்கையானது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முரணானது என்பதோடு ஏற்கனவே ஆறு தொடக்கம் ஏழு முறை விடுதலைப்புலிகள் முறைப்பாடுகள் செய்துள்ளனர் எனவும் தெரிவித்திருந்தார்.

சிறிலங்காப் படைத்தரப்பை பொறுத்தவரை விமானங்கள் மூலமாக வான்பரப்பின் ஊடாக மட்டுமன்றி கடல் மற்றும் தரைப்பகுதி ஊடாகவும் தனது வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டே வருகின்றது. இவ்வாறான சம்பவங்களின் காரணமாக பலமுறை போராளிகளோடு துப்பாக்கிச் சண்டையிலும் ஈடுபட்டுள்ளனர் என்பது கவனிக்கதக்கது. சமாதான முயற்சியை அடியோடு சரித்து வீழ்த்தும் நோக்கோடு செயற்படும் படைத்தரப்பின் இத்தகைய யுத்தநிறுத்த மீறலானது எல்லை மீறிப்போகின்றபோது ஒரு யுத்தத்திற்கே வழிதிறக்கும் என்பது மட்டும் உண்மை.

**புகழன்**

---

## நேர்நோக்கு

# மாறப்போவதில்லை..!

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன் பொருட்டு சிறிலங்காவில் தற்போது தேர்தல் திருவிழாவாகக் காணப்படுகிறது. ஒருபுறம் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு தேர்தல் திணைக்களத்திற்கு நூறுகோடி ரூபா தேவைப்படுகிறது. அதேநேரம் தேர்தல் பிரசாரத்தின் பொருட்டு ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்றுவதற்கும் ஒரு கோடியே முப்பது லட்சம் செலவுசெய்யப்படவுள்ளது.

இவ்வாறு மக்களின் பணத்தை விரையமாக்கி அதிகாரத்தைப் பிடிப்பதற்கு சனாதிபதி வேட்பாளர்கள் கடும் போட்டியில் ஈடுபட்டிருக்கும் அதேவேளை இந்தத் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் எவ்விதப் பிரதிபலிப்பையும் வெளிக்காட்டுவதாகத் தெரியவில்லை.


ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழ் மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளை தெரிவுசெய்வதில் ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு தங்களுடைய அபிலாசைகளை வெளிப்படுத்தியதுபோன்று இந்தச் சனாதிபதித் தேர்தலில் இல்லை. ஏனெனில் சிறிலங்காவில் காலத்திற்குக் காலம் ஆளும் கட்சிகள் மாறியது ஆளும் தலைவர்கள் மாறினார்கள்.


இத்தீவில் எப்படித்தான் ஆட்சிகள், அதிகாரங்கள் மாறினாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித மாற்றமும் நிகழப்போவதில்லை. அதிகாரத்திற்கு வருகின்றவர்கள் சிங்களம் எனும் ஒரேகுட்டையில ஊறிய மட்டைகள் என்பதால் அவர்கள் எப்போதுமே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கப்பால் சிங்கள இனவாதத்தையும் சிறிலங்காவின் பௌத்தத்தையும் திருப்திப்படுத்திக்கொண்டு சிங்களப் பேரினவாதத்தின் செல்லப்பிள்ளைகளாக இருப்பவர்களே தவிர ஒருபோதும் இந்நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பில் நடுநிலையாளர்களாக மாறப்போவதில்லை.

எனவேதான் இந்தத் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாடு இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால்தான் என்ன? என்பதே.

காரணம் இந்த சனாதிபதித் தேர்தலில் ரணில் வந்தால் [illegible] மகிந்த வந்தால் என்ன? இனப்பிரச்சினை தொடர்பில் இருவரின் இறுதி முடிவு ஒன்றாகவேதான் இருக்கும். இப்போது வேண்டுமென்றால் எமது கண்களுக்கு ரணில் ஒரு வடிவத்திலும் மகிந்த இன்னுமொரு வடிவத்திலும் தென்படலாம். ஆனால் நிலைமை அதுவல்ல.

இனப்பிரச்சினை தொடர்பில் மகிந்தவும் சரி, ரணிலும்சரி அல்லது இனி இந்த நாட்டில் அதிகாரத்தைப் பிடிக்கும் எந்தச் சிங்கள தலைவர்களும் சரி அனைவரதும் இலக்கு ஒன்றாகத்தான் இருக்கும். ஆனால், அவர்கள் பயணிக்கும் பாதைகள் வேறானவையாக இருக்கும். இப்போதும் நிலைமை அதுவாகத்தான் இருக்கிறது.





இந்தச் சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றால் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பில் அவர் பயணிக்கும் பாதை கடுமையானதாக இருக்கும்.

சில வேளைகளில் அவர் இராணுவ வாகனங்களில் கூட தனது பயணத்தை மேற்கொள்ளலாம். ஏனெனில் மகிந்த இப்போது ஜே.வி.பியினதும், ஜாதிகஹெல உறுமயவினதும் மகுடிக்கு ஆடுகின்ற பாம்பாகிவிட்டார். இதை அவரது தேர்தல் விஞ்ஞாபனம் தெளிவாகவே சுட்டிநிற்கிறது. இதைவிட இம்முறை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவு கால்பங்கால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இலங்கையின் பாதுகாப்புச் செலவீனம் மிக மிக அதிகமானது. இந்நிலையில் மேலும் கால்பங்கால் அதிகரித்தால் அரசு சமாதானத்தில் இருந்து மெல்ல நழுவி யுத்தத்தை நோக்கி நகர்வதாகத்தான் எண்ண முடியும்.

இது இவ்வாறிருக்க ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தை பிடித்தால் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் அவரது பாதை வேறாக இருக்கும். பொதுவாக ரணில் விக்கிரமசிங்க தனது பயணத்தை சமாதானம் நோக்கியதாகக் கூறினாலும், சிங்கள மேலாதிக்கத்தை புறக்கணித்து செயற்படமாட்டார்.

இருவரது பயணப்பாதையிலும் வேறுபாடுகளும், வித்தியாசங்களும் இருக்குமே தவிர இருவரும் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் சென்றடையப்போகும் இலக்கு ஒன்றுதான். இவ்வாறுதான் இலங்கைத்தீவில் அதிகாரத்திற்கு வருகின்ற எல்லாச் சிங்களத் தலைவர்களும்.

நிலைமை இவ்வாறு இருக்க எவ்வாறு இந்தத் தலைவர்களுக்கு தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை வழங்குவார்கள்? தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் இவர்கள் உருப்படியான எந்த வாக்குறுதிகளையுமே வழங்காது தமிழ் மக்களின் வாக்குகளை மட்டும் எதிர்பார்ப்பது எந்தளவுக்கு நியாயமானது? வழமையான தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை வழங்குவது போல் வழங்கி தேர்தல் முடிந்த கணமே காலை வாரிவிடுகின்ற அனுபவம் தமிழ் இனத்திற்கு நிறையவே உண்டு. இதனால் தான் தமிழ் மக்கள் சிங்களத் தலைவர்களை நம்புவதை முன்னமே விட்டுவிட்டனர்.

இந்தச் சிங்களத் தலைவர்களும் சரி அல்லது எந்தச் சிங்களத் தலைவர்கள் என்றாலும் சரி தமிழ் இனத்தின் நிலைப்பாடு இனி இப்படித்தான் இருக்கும்.

தேர்தலில் தான் வெற்றிபெற்றால் சுதந்திரக்கட்சியின் இணக்கப்பாட்டுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு சமாதான வழியில் முன்னெடுக்கப்படும் என ரணில் கூறியிருப்பதானது இனப்பிரச்சினை தொடர்பில் அவர் எதனையும் உருப்படியாகச் செய்யப்போவதில்லை என்பதையே காட்டுகிறது. ஏனெனில் சுதந்திரக் கட்சி அதிகாரப் பட்டத்தின் நூலாகவும், வாலாகவும் ஜே.வி.பியும், ஜாதிகஹெல உறுமயவும் இருக்கும்போது சுதந்திரக்கட்சியின் நியாயமான ஆதரவை எப்படி பெற்றுக்கொள்ளமுடியும்.

எனவே எந்தச் சிங்களத் தலைவர்களும் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் தெளிவான, நியாயமான நிலைப்பாட்டோடு இருக்கப்போவதில்லை. இதனால் தமிழ் மக்கள் தாங்களாகப் பிரிந்து சென்று தங்களை தாங்களே ஆட்சிசெய்யும் வரைக்கும் இலங்கைத் தீவில் ஆளும் இனம் சிங்கள இனமாகவும் ஆளப்படுகின்ற இனம் தமிழ் இனமாகவும்தான் இருக்கும்.

**மு.தமிழ்ச்செல்வன்**

# ஜப்பான் நாட்டின் பொருளாதார மேம்பாடு

அனைத்துத் துறைகளிலும் துறைசார்ந்த மேம்பாட்டையும் நவீன தொழில் நுட்பத்தையும் கொண்டு முன்னோடி நாடாக ஜப்பான் திகழ்கின்றது. மூளைசாலிகளின் பல்வேறுபட்ட நவீன உத்திகளைக்கொண்ட கருவிகளையும், உபகரணங்களையும், இயந்திரங்களையும் தன் முனைப்புடன் உற்பத்தி செய்து உலகத்திலேயே தலை சிறந்த ஒரு முன்னோடி நாடாகத் திகழ்கிறது.

ஜப்பானின் பொருளாதார முன்னேற்றம் 1868இல் தொடங்கியது எனலாம். இக்காலத்திற்குள் இங்கிலாந்து பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றுவிட்டது. பிற ஐரோப்பிய நாடுகளும் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றுக்கொண்டிருந்தன. உள்நாட்டுப் போருக்குப் பிறகு அமெரிக்கப் பொருளாதாரமும் மிக விரைவாக வளர்ந்து வந்தது. ஆனால் சோவியத் பொருளாதாரமும் வளர்ச்சியடையாத நிலையிலேயே இருந்தது. ஜப்பான் ஒரு சிறிய தீவாகும். எனவே வேளாண்மையில் அமைந்துள்ள நில அளவும் மிகக் குறைவானதாகும்.




பொருளாதார முன்னேற்றத்தின் முதற் சில நிலைமைகளில் ஜப்பான் அதிக மக்கள் தொகையைக்கொண்ட வேளாண்மை நாடாக இருந்து வந்துள்ளது. போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள் வளர்ந்திருக்கவில்லை. கல்வி, நிதி, நிர்வாகம் ஆகிய துறைகளிலும் பின் தங்கிய நிலையே திகழ்ந்தது. வெளிநாட்டு வாணிபமும் முன்னேறி இருக்கவில்லை. இல்லத் தொழில்கள் குறைந்த அளவிற்கே பெருகி இருந்தன.

பல நூற்றாண்டுகள் ஜப்பான் வளர்ச்சியடையாத தேக்க நிலைப் பொருளாதாரத்தையே கொண்டிருந்தது. தொழில் நிறுவனங்கள் பெருகி இருக்கவில்லை. தொழில் நுணுக்கம் வளர்ந்திருக்கவில்லை. மூலப் பொருட்களின் பற்றாக்குறையும் அமைந்திருந்தது. முதலீட்டிற்கான மூலதனத்தின் அளவும் குறைவாகவே இருந்தது. இக்காரணங்களினால் ஜப்பானின் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை.

திகழ்கின்றது.

வளர்ச்சியடைந்த நாடுகளோடு போட்டியிடத் தக்கநிலையில் ஜப்பான் இருக்கிறது. சமீப காலங்களில் முன்னேற்றத்தைப் பெற்ற ஜப்பான் முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகளோடு போட்டியிடத் தக்கநிலையைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வியத்தகு தொழில் முன்னேற்றத்தை இந்நாடு பெற்றுள்ளது. இவ்வித வளர்ச்சியைப் பெற்றிருக்கும் ஜப்பான் இயற்கை வளம் மிக்க நாடாக இல்லை. ஜப்பான் பலவித மூலப் பொருட்களை இறக்குமதி செய்து தொழிற் பொருட்களை உற்பத்திசெய்கின்றது. வினை முடிந்த பொருட்கள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஜப்பானில் உறுதியான அரசியலமைப்பு உள்ளது. தேவை



மக்கள் பிறநாட்டுத் தொழில் நுட்பங்களைக் கற்று அவற்றில் முன்னேற்றங்களைக் காண்கிறார்கள். பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் குறுக்கீடு அமைந்துள்ளது.

அரசின் கட்டுப்பாடுகளும் விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரணமாகிறது. ஜப்பானிய அரசு தொழில் துறையில் தீவிர பங்கு கொண்டுள்ளது. அரசின் கட்டுப்பாடுகளும் அங்கு அமைகின்றன. ஜப்பானின் விரைவான பொருளாதார முன்னேற்றம் போற்றத்தக்க ஒன்றாகும்.

இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், ஜப்பான் ஆகிய நாடுகள் வெவ்வேறு வகைப் பொருளாதார நிலைமைகளைப் பெற்றுள்ளன. அமைப்புமுறைகளில் அவற்றிடையே வேறுபாடுகளையும் காணலாம். வரலாற்று அடிப்படைகளும் வேறுபடுகின்றன. பொருளாதார முன்னேற்ற முறைகளும் மாறுபடுகின்றன. ஆனால் ஜப்பானில் பொருளாதார நிலைமைகளில் புதுமையான தொழில் நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டன. நுகர் பொருட்கள் ஏராளமான அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. நுகர் பொருட்களின் உற்பத்தி பெருகியதால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைகின்றது.

பெற்றுள்ளது. "தலையிடாமைக் கொள்கை" (Lassez faire) ஜப்பான் நாட்டில் பின்பற்றப் படவில்லை. இதன் காரணமாகவே அங்கு பொருளாதாரத் தாழ்வு நிலையானது நீக்கப் பட்டது. படிப்படியான மூலதனத் திரட்சியும் ஏற்பட்டது. தொழில் முயல்வோர் எண்ணிக்கையில் உயர்ந்தார்கள்.

பொருளாதாரத் தத்துவமானது ஜப்பானில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவ்வாறு இங்கிலாந்தின் முறை பின்பற்றப்பட்டிருந்தால் விரைவான பொருளாதார முன்னேற்றத்தை ஜப்பான் பெற்றிருக்க இயலாது. ஜப்பான் அரச வாணிப அமைப்புக்களோடு இணைந்து செயற்பட்டது. தொழில் முயல்வோருக்கும் அரசிற்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இதன் மூலம் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை பெறலாம் என ஜப்பான் உலகிற்கு உணர்த்தியது.

தொழில் அதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஜப்பானில் சுமுகமான உறவு நிலவுகின்றது. நிலப்பிரபுகளுக்கும், குத்தகையாளர்களுக்குமிடையே ஒற்றுமை காணப்படுகிறது. பாரபட்சமோ, வேற்றுமையோ இந்நிலைமைகளிலும் காணப்படவில்லை. இந்நிலைமைகளின் மூலமே ஜப்பான் வளமான பொருளாதாரத்தை பெற்றுள்ளது. ஜப்பான் அரசு பின்பற்றுகின்ற இம் முறைமையின் "நவீன முதலாளித்துவம்" (Modern capitalism) என அழைக்கலாம். தேசிய உடமையாக்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்கள் அங்கு அமைந்திருக்கவில்லை. தனியார் நிறுவனங்களுக்கும் அரசு உதவுகின்றது. முன்னேற்றமயமான திட்டங்களே ஜப்பானில் நடைமுறையில் உள்ளன.

தனியார் துறைக்கு அரசு உதவுவது நன்மை பயக்கும் என்பதை ஜப்பான் உணர்த்துகிறது. இம் முறையை மக்கள் தொகைமிக்க இன்றைய வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் பின்பற்றலாம்.

வளர்ச்சி குன்றிய நாடுகளில் வறிய நிலைமையே மக்களிடையே நிகழ்கிறது. வாழ்க்கைக்கு இன்றியமையாத சில தேவைகளைக் கூட பூர்த்திசெய்துகொள்ள முடியாத நிலையில் மக்கள் இருக்கின்றனர். உணவுப் பற்றாக் குறையும் இந்நாடுகளிலேயே காணப்படுகிறது. குறைந்த வருமானத்தைப் பெறும் மக்களிடம் சேமிப்புப் பழக்கம் அமைந்திருப்பதில்லை; ஆனால் நுகரும் விருப்பம் அவர்களிடம் அதிக அளவிற்கு அமைகின்றது. இதன் விளைவாக வளர்ச்சி அடையாத நாடுகளில் தலா வருமானம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. உலக நாடுகளிலேயே மிகக் குறைவான தலா வருமானத்தை பெறுகின்ற நாடுகள் பல இருக்கின்றன.

கடந்த ஐம்பதுக்கு மேலான ஆண்டுகாலங்களில் தான் ஜப்பான் தொழில் சிறந்த உலக நாடுகளுள் ஒன்றானது. தற்பொழுது தொழில் நுட்ப முன்னேற்றம் கொண்ட உற்பத்தி முறைகளே பின்பற்றப்படுகின்றன. விஞ்ஞான முன்னேற்றமும் சிறப்பாக ஏற்படுகின்றது. ஜப்பானின் தொழில்களில் திறமையான உற்பத்தி முறைகள் கைக்கொள்ளப்படுகின்றன. தொழில் முன்னேற்றத்தை முன்னமேயே பெற்ற நாடுகளைக்காட்டிலும் தரமான பொருட்களை ஜப்பான் உற்பத்தி செய்கின்றது. சிறப்பான நிதிமுறை அங்கு அமைந்திருக்கின்றது. வங்கிகள், போக்குவரத்துச் செய்தித் தொடர்பு வசதிகள் ஆகியவற்றின் முன்னேற்றம் உயர்வாக உள்ளது. வெளிநாட்டு வாணிபத்தையும் ஜப்பான் பெருமளவிற்கு கொண்டுள்ளது. ஜப்பானின் வெளிநாட்டு வாணிபம் அதிகளவில் இருப்பதோடு, அது மென் மேலும் வளர்ந்து வருகின்றது. ஜப்பானின் பொருளாதாரமானது பல புதிய மாற்றங்களைப் பெற்று வருகின்ற இயக்க நிலையைக் கொண்டுள்ளது.

ஜப்பான் நாட்டில் வேலையின்மைப் பிரச்சினை அமைந்திருக்கவில்லை. இராணுவ பலத்தையும், கப்பற்படைப் பலத்தையும் அது கொண்டுள்ளது. அதே சமயம் தொழிற் பிரிப்பு (Division of Labour), சிறப்புத் தேர்ச்சி (Specialaization) ஆகியனவற்றின் மூலம் சிறந்த தொழில் வல்லுநர்களையும், மிகை உற்பத்தியையும் கொண்டுள்ள நாடாகவும் திகழ்கிறது. மக்கள்தொகை விரைவாகப் பெருகும் நிலை கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. உலகின் சக்தி வாய்ந்த நாடாகவும் இது

யான அளவு மூலதனத் திரட்சியானது அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்கள் பெருகியுள்ளன. தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்கான திறமையும் ஜப்பானியர்களிடம் திகழ்கிறது. அதிக இலாபத்தைப் பெற வாய்ப்புகள் அதிக அளவில் அமைந்துள்ளன. தொழில் வளர்ச்சிக்கு இந்நிலைமையானது ஊக்கத்தை அளிக்கின்றது.

இங்கிலாந்து நாட்டில் பொருளாதாரப் புரட்சி ஏற்பட்ட பொழுது பிறநாடுகளின் போட்டி ஏற்படவில்லை. அமெரிக்கா பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான எல்லா இயற்கை வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ரஷ்யாவின் முன்னேற்றம் தீவிரமான புரட்சியால் ஏற்பட்ட ஒன்றாகும். தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்குமேற்பட்ட உள்நாட்டுப் போரில் பலர் உயிரிழந்தனர். மக்களின் பலவித தியாகங்களுக்குப் பிறகே ரஷ்யாவில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் ஜப்பானின் பொருளாதார முன்னேற்றம் மேற் குறிப்பிட்டுள்ள நாடுகளின் பொருளாதார முன்னேற்ற நிலைகளினின்று பல வகைகளில் வேறுபாடு கொண்டது.

கடல் சூழ்ந்த நாடாக இருப்பதால் ஜப்பான் வெளிநாட்டு வாணிபத்தை எளிதில் செய்யமுடிகின்றது. கப்பல் தொழிலையும் அதற்கேற்ப வளர்த்துக்கொண்டுள்ள நாடு ஜப்பான் ஆகும். நிலையான, உறுதியான அரசையும் அது பெற்றுள்ளது. சிறிய நாடாக இருப்பதால் ஒரே மொழியே பேசப்படுகின்றது. எதையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பம் ஜப்பானியர்களிடம் இருக்கின்றது.

சமீபகாலத்தில் ஆசிய நாடுகளில் ஜப்பான் விரைவான வளர்ச்சி வீதத்தைக்

**இனியவள்**

கொண்டதாக உள்ளது. அதிக உற்பத்தித் திறன் உள்ளதாகவும் அது காணப்படுகின்றது. பல வகைப்பட்ட நுகர்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, பிறநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன. தரமான பொருட்களை பெருமளவிற்கு ஏற்றுமதி செய்து வெளிநாட்டு வாணிபத்தை வளர்த்துக்கொண்டுள்ள நாடு ஜப்பான் ஆகும். ஜப்பான் நாட்டுப் பொருளாதாரத்தில் நேரத் திட்டமிடலானது முக்கியத்துவமான முன்னேற்றக் குறிகாட்டியாக அமைகின்றது. ஜப்பான் போன்ற நவீனத்துவமான மேம்பாட்டுத் திறனைக் கொண்ட நாடுகளின் நிலைமைகள் பற்றி அறிவதானது, வளர்ச்சி குன்றிய நாடுகளின் விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிகோலுவதாகின்றது.

வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்தி பொருளாதார முன்னேற்றத்தை ஜப்பான்

மேம்பாடடைந்த நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை விஞ்சிய நிலையில் ஜப்பான் உலகிலேயே ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. ஜப்பானில் இன்றும் கூட ஏற்றுமதிப் பொருட்களின் பெரும் பகுதியானது சிறு கைத்தொழில்கள் மூலமே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. உலக நாடுகளிடையே உலகச் சந்தையில் ஜப்பானின் பொருட்களுக்கான தேவை அதிகரித்த வண்ணமுள்ளது. உறுதியானதும், தரமானதுமான உள்ளீடுகளைக் கொண்ட உற்பத்தியே இந்நிலைமைகளுக்குக் காரணமாகின்றது. இந்நிலைமைகளில் ஜப்பான் அதிகளவு அந்நிய வருமானத்தை ஈட்டிக்கொள்வதுடன் மிகை உற்பத்தியிலும் நவீன கண்டுபிடிப்புகளிலும் கருத்தூன்றிக் கவனம் செலுத்துகின்றது. தனிநபர் வருமானத்திற்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

இவ்வாறாக ஜப்பான் நாடு நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு பொருளாதார நிலைமைகளில் மேம்பட்டு உலக அரங்கில் நவீனத்துவ நாடுகளில் முன்னோடியாகத் திகழ்கின்றது எனலாம்.



# கையடக்கமான பிசாகும் கற்றுக்கொள்ள வேண்டியவைகளும்



## சிறுவர்களுக்கான தமிழ் படைப்புலகமும் நம் சமுதாயமும்

சு.ஞாலவன்

உலகெங்கும் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரினது இதயங்களையும் ஆக்கிரமித்து நிற்கும் குட்டிப்பிசாசு தான் 'போக்மூன்'. கையடக்கமான பிசாசு என்று பொருள்படும் Pocket Monsters இன் எழுத்துச்சுருக்கமே Pokemoon ஆகிவிட்டது. இன்று உலகளாவிய ரீதியில் 25 மொழிகளில் 68 நாடுகளில் தொலைக்காட்சித்தொடர்கள் மூலம் மழலை இதயங்களைக் கவர்ந்து நிற்கும் Pokemoon, ஆரம்பத்தில் கணனி விளையாட்டாகத் தான் பிறப்பெடுத்தது.

இவ்வாறு முளைவிட்டெழுந்த இதன் ஆரம்பம் 1996ஆம் ஆண்டில் சாதாரணமானதாகவே இருந்தது. இருந்தாலும் 1997 இலே Pitachu என்ற பெயரிலே அறிமுகப் படுத்தப்பட்ட தொலைக்காட்சித்தொடர் மூலம் தான், அது குறுகிய காலத்திலேயே தனது பிரகாசமான எதிர்காலத்தைக் கட்டியம் கூறுவது போல அதிக பிரபல்யத்தை ஈட்டிக் கொண்டது.

இன்று வரையில் Pokemoon தொடர்பான கணனி விளையாட்டுக்கள் 100 மில்லியனுக்கு மேல் விற்பனையாகி விட்டன. சிறுவர்களின் மனநிலையை அறிந்து, அவர்களின் உளவளத்தைக் கருத்தில் கொண்டு ஆக்கப்பட்ட இதன் தொடர்ச்சியாக 1998 இல் திரைப்படம் ஒன்றும் வெளியாகியது. இதனுடன் யப்பானிலே பிறந்த Pokemoon உலகச்சந்தையை கெட்டியாக ஆக்கிரமித்துக்கொண்டது.

குழந்தைகளின் பால்போத்தலில் இருந்து பம்பர்ஸ், படுக்கை விரிப்பு, பாடசாலைப்பை என இதன் ராச்சியம் நீண்டு செல்கின்றது. 1970களிலே யப்பானில் நிறுவப்பட்ட Character licensing business and Character Datebank பிரபல்யமான கார்ட்டூன் வடிவங்களுக்கான காப்புரிமையையும், அதனைப் பயன்படுத்திக்கொள்வதற்கான விற்பனை உரிமம் பற்றியுமான அலுவல்களைக் கவனித்து வருகிறது.

போயும் போய் சிறுபிள்ளைகளுக்கான விளையாட்டுத்தனமான விவகாரங்களுக்காக வேலைவெட்டியில்லாமல் இவ்வளவு மினைக்கெடுகிறார்களே என்று பரிதாபப்படுகிறீர்களா? Micky Mouse, Donald Duck, Goofy, Winnie the Pooh, Tarzan, Cinderalla உட்பட லொஸ்ஏஞ்சல்ஸ் இலும், பரிஸிலும் என இரண்டு பாரிய உல்லாசப் பூங்காக்களைக் கொண்டிருக்கும், கலிபோர்ணியாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் அமெரிக்க நிறுவனமான Walt Disney இன் 2002ஆம் ஆண்டுச்சொத்துப்பெறுமதி 40 பில்லியன் US $ ஆகும்.

அதே ஆண்டில் அதன் லாபம் மட்டும் 4.5 US $. சிறிலங்கா சுனாமியைக் காட்டி இரந்து நிற்பது 1.3 US $; சமாதானப்பேச்சு வார்த்தையைக் காட்டி சுருட்ட நினைத்தது 4.5 US$. அதாவது Walt Disney இன் விளையாட்டுப்போக்கால் ஒரு வருடத்தில் அதற்குக் கிடைத்த வினை, முழு இலங்கைத் தீவையும் முழு அளவில் நிரந்தரமாக அபிவிருத்தி செய்யப்போதுமானது.

சிறுவயதில் அப்பாவின் அறிவுறுத்தலின் படி அம்மாவின் தெரிவில் மாதம் ஒரு படம் தியேட்டரிற்குச் சென்று பார்ப்பது வழக்கத்திலிருந்தது. பின்னர் வந்த வீடியோ நாகரிகம்(?) வீட்டிற்குள் அனுமதிக்கப்படாதிருந்தாலும், அதன் ஆக்கிரமிப்பு கடுமையானதாக இருந்தது. மூன்று பக்திப்படங்களுக்கு(?) தூங்கி விழுவதே சிவராத்திரி என்றும் சமூக வழமை மாறிப்போனது.

இந்த வகையில் அயல்வீட்டில் நடந்த மங்கள வைபவத்தை அடுத்து 'சின்னாக் களின்ரை நல்ல பம்பல் படம்' என்று அனைவராலும் பேசப்பட்டதொரு படம் காண்பிக்கப்பட்டது. கே.பாக்கியராஜின் 'முந்தானை முடிச்சு' தான் அது.

பிஞ்சில் வெம்பிய வகையில் சிறுவர்களைக் காண்பித்தது மட்டுமன்றி, 'வா வா வாத்தியாரே வா! வஞ்சிக்கொடி! என்னைக் கட்டுப்பிடி! உன் இஷ்டப்படி!..' என்ற பாடலுக்கு அவர்களை ஆண்-பெண்ணாக அபிநயிக்க வேறு வைத்திருந்தது. அப்போதைக்கு அந்தப்படம் பெரிதாய் விளங்கவில்லை.

அப்படிப்பட்ட அபிநயம் என்னுடைய அன்றைய வயதிற்கு கூச்சம் நிறைந்த சிரிப்பை மட்டுமே தந்தது. பின்னாளில் தான் கதை விளங்கியது. தற்போதும் பத்திரிகைகளில் 'நியூ' என்றொரு படத்தின் கதை பற்றி அதிகம் பரபரக்கப்பட்டது. அதுகுறித்து அதன் தயாரிப்பாளர் கூறுகையில் அப்படம் 'சிறுவர்களுக்குமானது' என்கிறார். 'The Kid' என்னும் ஓரளவு பழைய ஆங்கிலப் படத்திலே இயந்திரமயமான தொழில் அழுத்தங்களுக்குள்ளேயே வாழ்ந்து பழகிவிட்ட கதாநாயகனிடம், தான் தொலைத்து விட்ட அந்த சிறிய வயதிற்கே உரிய பட்டாம்பூச்சிப் பருவத்தில் வாழவேண்டும் என ஒரு ஏக்கம். அது மன உளைச்சலாக அவரை வாட்டுவதால், தான் வாழாமல் தொலைத்த பருவத்தை மீண்டும் சிறுவனாகி வாழ்வதால், மகிழ்வடைவதால் அவரின் ஏக்கம் நீங்குகிறது.

ஒரு கனமான விடயத்தை இதமான தீர்வுடன் அழகுற அத் திரைப்படம் சொல்லி நிற்கிறது. அதே கதைப்போக்கின் 'வளம் மாறிய வக்கிரப்போக்கே' 'நியூ'வாக அமைந்திருக்கிறது. இப்படிப்பட்டவர்களால் கருத்தியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் எவ்வித பின்னடைவுகளோ அன்றி எதிர்ப்புகளோ இன்றி தமிழுலகில் தலைதூக்கி; நிமிர்ந்து திரிய முடிகிறது! புரட்சித்தமிழன், இளைய தளபதி, செந்தமிழன், இளைய தமிழன், மாவீரன் போன்ற அடைமொழிகளுடன் உலவி வரும் இவர்கள் தமிழுக்கு என்ன செய்து கிழித்தார்கள்? எந்தப் போருக்குப் படை நடத்தியதால் இந்தப்பட்டங்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டது? தமிழுலகை பேயர்கள் என்று யாரோ ஒரு கும்பல் எடுத்த முடிவை முழுத்தமிழரும் ஏற்றுக்கொண்டு விட்டோமா?

சரி மீண்டும் இளையவர்களுக்கான சர்வதேச படைப்புகளுக்கு வருவோம். Barbie எனப்படும் சிறிய பெண்பொம்மைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. இந்த பாபி ஆபிரிக்காவில் கறுத்த தோல் நிறத்தைக் கொண்டவள். இவளது ஊடுருவலை கட்டுப்பாடற்ற மேலைத்தேசத்தின் கலாச்சார ஊடுருவல் என்று ஈரானிய ஆட்சிப்பீடம் எதிர்த்தபோது, முட்டாக்குப்போட்ட அரேபிய பாபி அறிமுகப்படுத்தப்பட்டாள். இன்று Barbie உட்பட Batman, He-Man, Superman, Harry Potter என்று இன்னும் பல வெளியீடுகளின் உரிமம் கலிபோர்ணியாவின் Mattel நிறுவனத்திற்கானது. 2002ஆம் ஆண்டில் 8 பில்லியன் US$ ஐ சொத்தாகவும், 1.2 பில்லியன் US$ ஐ (1200 000 000 US $/சுனாமியால் இலங்கைத்தீவிற்கு ஏற்பட்ட பொருள் இழப்பிற்கு ஈடானது) வருட லாபமாகவும் கொண்டிருக்கும் Mattel நிறுவனத்திற்காக மொத்தம் 27 000 பேர் வேலை செய்கின்றனர்.

ஆமாம் இவ் விடயத்தில் எமது நிலை எவ்வாறுள்ளது? ஒவ்வொரு இரண்டாவது நாளும் தமிழிலே ஒரு திரைப்படம் வெளி வருகின்றது. இதிலே மூன்றிலொரு பங்கு மொழிபெயர்க்கப்பட்ட தெலுங்கு மற்றும் கன்னடப்படங்கள். தரமான படங்களை அதிகளவில் கொடுக்கும் கேரளப்படங்கள் மொழிபெயர்க்கப் படுவது குறைவு. சரி இவ்வளவு பெருந்தொகையில் படங்களைத் தந்த தமிழ்த்திரையுலகு எனக்குத் தெரிந்தவரையில் தனது 65 வருடகால வரலாற்றில் முழுக்க முழுக்க சிறுவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து 'மை டியர் குட்டிச்சாத்தான்' எனப்படும் ஒற்றைப் படத்தை மட்டுமே தந்திருக்கிறது.

விமர்சனத்துக்குரியதாக இருந்தாலும் நம்மிடம் மிஞ்சியது அந்த ஒற்றைப்படம் மட்டுமே! இது தவிர வழமையான படங்களிலே சிறுவர்களுக்குரிய உவகத்தினைப் புரிந்து கொண்ட பாடல்களாக மூன்றாம்பிறையில் வரும் கதைசொல்லும் பாடல், சாளினி சிறுமியாக சிவாஜியின் முதுகிலிருந்து பாடிய 'அங்கிள் அங்கிள்! பிக் அங்கிள்!', ரஜனியின் 'ராஜா சின்ன ரோஜாவோடு காட்டுப்பக்கம் போனாராம்' மற்றும் தற்காலத்திலும் ஆங்காங்கே வரண்ட பூமியில் துளிகளாக விரல்விட்டு எண்ணக்கூடிய சில பாடல்கள் வெளி வந்துள்ளன.

இல்லை இல்லை இன்னும் இருக்கின்றதென்று நீங்கள் சில பாடல்களைக் குறிப்பிட முனையலாம். 'அஞ்சலி' படம் தரமானது; ஆனாலும் குழந்தைகளை மையப்படுத்தியதல்ல. 'மொட்டை மாடி, மொட்டை மாடி! ஒரு லவ் ஜோடி, லவ் ஜோடி! இலவசமா...' அதில் சிறுவர்களால் பாடப்பட்டிருக்கிறது. இன்னும் 'சிக்குபுக்கு சிக்குபுக்கு ரயிலு! கலக்கிறா பார் இவ ஸ்ரைலு!' சிறுவன்(?) தான் பாடுகிறான். நாம் உண்மையில் எங்கு நிற்கிறோம்? மனம் ஒத்துக்கொள்ள மறுத்தாலும், மிகவும் கேவலமான மட்டமான ரசனையைக் கொண்டவர்களாக நாம் உள்ளோமா இல்லையா?

பதினெட்டு வயது வந்தவுடனே பிள்ளைகளைக் கழற்றி விடப்பார்க்கும் மேலைநாட்டவர்கள் தங்கள் பிள்ளைகளின் விடயத்தில் எடுத்துக்கொள்ளும் சிரத்தையுடன் பார்க்கும் போது, எம்முடைய அக்கறை எவ்வளவிற்கு இருக்கின்றது. மீசை முளைத்த பின்னும் வீட்டில் வெட்டியாக இருக்கும் மகனுக்கு பெண் தேடுவதிலும், ஊர்வம்பளப்பதையே முழுநேர மூச்சாகக் கொண்ட மகளுக்கு நகைநட்டுகள் சேர்ப்பதில் தான் எங்களது கைங்கரியம் எல்லாம்! பிறந்த பிள்ளைக்கு புரியாத வயதில் பிறந்தநாளென்று ஊரையே கூட்டி வீடியோ வெக்கையில், நகைப்பாரத்தில், அனைவராலும் அன்பாகத் தீத்தப்படும் கேக் கொடுக்கும் அஜீரணத்தை பரிசளிக்கின்றோம்! அவர்களது ஆரோக்கியமான மகிழ்வுகளுக்கும், வளப்படுத்தல்களுக்குமான உருப்படிகள் ஏதும் எங்களிடையேயிருந்து எழுவதில்லை.

பெரும்பான்மையினரால் அவற்றின் முக்கியத்துவம் சீரியஸாக ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை. அப்படியே ஏதும் வெளிவந்தாலும் 'எனக்கு 20 உனக்கு 18' போல பிரபல்யமடைந்து விடுவதில்லை. கையைச்சுட்டுக் கொண்டவர்களாக தரமான கலைஞர்கள் கழுத்தறுக்கப்படுகிறார்கள். காரணம் எங்கள் ரசனை மட்டமும், மேலெழுந்த போக்குமே!

சிறுவயதில் சூரன் போர் பார்க்கப்போகும் போது மீண்டும் மீண்டும் பார்த்து அலுத்தும், பாடங்களில் படித்துக் களைத்துப்போன அதே கட்டங்களே அரங்கேறும். அந்த உருவங்களை விட போர் நடக்கும் வெளியில் மக்களை ஒழுங்கமைப்பதற்காக கரடி, குரங்கு என்று வெவ்வேறு மிருகங்களின் பொம்மை ஆடைகளைப் போட்டுக்கொண்டு வருபவர்களின் ஆட்டமும், அவர்கள் விடும் சேட்டையும் பார்ப்பதற்கு நன்றாய் இருக்கும். இப்படியாக குரங்கையும், கரடியையும் பார்க்க முடிவதனால் சூரன் போரிற்குச்செல்வது எப்போதுமே அலுத்ததில்லை.

இறைவனைக் கூட மழலையாக மனதிலேற்றிப் பார்க்கவேண்டும் என்று விரும்பியதால் தான் நம்மிடம் குழந்தை வேலனையும், யேசு பாலனையும் கும்பிடும் வழக்கம் தீவிரமாக



உள்ளது. இருந்தும் என்றுமே நாம் தொட்டுவிட வேண்டுமென்று முயற்சிக்காத நிலாவைப் பிடித்துத் தருவதாக வாக்களித்து, குழந்தைகளுக்கு நிலாச்சோறு ஊட்டுவதைப் போலவே, அவசியமான பலதையும் 'தனக்கடாச்சிங்களம்' என்று மறுதலித்துவிட்டு, வெறும் வயிற்றுத் தேவைகளுக்காகவும், சுவை வகை அறியாத ரசனைக்காகவும் வாழுதல் செய்கின்றோமா?

விருப்பு, வெறுப்பு அறியாத இயற்கையின் கோரமான சுனாமியை அரக்கன் என்கிறோம். அதனால் அதிகம் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காகவெனக் கொடுப்பதற்கு, மேற்குறித்தவற்றை ஒத்த சுதேசியப்படைப்புகளை உருவாக்குவதற்கு இதுவரை காலமும் ஊக்கமளிக்காத நமது படைப்புலகமும், அதன் தளங்களும் மட்டும் என்னவாம்??

# காரசாரம்

இடப்பெயர்வும், அதன் காரணமாக நடந்த அலங்கோலங்களும் மறைந்து போகக்கூடியவை அல்லத்தான். ஆனால் எல்லாப்பிரச்சினைகளுக்குமப்பால், பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த மாதிரி இடம்பெயர்ந்து சென்று பல அவலங்களையும் இழப்புக்களையும் சந்தித்து விட்டு மீண்டும் ஒரு அமைதியான வாழ்க்கையைத் தேடி சொந்த இடங்களுக்கு வருகின்ற மக்கள் தொடர்ந்தும் ஏதிலிகளாகவே இருக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. மாயமில்லை, மந்திரமில்லை உண்மை.

முந்தினவன் வெல்வான் என்ற சொல்லுக்கடங்க இடப்பெயர்விலிருந்து யார் முன்னதாக வந்தார்களோ அவர்



# எதுவானாலும்— இது சரியில்லை..!

களில் அநேகர் தத்தமது நிலங்களில் குடியிருப்பதாகக் கூறிக்கொண்டு அடுத்தவர் நிலத்தில் வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்களோ அதை மீட்க வழி யில்லையென்று கண்டு நீதிமன்றத்துக்குப் போகும் நிர்ப்பந்தத்தில் உள்ளனர்.

நின்றது நிற்க சண்டை துவங்கியபோது கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு ஓடிய மக்கள் பெரும் நம்பிக்கையோடு திரும்பவில்லைத்தான். கதிரை மேசை, பெட்டி சுளகு, ரீவி டெக்கு, மாடுகண்டு, இவைதவிர கதவு ய்ன்னல், கூரை இவற்றையெல்லாம் யாரும் எதிர்பார்த்து வருவதில்லை. இன்னும் சொல்லப் போனால் எப்படியோ, குட்டிச் சுவர் தப்பியிருக்கும் என்ற நம்பிக்கை மட்டுமே அநேகருக்கு.

இடம் பெயர்ந்து ஓடியபோது 'ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்று நாலில் என்று நினைக்கிறேன். ஒரு கிழவி தன் பேத்தியிடம் " எடி... காணி உறுதியளப் பாத்திரமா எடுத்து வையடி" என்று கூற; அந்தச் சிறுமி " நாங்கள் காணியையே விட்டிட்டுப் போறம் உறுதியக் கொண்டேக் கஞ்சிகாச்சிக் குடிக்கிறதே" என்று சலித்துக் கொண்டாள். அன்றைய மக்களின் மனநிலைக்கு இது ஒரு உதாரணம்தான்.

சூரியக்கதிரையடுத்து சத்ஜெய, சத்ஜெயவைக் கடந்து ஜெயசிக்குறு. இவை அனைத்தையும் உதறி ஓயாத அலைகள் அடித்து நாம் நிமிர்ந்தபோது எம்து நிலங்களிலிருந்து பொது எதிரியான சிறிலங்கா இராணுவத்தை விரட்டியடித்தாலும், இன்னும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஏராளமான இடங்களை பிடித்து வைத்துள்ளனர்.

அது ஒரு புறம் இருக்க ஒன்றுக்கொன்று உறவாகவுள்ள சொந்த மக்கள் தம்முடையது அல்லாத நிலங்களில் அடாத்தாகக் குடியிருப்பதுடன், காணிச் சொந்தக்காரர்களையே அவமதித்துத் துரத்தும் அவலம் இன்று நடக்கிறது. மனமறிந்து தவறுசெய்யும் எவரும் உடமையாளனுக்கு இரங்குவதில்லை.

வவுனியாவில் நான் சிறுமியாக இருந்த போது எங்கள் அயலில் இருந்த ஒருவர் பக்கத்துக் காணிக்காரருக்கு நூறுரூபா கடனாகக் கொடுத்தார். குறித்த பணத்தை அவர் உரிய காலத்தில் செலுத்தத் தவறியதால் ஒரு வருடத்துள் பணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் காணியை கடனுக்காகத் தரவேண்டும் எனக் கூறி அதை எழுதிக் கொண்டனர்.

இது நடந்தது ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில். இப்பணத்தை தனது கணவன் பெறவில்லை என்றும், பணத்துக்குப் பதிலாக சாராய வியாபாரியான ஈட்டாளர் சாராயத்தைக் கொடுத்தே எழுதுவித்துள்ளார் என்றும்,இவ்வொப்பந்தம் செல்லாது எனவும் கடனாளியின் மனைவி வழக்குத் தாக்கல் செய்தார். வழக்கில் காணி விவசாயக்காணியாதலால் இது வரை கையாட்சியில் வைத்திருந்தவரே தொடர்ந்தும் செய்கைபண்ணலாம் என்று நீதிமன்றில் கூறப்பட்டது. சரியாக சென்ற வருடம் வரை கடன் கொடுத்தவருடைய குடும்பத்தவரே அதை செய்கை பண்ணினார். பாருங்கள் கடன் கொடுத்தவர், வாங்கியவர் இருவரும் இறந்த பின் வழக்கு கிடப்பில் போடப்பட்டிருந்தது. இருவருடையவும் மகன்மார் இதில் கவனம் செலுத்தவில்லை என்பதுடன் காணியை ஆட்சியில் வைத்திருந்தவரின் மகளுக்கு சீதனமாக அக்காணி வழங்கப்பட்டிருந்தது.

அதன்பின் கடனாளியின் பேரன் 2000த்தில் அந்த வழக்கை மீள எடுத்து... வெறும் நூறுரூபாவைச் செலுத்தி (ஈட்டுப் பொருளை அனுபவித்தால் வெட்டியில்லை) நிலத்தை நீதிமன்றில் மீட்டுக் கடந்தவருடம் விதைப்பை மேற்கொண்டுள்ளார். உறுதி மாற்றப்படவில்லை என்பதுடன் அது பேரனுடைய சொத்துப் பேரனுக்கு என்ற முடிவில் வந்தது. உண்மையில் ஐம்பதுகளில் காணியின் முழுப்பெறுமதியே நூற்றைம்பது ரூபா தான். இன்று அக்காணி பல லட்சம் ரூபாய்கள் பெறுமதியானது.

இன்று கிளிநொச்சி, மல்லாவி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் இதே பிரச்சினை உண்டு. ஈடுவைத்த சொத்தாள் ஐம்பதாயிரத்துக்கு வைத்துவிட்டுப் போய்விட்டாலும் ஆண்டுகள் பல கடந்து வந்து உரிமை கேட்கும் உறவினர்கள் குறித்த அதே பணத்துடன் மீள நினைப்பதாலும் முரண்பாடு எழுகிறது.

காணிப்பிரச்சினை என்பது ஒரு பூதாகரமான பிரச்சினையாக மாறிவிட்டது. அடாத்தாக இருப்பவர்கள் இந்தப்பிரச்சினைகள் வருடக்கணக்கில் தீர்க்கப்படாமல் போகும் என்ற நம்பிக்கையுடனேயே இருக்கிறார்கள். உரிமைக்கான போராட்டம் பல்வேறு பரிணாம வளர்ச்சியைக் கண்டு வருகிறது. நேர்மை, நாணயம் என்பவற்றைக் கடைப்பிடிப்பவர்கள் யாருமே இல்லை.

அவதியுறும் மக்களுக்கு அவசர நிவாரணம் துரித காணிப்பதிவுகள் என்ற புதிய பிரிவின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலே நான் குறித்த வகையில் காணிகளை உரிமையாளர்களிடமிருந்து அபகரித்து வைத்திருப்பவர்கள், மிக நேர்த்தியாக ஒரு காணியைத் தமது பெயரில் பதிந்து கொள்கின்றனர். தேவை ஒரு அநாமதேயப் பேர்வழிமட்டும். காணி என்னுடையதுதான், இவருக்குக் கொடுக்கிறேன் என்று எழுதி நேரில் கொடுத்தால் போதும். இங்கே " நீதானா... அந்தக் குயில்" என்ற கேள்விக்கே இடமில்லை. உங்களிடம் அனுமதிப்பத்திரம் இருக்கலாம் நான் பற்றைவெட்டி வீடுகட்டி விட்டால் அது எனக்குத்தான் என்று வாதாடும் அராஜகம் இலங்கையடங்கிலும் நடக்கிறது. ஈடுவைத்தவர் வெளிநாட்டில் ஈடுபெற்றவர் இடம்பெயர்ந்துவிட்டார். வீட்டில் சிறிலங்கா இராணுவம் குடியிருக்கிறது. இராணுவத்தினரை வெளியேற்ற நாம் ஒன்று சேர்ந்து போராடுகிறோம். அப்போது நமது தேசம், நமது தேசியம் என்ற எண்ணம் மட்டுமே எம்மிடம் உள்ளது. ஆனால் தனிப்பட்ட முறையில் நாம் ஏன் மாறிவிட்டோம்.

"கட்டியழுதிடும் பெண்டிரும் பிள்ளையும் காலதச்சன் வெட்டி முறிக்கும் மரம் போல் சரீரத்தை வீழ்த்தி விட்டால் கொட்டி முழக்கி அழுவர் மயானம் குறுகி அப்பால் எட்டி அடிவைப்பரோ?"

என்று பட்டணத்தடிகளே பாடியிருக்கிறார். இவையெல்லாவற்றுக்கும் மேலாக உலகையே கட்டியாளுவேன் என்று சூளுரைத்த எவ்வளோ சாம்ராச்சியங்களே சரிந்த வரலாறுண்டு. இன்னும் அடுத்தவன் பொருளை தன்னுடைய உடமையில் கொள்வது திருட்டு. சாதாரண பொருட்களை இப்படி எடுப்பதையே திருட்டு என்கிறோம். அடுத்தவர் நிலத்தை அபகரிப்பதை என்னென்பது. அறநெறிகள் ஏன் அழிந்துபோயின. சமூகத்தின் வாழ்வியல் விதிமுறைகள் ஆதிவாசிகளின் காலத்தில் கூட இப்படி மீறப்பட்டதில்லை. காணிகள், வீடுகள் என்பவற்றை ஒரு போதும் யாரும் விட்டுக் கொடுக்கத் துணியார்கள்.

அப்படியிருக்க இந்த வகையில் மற்றவர்களால் தமது நிலம் பறிக்கப்பட்டால் அவர்களுடைய மனம் எவ்வளவு குமுறும் என்பதை தனக்கொரு இழப்பு வரும்போதாவது உணர முடிகிறதா? காணியில்லாமல், குடியிருக்க வசதியற்றுத் திரிந்த ஒருவருக்கு தனது நிலத்தின் ஒருபுறத்தே வீடமைக்க அனுமதியளித்தார் ஒருவர். காலப்போக்கில் அது தன்னுடைய நிலம் என்று வந்தவர் உரிமைகோர வழக்குக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் இரக்கப்பட்டவருக்கு ஏற்பட்டது.

ஒருவருக்கு முல்லைத்தீவில் நிலமிருந்தால் மல்லாவியிலும் காணி இருக்கும். யாழ்ப்பாணத்திலும் இருக்கும். மூன்று இடங் களிலும் அவர் குடியிருக்க முடியாது. யாரோ ஒருவரையோ பலரையோ தனது நிலத்தில் வசிக்க அவர் அனுமதித்தால் தானும் காணியை இழக்கவேண்டி வரலாம் என்று கருத வேண்டியுள்ளதால் வெறுமனே காணியை வேலியடைத்து மூடவேண்டியுள்ளது. இதேசமயம் நிலமற்ற ஒருவர் தான் வசிக்க இடம் தேடும்போது இந்த நிலம் கண்ணை உறுத்துகிறது. தர்மம் தானம் இரண்டும் கேள்விக்குறியாகிவிட்டது. எப்படி வாழ்ந்த மக்கள் இப்படி மாறிவிட்டார்களே அடுத்தவரைக் கெடுத்தால்தான் நாம் வாழலாம் என்ற அமெரிக்க நினைப்போ... எதுவானாலும் சரியில்லை.

-மாயா-



# விசுக்விசுக் விசாலாட்சி

"கலியாண வீட்டு அத்தடியில அறவே மறந்துபோனீயள் என்னை. எவ்வளவு தான் உங்களுக்க சண்டையெண்டாலும் நாங்கள் ரெண்டுபேருந்தானே உங்களுக்கு முட்டுக்குடுத்தது. இல்லையெண்ணப்போறியளே. அப்பப்ப இடைஞ்சல குடுத்து உவையள வெளியாள போகப்பண்ணினதும் நாங்கள்தானே சரி கிடக்கட்டும் நீங்கள் வேண்டாமெண்டாலும் நான் உங்கட கலியாணவீட்டுக்கு வரத்தான் போறன். ஒரு ஓரமா நிக்கிறன்" எண்றொருத்தர் வந்தாராம். கண்டவுடன் கலியாணவீட்டுக்காரர் முகத்தைத் திருப்பிக்கொண்டு போயிற்றினமாம். இவரென்ன செய்யிறது. நானும் கூட நானும் கூடவெண்டு திரிஞ்சவர். பந்திப்பக்கம் போனாராம். வந்திருங்"கோ" எண்டு ஒருதரும் சொல்லேல்ல. நானும் நிற்கிறன் எண்டு காட்ட செருமினார். இந்தப்பந்தியில நீங்கள் இருக்கவேண்டாம் எண்டாச்சு... பந்தியில இருக்கிறவைக்கு இலை போடுகினம். இவர் நிண்டு கத்தி றார். "இலை பொத்தலுங்கோ இலை பொத்தல்" எண்டு. ஆர் கவனிக்கிற...

இப்ப டக்கிளஸ்சையாட நிலைமையும் இப்பிடித் தான்ரா. போன லெச்சனில யாழ்ப்பாணம் வன்னியீறாய் சனம் காலைவாரிவிட்டுட்டுது. பிறகும் அங்கின மொத்தசீட்டக்கொண்டே ஒரு சீற் ஒரே ஒரு சீற்றப் பிடிச்சார். எதிர்காலத்தில உப்பிடிப் புல்லுருவி குருவிச்சையெல்லாம் வேணுமெண்டுதான் கதிராமரையும் டக்கிளஸ்சையாவையும் முருங்கையிலயேத்தி வைச்சிருந்தவை. பிறகு... ஒன்று முருங்கையில விழுந்ததோட மற்றது மூச்சுப்பேச்சு இல்லாமல் கிடந்தது. இப்ப என்னண்டா பழையபடி வேதாளம் முருங்கையில ஏறிவிட்டுது. "மத்தியில் ஒற்றையாட்சி மாநிலத்தில் சுயாட்சி" எண்டு சூனியக்காரன் மந்திரம்போட்ட மாரி மிலாந்துது. ஒரு காலத்திலும் போராடாத ஆயுதம் ஏந்தின இயக்கம் இது. அப்பிடியே ஆயுதத்தைச் சும்மா வைச்சிருந்தாலும் பரவாயில்லை. அடிக்கடி சனத்துக்கு நீட்டி நீட்டித் தீட்டிவைச்சிருக்கினம். தேர்தலுக்கு முதல் இவையள் குடுக்கிற வாக்குறுதி எல்லாம் ஆறுகடக்கமட்டும்தான். அண்ணனும் தம்பியும் எண்டு சொன்னமாரி வெண்டபிறகு மறந்துபோவினம். இண்டைக்கோ நேற்றோ இப்ப அம்பத்தெட்டு வரியமாக் கண்டதுதானே. பிறகு இப்ப புதுசா என்ன வரப்போகுது. அவரை போட்டது துவரையே முளைக்கிறது.

தமிழருக்கு எதிரா என்ன முடிவை எடுத்தாலும் ஆமாம் சாமி போடத்தானே ஒரு பதவிகிதவிய வைச்சுக்கொண்டு இருக்க இன்னும் தலையால தெறிச்சு தத்திவிழுகிறது. களையெல்லாம் சேர்த்து ஒரு அரசியல் கட்சி துவங்கப் போறம் எண்டு அறிக்கை விட்டவை பிறகென்னண்டா இப்பத் தெட்டத்தெளிய ஊருக்குத் தெரிய இனவாதம் பேசுறவையோட வலியப்போய் நானும் உங்களத்தான் ஆதரிக்கப்போறன் எண்டாராம்.

இவரிட்ட என்ன லச்சக்கணக்கிலேயே வோட்டிருக்கு. அவை அப்பிடி வைச்சிருக்கிற ஆறுமுகத்தாரையே விட்டிட்டினம். சரி அதிலும் குறைவாக்கிடந்தது கக்கீம் காக்காட்ட. அவரும் போட்டார். இப்ப பொடியா ஆகப்பெரிய பிரச்சினை ஒண்டு இருக்கு. என்ன... உடனடியா நாடாளுமன்றத்த கலைச்சே ஆகவேணும் கண்டியோ. இப்ப உள்ள நாடாளுமன்றத்தில மகிந்தருக்குப்போதுமான அளவுக்கு பெரும்பான்மை இல்லையே. அநுராவுக்கும் அக்காவுக்கும் இது தெரியாதோ... முன்ன ஜே.வி.பி விலத்தி நிண்டாலும் அம்மான்ர ஆட்சிய குழப்பமாட்டேன் எண்டு சொன்ன சொல்லுக்கும் மகிந்தரோட ஜே.வி.பி சட்டெண்டு ஒட்டினதுக்கும் ஒரு காரணம் வேணுமெல்லே. அந்தநேரமெடா இவை வைச்ச இலக்கு இப்ப இவையட தேர்தல் வாக்குறுதியளால திக்குமுக்காடிப்போச்சு.

பின்ன இப்ப அரசாங்கத்தின்ர றேடியோ பெட்டியளிலயும் ரீ.வி.பெட்டியளிலயும் 'மகிந்தச்சிந்தன' வலுகலாதியாப் போகுது. குழப்பமேயில்லை. ஆனை வரும்பின்னே மணியோசை வரும் முன்னே எண்டமாரி 'டபிள்கேமடா' எண்டு ஒண்டுபோனா ஒண்டு. தமிழற்றபாடு... இப்பவே கைதுகள் அமர்க்களமா நடக்குது. பிறகு இவைக்கு புள்ளடி போட்டிட்டும் பொல்லடிவாங்கிறதுதானே. கண்ணை மூடிக்கொண்டு கிணத்தில விழுத்தத்தானே ஓட்டு மாட்டுக்கட்சியெல்லாம் ஆதரவு தெரிவிச்சிருக்கினம். ஆ... குட்டக்குட்ட குனியிறவனும் மடயன் குனியக் குனியக் குட்டுறவனும் மடயன்.



## மண்ணின் மைந்தர்களின் கதை

# சேகர்-வீரத்தின் உச்சம்



மனித வாழ்வியலில் விடுதலை என்பது உயிரின் தாகமாக உள்ளது. ஆனால் தாயகப்பற்றுக்கொண்ட விடுதலைப் போராளிகளுக்கோ "விடுதலையே ஆன்ம பசியாகி விடுகிறது" இங்கு தான் ஒரு உண்மையான விடுதலைப் போராளி தன் உயிரை தாய் மண்ணிற்கென்றே ஒப்புவிக்கின்றான். தனது தாயகப் பற்றுக்கும் இலட்சியப்பற்றிற்குமாக உலகிலேயே உயர்ந்த விலையான உயிர் விலையை கொடுக்க முன்வருகிறான்.

தான் நேசித்த தாயக மண்ணிற்காக தனது உயிரை மயிர்க் கூச்செறியும் படி தந்த மாவீரன் வீர வேங்கை லெப்ரினன் கேணல் சேகர் விடுதலை வரலாற்றில் வித்தியாசமான வரலாற்றைப் படைத்தான்.

நாளின் கடமையை செய்து விட்டு குறிப்பிட்ட சேரிடம் வந்தது. எல்லாமே சரி என பார்க்கப்பட்ட வேவு முழு வடிவை தந்தது.

என்றாலும் தனது பணியை சரிவரச் செய்யவேண்டுமென்ற தனக்கேயுரியதும்! தனித்துவமானதுமான கடமையுணர்வுடன் மாவீரன் லெப். கேணல் சேகர் முன்னகர்கிறான். நேரம் இரவு 02மணியாகி இருந்தது. நாகர் கோயில் கடல் அலைகள் கரையுடன் மோதும் மெலிதான சத்தத்தை தவிர வேறு ஓசையே எழவில்லை.

சேகர் அப்போது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத்தளபதியாக இருந்தான். ஆனால் அவனிடம் எளிமையும், தாயகப்பற்றும் கலங்கமில்லாது இருந்தது. எனவேதான் தானே முன்சென்று அந்த வேவுப்பாதையை உறுதிப்படுத்தச் சென்றான். காரணம் தன்னை நம்பியே ஏராளமான போராளிகள் அந்தப் பாதையூடாகச் செல்லவிருந்தனர்.

தளபதி சேகர் இரவு 2 மணிக்கு முன்செல்வதாக அறிவித்தும் அவரோடு கூட இருந்த போராளிகளான நகுலனும், முத்தழகும் செல்லத் தடை விதிக்கின்றனர்.

சேகரண்ணை நாங்கள் சென்று பாதையை உறுதிப்படுத்துகிறோம்.

அந்த சாதாரண வேலையை எங்களிடம் விட்டுவிடுங்கள்

றான். பல மணித்தியாலங்கள் எதிரியின் நடமாட்டத்தை அவதானித்தவன், நேரம் அதிகாலை 4.30 தாண்டியும் எழுந்து வருவதாய் இல்லை. அங்கிருந்த போராளிகளுக்கோ பதற்றமாய் இருந்தது. அவர்கள் தங்களது தளபதியின் பாதுகாப்பை பற்றி யோசித்தனர். ஆனால் தளபதி சேகரோ தாய் நாட்டின் பாதுகாப்பைப் பற்றி யோசிக்கலானான்.

சேகரண்ணை 5 மணியாகப் போகுது விடிஞ்சுட்டுது. எதிரி கண்டிடுவான் வாங்கள் போவோம் என்றனர்.

தளபதி சேகர் காயமடைய அவ்விடத்தில் ஓர் பதற்றம் ஏற்பட்டது. திடீரென நிலைமையை சுதாகரித்துக் கொண்ட முத்தழகு சேகரை மீட்க முயற்சி செய்ய அவ்விடத்திலேயே முத்தழகும் காயப்படுகிறான். நிலைமைக்கேற்ப நகுலன் அதிலிருந்த அணிகளை கொண்டு ஒரு பதில் தாக்குதலை தொடுத்து தளபதி சேகரையும், முத்தழகையும் மீட்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன்பே, தளபதி சேகர் தனது உடலை துளைத்த பெரிய காயங்களையும் பெரிது படுத்தாது தென்னரசனின் 81 மி.மீ ஏவுகருவி நிலையத்திற்கு தொடர்பெடுத்து எறிகணை அடிக்கச் சொல்லி அறிவித்தான்.

மச்சான் எங்களுக்கு முன்னால இருந்து தான் அடிக்கிறான் தொடர்ச்சியா அதே இடத்திற்கு அனுப்பு. என்று அறிவித்து விட்டு வேகமாக அடிமச்சான் டேய் தென்னரசன் வேகமா அடி என்ற கட்டளையை வழங்குகிறான். தளபதி சேகரின் கட்டளையை, அவனது நடைபேசி உரையாடலை நன்கு கேட்ட தென்னரசன் தளபதி சேகருக்கு ஏதோ நடந்துவிட்டது என்று திடமான முடிவை எடுத்து சேகர் சொன்ன இலக்கிற்கு மாறி மாறி எறிகணைகளை ஏவினான். அதே சமநேரத்தில் அந்த இடத்திலிருந்து சேகரும், முத்தழகும்

வாழ்விலும் அவர்களின் முன்னேற்றத்திற்கு அவர்களின் உழைப்பே முன்னிற்கும். தளபதி சேகரின் வரலாற்றிலும் அவ்வாறே. சேகரின் ஒவ்வொரு வள்ர்ச்சிக்கும் தளபதி தீபன் அவர் களே முதன்மையாக இருந்தார். சிறிய சிறிய விடயத்திலும் சேகரின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் ஊக்கம் கொடுத்து, வீரத்தையும் போர் நுணுக் கத்தையும் ஊட்டிவளர்த்து சாதாரண ஜெயக்குமாரை மாவீரன் சேகராக மாற்றிய பெருமை தளபதி தீபன் அவர்களையே சேரும்.

சேகர் அவர்களின் போர் நுணுக்கம், போரியல் அனுபவம், என்பனவற்றிற்கும், எதிரியை சரியாக அளவிட்டதற்குமாக எத்தனையோ உதாரணங்களைச் சொன்னாலும் மாவீரன் சேகரின் நினைவு என்றுமே மறக்க முடியாமல் நெஞ்சில் நிழலாடுகிறது.

ஜெயசிக்குறு களம் விரிந்து கிடக்க தளபதி சேகர் அக்களத்திலே சிறகு நிலைக்கு (சிறகு பொயிசன்) பொறுப்பாளர் தளபதி தீபனால் நியமிக்கப்பட்டிருந்தார். குறித்த நாளொன்றில் சிறகு நிலையை பார்த்துவிட்டு புளியங்குளம் முகாமை நோக்கி வந்தபோது. புளியங்குள மகாவித்தியாலய மைதானத்தை நெருங்கிய போது எதிரியின் 81 மி.மீ 60 மி.மீ ஏவுதளங்கள் திடீரென உயிர்பெற்றன. டுப், டுப், டம், டம் என்றதும் சேகர் நிலைமையை உணர்ந்தவனாய்.

ஓயாத அலைகளென எழுந்த களங்கள் மேலும் ஓர்படி மேலே சென்று ஓயாத அலைகள் 04 என்றும் பட்டப் பகலில் எதிரியை துணிவுடன் எதிர்கொள்ளும் ஓர் அரிய வலுவை புலிகளுக்கு ஏற்படுத்தியது. அந்தக் களம் சிறப்பாக வெற்றி கொள்ளப்படுவதற்காக மாவீரன் சேகர் தனது களப்பணியை செய்தான். ஓயாத அலைகள் 04கிற்கான வேவு நடவடிக்கைகள் தொடர்ந்த

நாங்கள் போய் வருகிறோம் என்றதும்.

இல்லை இல்லை யாரும் என்னைத் தடுக்க வேண்டாம் நான் தான் போகவேண்டும்.

நான் போய் உறுதிப்படுத்தினால் தான் நல்லது.

என்று சொன்னவன் அந்த கடுமிருட்டில் தனது சுடுகருவியுடனும், நடைபேசியுடனும் முன்னே செல்கிறான். அங்கு வேவு அணியி

இன்னும் கொஞ்சநேரம் பார்ப்பம். காரணம் இதுவரை இரவு சண்டைக்கு ஏற்றமாதிரி பார்த்தேன் அது 100% சரி இனி பகல் சண்டைக்கு ஏற்றமாதிரி பார்க்க வேணும். காரணம் பகல் சண்டைதான் சரிவரும் என்று மேலும் சில நிமிடங்கள் அவதானித்து கொண்டே இருந்தவன். போவோமென சொன்னபோதுதான் அது நடந்தேறியது.

அப்புறப்படுத்தப்பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

தனது உடலை பல ரவைகள் துளைத்த போதும், தனது உடலிலிருந்து குருதி பெருக்கெடுத்து ஓடிய போதும் தன்னை காப்பாற்று என சொல்லாதவன், எதிரியை தாக்குவதிலேயே கவனம் செலுத்தினான் என்பது வெறும் வரிகளல்ல மாவீரன் சேகரின் உடலில் ஊறிப் போயிருந்த தமிழீழப்பற்றாகும். தனது வாழ்விலும் ஏன் சாவிலும் எதிரியை எதிர் கொண்ட அந்த மாவீரனான லெப். கேணல் சேகர் (மாயாண்டி ஜெயக் குமார், கோணாவில்.) 23.10.2000 அன்று எமது படைய மருத்துவமனையில் வீரச்சாவடைந்தான்.

அடிக்கப் போறான் வங்கருக்க பாயுங்கோ என்றதும் சேகரோடு வந்த நாம் பாய்ந்து நிலையெடுக்கவும் எதிரியின் பீ.கே சுடுகருவிகள் 03-04 வேட்டைத்தீர்க்கவும் சரியாக இருந்தது. அதேவேளை எதிரி ஏவிய எறிகணைகள் பரவலாக வெடிக்கத் தொடங்க, சேகர் தன்னோடு கூடவந்தவனிடம் லொங்கானை வாங்கி எழுந்து நின்று 02 40மி.மீ எறிகணை களை அடித்தான். சேகர் சடுதியாக தேர்ந்தெடுத்து அடித்த அதே இடத்தில் திடீரென எதிரியின் பீ.கே சூடு நின்றுபோக,

எழும்பி ஓடிவாங்கோ இந்த இடத்த தூளாக்கப்போறான் என்று ஓடத்தொடங்கியவனை தொடர்ந்து நாமும் ஓடினோம். எறிகணைகள் விழ விழ புகையிரத வீதியால் ஓடி புகையிரதப் பாலத்தில் காப்பெடுத்தோம். எதிரியின் எல்லாவித எறிகணைகளும் கலவனாக வந்து வீழ்ந்து வெடித்து ஓய்ந்ததும் அவ்விடத்தைப் பார்த்தோம். உண்மையில் அந்த இடம் சாம்பாராகி இருந்தது. எதிரி எந்த இடத்தில் எதை எப்படி எந்த வியூகத்தில் செய்வான் என்பதை சேகர் தனது போர்நுணுக்கத்தினால் நன்கு கணிப்பிட்டிருப்பது அவனது சிறப்புத் தேர்ச்சியாகும்.

★★★★★★★★★★★

**மீனாட்சி அம்மன் கோயிலடியில் தடை உடைத்து அணி உள்நுழையும் போது அணிகள் நகர்கின்ற பாதையில் ஒரு பாழடைந்த கிணறு இருந்தது. அதில் போராளிகள் வீழுந்து விடாதவாறு அதற்குப் பக்கத்திலேயே இருந்து தம்பி கவனமடா, டேய் கவனமடா, மச்சான் கவனமடா, அண்ணை கவனம் என்று சொல்லிச் சொல்லி அனுப்பிய அந்தத்தளபதியை போராளிகளால் என்றுமே மறக்க முடியாது. அந்தளவு பாசமும், பற்றும், அவனில் உறைந்து இருந்தது.**

★★★★★★★★★★

வண்ணமிருக்க, தன்னையே நம்பி தலைவன் கடமையை ஒப்படைத்துள்ளான், எனவே அதை சீரபட செய்து முடிக்கவென உறுதி எடுத்திருந்தான்.

18.10.2000 அன்று வழமை போலவே வேவு அணிகள் பல எதிரியின் காவலரண் பிரதேசத்திற்கு முன்பாக தமது வேவு நடவடிக்கையை செய்யலாயின, நாகர் கோயில் கடற்கரையை அண்டிய பிரதேசத்திற்குள் தமிழ்கண்ணனின் வேவு அணியும் நகர்ந்து விட்டது. மாலை 05 மணிக்கு வேவு அணி தனது கடமைக்கென சென்றது. சென்ற அணி தனது அன்றைய

லுள்ள ஒரு போராளி முன்வந்து வழிகாட்ட அவனைத் தொடர்ந்து கப்டன் மதியும், சேகரும், முத்தழகனும், நகுலனும் முன் செல்கின்றனர்.

வேவு அணியுடன் சென்று எதிரியின் பிரதேசத்தை அதாவது அணிகள் உள்நுழையப் போகும் எதிரியின் காவலரணுக்கு 60அடி தூரத்தில் எதிரியின் நடமாட்டத்தை அவதானித்தவாறே இருக்கின்றனர். தளபதி சேகரும் எதிரியின் குகைவாசலில் எதிரியை மிக அண்மித்து அவதானித்தவாறு இருக்கி

நேரம் சரியாக 5.20 நிமிடம் வேவு அணிக்குவெளியேறும்படி கட்டளை வழங்கிவிட்டு எழுந்தவன் திடீரென எதிரியின் எதிர்த் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. எதிரியின் அணி ஒன்று திடீரென தாக்குதலை தொடுக்க, தளபதி சேகர் காயமடைந்துவிட்டான், அவர்களுக்கு சற்று பக்கவாட்டாக இருந்த எதிரியே தாக்குதலை தொடுத்திருந்தான். அந்த எதிரியின் அணி இரவு முன்னகர்ந்து நித்திரை கொண்டிருக்கவேண்டும், காரணம் விடிந்தப்பிறகே தாக்குதலை தொடுத்திருந்தான்.

— க.மிரேசு —


இவனது வீரச்சாவு எத்தனை எத்தனையோ வீரவரலாற்றினை எமக்குக் கற்றுத்தந்திருக்கிறது.

1990 ஆம் ஆண்டு தன்னை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டவன், மாங்குள முகாம் தகர்ப்பின் போதே காவுங்குழுவில் தனது பணியை சிறப்பாகச் செய்து பின்னாளில் சிறப்பானதொரு படையணியின் சிறப்புத்தளபதியாகும் நிலைக்கு உயர்ந்திடும் அற்புதமான போராளி என்ற உரிமைக்கு ஆளானான. ஒவ்வொருவரினதும்

சேகரின் திறமைக்கு இன்னுமொரு சாட்சி சேகரின் வழிநடத்தலில்


(21ஆம் பக்கம் பார்க்க)





**சிறுகதை**

# “ஒரு சவப்பெட்டியின் மரணம்”



இப்போதெல்லாம் நாங்கள் அல்லது நம்மில் சிலர் பூமியில் கால்கள் படுகின்றன என்பதனை மறந்து விடுகிறோம். ஏதோ கற்பனா சக்தியில் மெத்தப்படித்துவிட்டோம், எனி என்ன படிப்பதற்கு இருக்கின்றது. அனைத்தும் அறிந்தவன் நான் என்ற நினைப்பில், இறுமாப்பில், செருக்கில் இந்தப் பூமியில் மற்றவர்களைப் பார்த்துக் கொண்டு நடைபயின்று (தரைக்குமேலே) கொண்டிருக்கின்றோம்.

ஏன் இப்படித் தொடக்கத்தில், கொஞ்சம் புலம்பல் தன்மையுடன் தொடங்கியிருக்கிறேனென நீங்கள் யோசிக்கலாம். சற்று “பிசகிவிட்டதோ” என ஐயுறலாம். காரணம் நீங்கள் மனிதர்கள், மானிடர்கள், உங்களுக்குத்தான் மற்றவர்களை எடை போடும் தன்மை, விமர்சிக்கும் தன்மை உண்டு. இதனை முன்னோர்கள் எனச் சொல்லப்படுகின்றவர்கள்,சற்று அதீதமாகச் சொல்லி விட்டார்கள்.

எனவே எங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பில் நாம் வாழ்ந்து கொண்டிரு க்கிறோம். இதனால் நாம் சொல்வதுதான் சரி, நாம் நினைப்பது நீதியானது, தர்மமானது,விளக்கமானது என அதிகாரம் பண்ணுகின்றோம்.

கால்கள் தரையில் நிற்பதேயில்லை. காலம் முதுமையடைகின்றது(எவ்வளவு தடவை காலம் ஓடிக்கொண்டிருக்கிறது என எழுதுவது) அரிச்சந்திரன் சந்திரமதி கதையிலிருந்து, சந்திரமுகி வரை வந்துவிட்டோம்.

கடவுள், இறைவன், உலகமாதா என்பவர்களும் கதாநாயகனாக,வில்லனாக நடந்து கொண்டு எதிரியைப்பழிக்குப்பழி வாங்குகின்றார்கள். ஓட, ஓட விரட்டி, வாளினால் இரண்டு துண்டுகளாக்கி இரத்த சகதியின் பின் தர்மத்தை நிலை நாட்டுகின்றார்களாம்.......?

பள்ளியில் படிக்கும் காலத்தில் எங்களை அடிக்கடிவெருட்டிக்கொண்டு இருப்பார்கள்.நன்மை செய்தால் சொர்க்கத்திற்கு, தீமை செய்தால் நரகத்திற்கு, வகுப்பு வாத்தியாரில் தொடங்கி, அம்மா,அப்பா, ஊராட்கள் எல்லாரும் விட்டு வைக்கமாட்டார்கள்.

சொர்க்கம், நரகம்...எனக்கு இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகின்றது. இப்போது நாங்கள் வாழும் இந்தப் பூமி, உலகம் என்ன உலகம்? சொர்க்கமா? நரகமா?

பொய் சொல்லக்கூடாது, களவெடுக்கக்கூடாது, நீதியாக நடந்துகொள்ள வேண்டும், அதிகம் ஆசைப்படக்கூடாது, உள்ளதைக்கொண்டு திருப்தியடைய வேண்டும்...இப்படி பலவகையாகச் சொல்லிவிட்டு பலர் போய்விட்டார்கள்.

நீதியான போதனைகள், எழுதுவதற்கும் , சொல்வதற்கும்..... மிகவும் “ருசியாகத்தான்” இருக்கும். அடடா அற்புதம். சே... என்ன மாதிரி எழுதிவச்சிருக்கிறான்...எனத் தாளம் போட வைக்கும், பிரசங்கம் செய்யத் தூண்டும்.......

நடைமுறையில் அதனைச் செயற்பட வைப்பது...? என்ன உங்களுக்குள்ள கதைக்கின்றீர்கள் ஓரக் கண்ணால் நமட்டு சிரிப்புடன் பார்க்கிறீர்கள். கொஞ்சம் பொறுங்கள் ஏதோ எனக்கு மனதில் பட்டதை, எழுந்ததை உங்களுக்குச் சொல்லி விட்டேன்?

உங்களுக்கு எரிச்சல், கோபம்,சினம் வந்தால்..... உங்கள் அறியாமையை எண்ணி வெக்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன்.

ஒரு மனிதன் யாரோடு கதைப்பான்? யாரோடு உறவாடுவான்? யாரோடு தனது இன்பதுன்பங்களை பகிர்ந்து கொள்வான்? சக மனிதர்களோடுதான் அவன் தனது குமுறல்களை அள்ளிக்கொட்ட முடியும்.

மிருகங்களோடு உணர்வை பரிமாற முடியுமா? அந்த வகையில் நான் ஒரு மனிதன், உங்களோடு கொஞ்சம் உணர்வைப் பகிர்ந்தேன். அவ்வளவு தான்.

என்ன...இப்போதும் நீங்கள் கோபமாக உள்ளீர்களா?... அட..சிரிப்பு வருகின்றது...கடுகடுப்பு, சினம் போய்...புன்னகை வருகின்றது.

அது எப்பேர்ப்பட்ட புன்னகை. பார்க்க,பார்க்க ஆசையாய், ஆனந்தமாய் இருக்கின்றது.

புன்னகைக்கு விலை எவ்வளவு கொடுக்க முடியும்? இதுபோல் நீங்கள் தொடர்ந்து சிரித்துக்கொண்டிருக்க இறைவனை வேண்டுகிறேன்.

இந்தச் சிரிப்போடு நான் கதை சொல்லப் போகிறேன். இது தத்துவமா? விதியா? முன் செய்த தர்ம பலனா? இப்படியும் நடக்குமா? கடவுள் இருக்கிறாரா? காக்காய் உட்கார பனம் பழம் விழுந்த கதையா?

அல்லது... உது சும்மா “பகிடி முகம் மாத்தி கற்பனைக்கதை”

எப்படியோ எடுத்துக் கொள்ளுங்கள் உங்களுக்கு உரிமையுண்டு.

சரி...கொஞ்சம் அமைதியாகுங்கள்

அமைதி..... அமைதி... அமைதி...

கதை ஆரம்பமாகின்றது.

* * * * *

நடு நிசியின் போது அந்த அவல ஓலம் கேட்டது. வீரிட்ட குரல், இதயத்தைக் கடித்துக்குதறி பிய்த்து வெளியே வீசியது....நாடி, நரம்புகளை துண்டு, துண்டாக வெட்டியது போல்...மரத்தில் உறங்கியிருந்த பறவைகள் சடசடத்து பறந்த திசை தெரியாமல் மோதிக்கொண்டன... புழுக்கத்தில் புரண்டு படுத்துக்கொண்டிருந்தவர்கள்.... திடுக்குற்று எழுந்து சத்தம் வந்த திசை நோக்கினர்.

நாய்கள் தூக்கம் கெட்டு சினத்துடன் குரைத்தன. அரிசி மில் காவலாளி எழுந்து விறைத்து நின்றான். நடு இரவில் அமைதி குறைந்தது.

“சின்னத் தங்கச்சியின்ர புருஷன் செத்துப் போயிட்டானாம்” வேலைக்குப் போகேக்க “அடிபட்டு செத்துப் போயிட்டானாம்”

“ஐயோ, சவுதி போய் இரண்டு வருஷமெல்லே ஆகுது”

“கடவுளே...பெடிச்சியும் சுகமில்லாமல் இருக்கிறாள்” “காதலிச்சு கலியாணம் செய்ததில சகோதரங்கள் ஒற்றுமையில்லை”

பரவலாக கதைகள் அடிபடத் தொடங்கி பழையகதை “ஊர்வாய்கள் இரைமீட்கத்தொடங்கின” நடு நிசியை மறந்தார்கள்.

சின்னத்தங்கச்சி வீட்டில் ‘சனம்’ குழுமி விட்டது. அவளுக்கு நெருக்கமானவர்கள் அவளை சமாதானப்படுத்த முயன்றனர்.

இது என்ன இலகுவான காரியமா?

என்ரை ஐயோ...எல்லாம் போட்டுது... நான் என்ன செய்வன்... இனி என்ன செய்யிறது.....என்ர ஐயோ... அம்மாளே...எனக்கு யார் இருக்கினம். உங்கள நம்பித்தானே.... எல்லாரையும் உதறித்தள்ளிப்போட்டு வந்தனான்...... நான் என்ன செய்யிறது... தரையில் புரண்டாள், உருண்டாள்...தரையிலும் மார்பிலும் படபடவென அறைந்தாள்... கண்கள் செருகி...மூச்சு வாங்கி....

உறவினர்கள் “அவளை அடக்க முடியாமல் திணறினர்”

“ஐயோ பிள்ள.....அடியாத...உடம்புக்கு.... உன்ர குழந்தைக்குக் கூடாது... என்ரை குஞ்சு

தலைமயிரை ஒதுக்கிவிட்டார்கள், மார்பினைத்தடவி விட்டார்கள்.

“எனக்கென்னத்துக்கு... குழந்தை. நான் என்ன செய்வன்”

மறுபடி தலையில் அடித்து.......மயங்கி விழுந்தாள்.

சின்னத்தங்கச்சியின் புருஷன், புண்ணியத்தின் உடல் சவுதியில் இருந்து கொண்டுவரப்பட்டு, சனசமூக நிலைய கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சங்கம் கட்டுவதற்கு அவன் சில உதவிகள் மனம் கோணாது செய்திருந்தான். இதன் காரணமாக சங்க நிர்வாகிகள் அவன் உடலை கொஞ்சம் அங்கே வைத்திருக்க விரும்பினார்கள்.

புண்ணியத்தின் உடல் எடுத்துக்கொண்டுவரப்பட்ட பெட்டியோ..... பார்க்க....பார்க்க.... மேலும் தூண்டியது. வழமையான “ஊர் பிரேதப் பெட்டியைவிட அகலமானத்தாகவும், நீளமானதாகவும், இருந்தது” பெட்டியின் மூடி மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுடன் அமைக்கப்பட்டிருந்தது... நான்கு விளிம்புகளிலும் “வெள்ளி உலோகத்தினால்.... அழகுபடுத்தி இருந்தார்கள். பெட்டியின் அடிப்பாகம்.... நான்கு மூலைகளிலும் உலோகத்தினால்....: அழகுபடுத்தியிருந்தார்கள்.

மொத்தத்தில்.. பிரேதப்பெட்டி ஒரு நித்திரை கொள்வதற்கென்று... பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட சொகுசுக் கட்டில் போல் இருந்தது.

ஊர்ப் பெரியவர்களும் “அதைப்பார்த்து ஆசைப்பட்டார்கள்” என்ன மாதிரி செய்திருக்கிறார்கள்.

“புண்ணியம் வேலை செய்த வெள்ளக்காரன்” கொம்பனிதான் அனுப்பி வைச்சிருக்கிறாங்கள்.

“செத்துப் போனாலும் உப்பிடியான பெட்டியில தான் கிடக்க வேணும்”

“உதை எரிக்க மனம் வராது....”

பார்க்க..... பார்க்க..... மனிதர்களுக்கு என்னமோ சொல்லத் தோன்றியது.

பாவம் புண்ணியம் தன்னைச்சுற்றி நடப்பது தெரியாம படுத்துக்கிடந்தான்.

பெட்டியை ரசித்துப்பார்த்த ஊர்ப்பெரியவர்களில்....... வாத்தியார் சுந்தரமும் ஒருவர்...... பார்த்துப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தவர்..... மனதில் எழுந்ததை வெளியில் கொட்டவில்லை.

“சா...வடிவான பெட்டிதான்... நாங்கள் “உதை”வைச்சிருக்க வேணும்.... எங்களிட்ட இருந்தால்..... சங்கத்துக்கெண்டு வைச்சி ஊரில“பொடி” எடுத்துக்கொண்டு போறதுக்கு பயன்படுத்தலாம்...” உப்பிடிச் செய்தால் “பெட்டியை • காப்பாற்றிப் போடலாம்”

“பாவம் புண்ணியம் அமைதியாக....”

மற்றவர்களிடம் கூப்பிட்டுச் சொன்னார்.

“உந்த மாதிரி இனி எமக்கு வராது..... உதை நாங்கள் எங்கட சங்கத்துக்கெண்டு வைச்சிருக்கலாம். “பொடி” கொண்டு போறதுக்கு உதவும்....பார்க்க,

“அம்சமாய் கிடக்கு...... என்னசொல்லுறியள்”.

ஐம்பது வயதிலும் “திமுதிமு” என்று இளமை “உடைந்து விடாமல் கட்டுக்கோப்பாய் நின்ற” வாத்தியார் கம்பீரமாகக் கேட்டார்.

இரவு விரைந்து கொண்டிருந்தது. நாளை பிரேதம் “தகனத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும்”

தொல்புரம்,
சி. கதிர்காமநாதன்

அதற்கு முன்...வீட்டில் வைத்து.......

அவசரம்.....அவசரம்.......

எல்லோரும்......

"வாத்தியாரின் குரலுக்கு செவி மடுத்தனர்....." பெட்டியைக் காப்பாற்றும் முயற்சியில் வாத்தியாருக்கு உதவினர்.

"சண்முகம் வாத்தியார் சொல்லுறது சரிதான், ஊர்த் தேவைக்குப் பயன்படுத்தலாம்"

"சுடலைக்கு" பொடியைக் கொண்டு போறதுக்கு பெட்டியைப்பயன்படுத்தலாம்.

வாத்தியாருக்கு சரியான சந்தோசம். பெட்டியை உயிர் ஆபத்திலிருந்து காப்பாற்றிப் போட்டார்.

வீட்டிலும் ஒரேபெட்டியைப்பற்றி விபரண சித்திரம் தான்.

சா...... வடிவான பெட்டியப்பா... நீரும்...பார்த்தீரெல்லே இருப்பீர்...உதுக்குள்ள "செத்தவனைப் போட்டு அனுப்பி வைச்சிருக்கிறாங்கள் விசரங்கள்... எங்கட ஆட்கள் கொண்டு போய் எரிச்சுப் போட்டு இருப்பாங்கள். நானொரு பிளானைப் போட்டு.... கதையை மாத்திப்போட்டன்.

வாத்தியார் மனைவி திலகத்திற்கு.....அவரின் பேச்சு எரிச்சலை உண்டு பண்ணியது.

"என்ன கோதாரி.....பொடியை பெட்டியில் போட்டு அனுப்பி வைச்சிருக்கிறன்.... அதைப் போய் புழுகிக்கொண்டு இருக்கிறியள்...."

மத்தியான நேரம்.... வெயில் காற்று கோழி குஞ்சுகளோடு ஈரலிப்பான நிலத்தில் இறக்கையை அகல விரித்தபடி படுத்துக்கிடந்தது. வாத்தியாருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"போடி...விசரி...உனக்கென்ன தெரியும்...... சமைக்கத்தான் தெரியும்.பிரேதப்பெட்டி எண்டாலும் அதைக் கலை நயத்தோட செய்திருக்கிறாங்கள்....... வெள்ளக்காரன்......வெள்ளக்காரன் தான்.

இரவில் வீட்டுக்கு வரும் பிள்ளைகளுக்கு "படிப்பு" சொல்லிக்கொடுப்பது வாத்தியாரை இயங்க வைப்பதற்கும் பயத்தைக் குறைப்பதற்கும் உதவியாக இருந்தது...

என்ன பயம்.... இரவில்"ஆமிக்காரன்களின் நடமாட்டம் அதிகமாகி இருந்தது".

ஆட்களோடு சேர்ந்து இருப்பது... பயத்தினைப் போக்கியது... ஆமிக்காரர் வருவது.... நாய்கள் காட்டிக் கொடுத்துவிடும். நாய் நன்றியுள்ள மிருகம் அல்லவா.... சில நேரங்களில் அவர்களுக்கும் "நன்றி உடையதாக இருக்கின்றது"

ஒவ்வொரு வீட்டுப்படலையும் ஆமி தட்டியபடி போவான்.... சப்பாத்துக் காலின் சர சர ஓசை. இடை டை "சுற்றி வளைப்புக்கள் நடக்கும்...." இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் யாரும் போய் வர முடியாது... மிகவும் இறுக்கமான கடுமையான நடவடிக்கை.... சூழ்நிலை அபாயகரமானதாக இருக்கும்.

மனிதர்கள் உள்ளே அமுங்கிப் போன காலம். வாத்தியார் அன்று... மதிய உணவில் தயிர் அதிகமாக சேர்த்தார்.... அன்று சாப்பாடு மிகவும் ருசியாக அமைந்திருந்தது... மேலும் உணவில் தயிர் சேர்த்துக் கொண்டார்.

வயிறு முட்ட நீர் அருந்தினார். சாய்மனை கட்டிலில் சாய... தூக்கம்... சொல்லாமல் வந்தது.

சில மணிநேரம்.... கடந்திருக்கும் நெஞ்சில் ஏதோ செய்ய புகைச்சல்...... இருமினார். கடுமையாக இருமினார். எழுந்து ஓடி.... வாந்தி எடுத்தார். ஓங்காளமாக....

வெளியில் படுத்திருந்த.... திலகம் வாத்தியாரின் சத்தம் கேட்டு... ஓடினாள்.

வாத்தியார் நெஞ்சை பிடித்தபடி...

திலகம் வாத்தியாரை பிடிக்க,

அவர் கீழே சாய்ந்தார்....

பொழுதும் சாய்ந்தது.

"என்ன வாத்தியார் போட்டாரோ"

"பகிடியே... ிடுகிறாய்... கல்லு மாதிரி இருந்த மனுசன்"

"என்னப்பா... நம்பேலாமல் கிடக்கு சும்மா"

"கிடக்கு கிடக்கு என்று நடக்கிற மனுசன்"

"மனுசன் நல்ல சா... பாயில கிடந்து இழுபடாமல் நிம்மதியாய் போய் சேர்ந்திட்டார்".

"வாத்தியாரின் மூத்தவள் கிளிநொச்சியில் இருக்கிறாள்"

"இப்ப இருக்கிற பிரச்சினையில எப்படி வரப் போறாள்?

இரவில் அமைதி மீண்டும் குலைந்தது.

அதிகாலை நாய்கள் குரைக்கத் தொடங்கின. தொலைவில் பிரதான வீதியில் கனரக வாகனங்களின் இரைச்சல், உறுமல்கள், வேற்று மொழி சத்தங்கள், சப்பாத்துக் காலடி ஓசைகள்.....இரண்டு மணிக்கு பின் ஊர்.... விழித்துக் கொண்டது.

விடிய ஊர் வாய் முடியிருந்தது. தெருவில் ஒருவரையும் காணவில்லை. வாத்தியார் வீட்டிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தார்கள். அரிசி மில் முன்னால் பச்சை நிற கனரக வாகனம் ஒன்று நின்றிருந்தது... அதன் பின்னால் அசைந்து வரும் பச்சை உருவங்கள்.

"எட்டிப் பார்த்தவர்கள் கத்தியபடி உள்ளே ஓடினார்கள். தொண்டை எச்சில் காய்ந்து...."

"ஐயோ.... ஆமிக்காரங்கள் வாறாங்கள் றவுண்டப்"

"வீட்டில் அழுது ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தவர்கள் தற்காலிகமாக அழுகையை நிறுத்தினார்கள்"

"எ...ன்....ன"

"இண்டைக்கு ரவுண்டப்..."

எல்லோரும் குழம்பி நின்றார்கள், நாய்கள் எல்லா பக்கத்திலேயும் குரைத்தன... வேலிகள் வெட்டப்பட்டு முறிக்கும் ஓசை.

ஹேய்ய்ய்....

வாத்தியார் வீடு இப்போது "செத்த" வீடானது. ஆமி நகர, நகர வீடுகளில் இருந்த இளம் பெடி பெட்டைகள் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிக்க வேலி பொட்டுக்களால் வாத்தியார் வீட்டில் "வாத்தியார் பெரிய வாங்கிலில் கிடந்தப்பட்டிருந்தார்" நுழைந்தனர். ஈமச் சடங்கக்குரிய கிரியைகள் செய்யமுடியாத நிலை.....கடைக்குப் போக முடியாது. ஐயரும் வரமாட்டார். மகளும் உடன் வரமுடியாது. A9 பாதை திறக்காத சூழ்நிலை.பாதை அடைக்கப்பட்டிருந்த நிலை.

வாத்தியார் வீடு பெருங்கூட்டமாக மாறிவிட்டது. பின்பக்க வேலி முறிக்கப்பட்டு.... உடன் திமுதிமுவென பல ஆமிக்காரர்கள் வீட்டினுள் புகுந்தார்கள். நேரம் காலை ஒன்பது மணியாகியிருந்தது.

புகுந்தவர்கள் நிலைமையை உணர்ந்தார்கள்.

வாத்தியாரைப் பார்த்தார்கள். பக்கத்தில இருந்தவர்களிடம் விசாரித்தார்கள். கொழும்பிற்கு லொறி அவ்வப் போது ஓடும் சின்னத்துரை தனது "சிங்களப் புலமையை" எடுத்து விட்டார்.

வாத்தியாரை சுற்றி பெரிசுகளும் இளசுகளும் சோகமே உருவமாக அமர்ந்திருந்தார்கள். ஆமிக்காரர்களை ஓரக்கண்ணால் பார்த்தபடி சின்னத்துரை சொன்னார்.

"கெதியாய் பொடியை கொண்டு போகட்டாம் வைச்சிருக்க வேண்டாமாம்"

அவசரம், பதட்டம், குழம்பிப் போன நிலை... வாத்தியார் உடலும் ஊதிக் கொண்டு வந்தது.

திலகம் அழுது... அழுது... மேலும் முடியாம சுருண்டு கிடந்தாள்.

"பெட்டிக்கு என்ன செய்யிறது"

"ஏன்? யோசிக்கிறியள்? புண்ணியத்தின்ர பெட்டி கிடக்கெல்லே...."

"கெதியாய் போய் வண்டிலையும் பெட்டியையும் கொண்டு வாங்கோ"

பறந்தோடிப் போனார்கள். புண்ணியத்தின்ர பெட்டி வந்தது. வாத்தியாரைத் தூக்கி அதில் கிடத்தினார்கள்.

"பெட்டியை திருப்பி கொண்டுவரவேண்டாம் அப்படியே எரியுங்கோ. வாத்தியார் எங்களுக்குக் கனக்கச் செய்தவர்"

தாலிக் கொடியைக் கழற்றி வைத்து திலகம் ஒப்பாரியிட்டாள். "வடிவாய் போறியள்... ஆசைப்பட்ட மாதிரி போறியள்... போங்கோ"

## தோற்றுக் கொண்டிருக்கும் வாழ்க்கை...

கடிகாரங்களின்
முட்களில்
தொங்கிக்
கொண்டிருக்கிறது
வாழ்தல்.
கரும்பலகையில்
எழுதப்படுகிற
காற்றின்
இயல்புகள்
விடைத்தாளுடன்
முடிகிறது
யாருக்கும்
புரியவேயில்லை
காற்றின் மொழி.
மெல்ல வருடுகிற
காற்றின் தாய்மை
மேகங்களை விரட்டும்
காற்றின் கோபம்
வயல்களைத் தழுவும்
காற்றின் மோகம்
புரியவே இல்லை
யாருக்கும்
மீண்டும்
மீண்டும்
கரும்பலகையில்
எழுதப்படுகின்றன
காற்றின்
இயல்புகள்...

த.அகிலன்

## முடிவு

அன்னங்களும் காக்கைகளும்
அவ்வூருக்கு அகதியாக வந்தன.
அன்னங்களைக் கண்ட காக்கைகள்
தம் சுயத்தை மறந்தன.
அன்னநடை நடக்கப்போய்
தம்நடையும் கெட்டன.
ஈற்றில் அவை ஒன்றுகூடி எடுத்த முடிவு
அவ்வூரில் அன்னங்களே இருக்கக்கூடாது!!

## துப்பாக்கி வேண்டும்!

பத்துக்கையிலும்
பலவித ஆயுதங்கள்
இருந்தாலும் கேட்டாள் என் அன்னை
எனக்கும் ஒரு துப்பாக்கி வேண்டும்!

## இருந்தது!

அவர்களிடம் என்னைப் போல்
அது இல்லை இது இல்லை
என எழுதிட முடியவில்லை!
என்னைவிடவும் அவர்களிடம்
நிறைய
நம்பிக்கை
விசுவாசம்
ஓர்மம்
சாதிக்கும் துணிவு
.............
எல்லாமே இந்தது!!

## உமக்கும் வரும்!

58முதல் இன்றுவரை
எத்தனை எத்தனை பட்டியலிடுகின்றீர்?
மொத்தமாய் திரும்பி வரும்
அப்போது தாங்க மாட்டீர்!!

செ.பவானி

## சொற்சிலம்பு-109

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | று | ய் | டு | னா | அ | ன் |
| மா | கு | லி | பா | ந் | மி | ல |
| கா | ரி | தி | ரோ | னி | ண் | டி |
| வெ | னா | ப | லி | ளை | கீ | இ |
| மூ | ட் | தா | ஷி | ர் | லி | து |
| சா | ர் | ய | க் | ஸ் | கி | ரு |
| ப் | வா | கே | ன் | சி | த் | தே |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக் களை இணைத்து கேட்கப் படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

### சொற்சிலம்பம் -107 இன் விடைகள்

01. சிறுத்தை.

02. மோனாலிசா.

### சொற்சிலம்பம் - 107 இன் பரிசுக்குரியவர்

கி.மதுராந்தகன், தரம்-5C
மு/ஸ்ரீசுப்பிரமணிய-வித்தியாசாலை,
புதுக்குடியிருப்பு.

### சொற்சிலம்பம் - 107 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. அ.எழில்மதி, தரம5A, கிளி/இராமநாதபுரம் ம.வி, இராமநாதபுரம்.

02. இ.நிலானி, தரம்-9A, கற்சிலைமடு அ.த.க -பாடசாலை.

03 பா.கலாதீபன், 128/1,முரசுமோட்டை, பரந்தன்.

04. கெ.பிரசன்னா, தரம்-8B, மு/யோகபுரம் ம.வி, யோகபுரம்.

05. T.விதூசன், தரம்-5C, மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.

06. ஜே.சம்சியா, இல:14 பெரியகுளம், கண்டாவளை.

07. ஜெ.யதுர்சிகன் தரம்-5A கிளி/இராமநாதபுரம் ம.வி, இராமநாதபுரம்.

08. சு.பால்ராஜ், தரம்-5, றோ.க.பாடசாலை, புதுக்குடியிருப்பு.

01. மிகச் சிறிய முட்டையிடும் பறவையின் பெயர்?

01) ....................................

02. திருமந்திரம் என்ற நூலின் ஆசிரியரின் பெயர்?

01) ....................................

சொற்சிலம்பம்-109
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ..........................................

முகவரி :-..........................................


..........................................

..........................................

## கைவண்ணம்



வி.சுஜிகரன், தரம்-5C
புதுக்குடியிருப்பு.




# தேனீ

பூச்சிகள் வகுப்பில் கூட்டு குடியிருப்பில் கோலாகலமாக வாழும் பூச்சியினங்கள் சில உள்ளன. தேனீக்கள் அத்தகைய பூச்சியினங்களில் ஒன்று. ஹைமெனோடெரா வரிசையைச் சேர்ந்தவை இவை.


ஒரு தேன் கூட்டில் இராணி தேனீக்கள், பணி தேனீக்கள், சோம்பன் எனப்படும் ஆண் தேனீக்கள் என்று மூன்று பிரிவுகள் இருக்கும். பணி தேனீக்களும் பெண் தேனீக்கள் தான். இராணி தேனீக்களும் பெண் தேனீக்களும் கருவுற்ற முட்டைகளிலிருந்து வெளி வருபவை. ஆண் தேனீக்கள் கருவுறா முட்டை களிலிருந்து வெளி வருபவை. முட்டையிலிருந்து மூன்று நாட்களில் இளரி வெளிவரும். இது வளரும் வரை பணித் தேனீக்கள் இதற்கு ஒரு நாளைக்கு ஆயிரம் முறை உணவு ஊட்டுகின்றன. முதல் மூன்று நாட்கள் இளரிக்கு ராயல் ஜெல்லி எனும் அரசக் கூழைக் கொடுக்கின்றன. இந்த அரசக் கூழ் தொண் டைப் பகுதியிலுள்ள ஒரு சுரப்பியிலிருந்து சுரக்கப்படு கிறது. இளரியை சோம்பனாகவோ அல்லது பணித் தேனீக்களாகவோ வளர்க்க விரும்பினால் மூன்று நாட் களுக்குப் பிறகு அதற்குத் தேனும் மகரந்தமும் கலந்த தேனீ ரொட்டியை ஊட்டுகின்றன. ஒரு இளரியை ராணி யாக வளர்க்க விரும்பினால் அதற்குத் தொடர்ந்து ராயல ஜெல்லியே உணவாகக் கொடுக்கப்படுகிறது.

ஒரு தேன் கூட்டில் ஒரு இராணி தேனீயும், நூற்றுக்கும் குறையாத சோம்பன்களும் மற்றும் பணித் தேனீக்கள், இளரிகள் உட்பட 80000 தேனீக்கள் வரை இருக்கும். இராணி தேனீயின் வேலை முட்டைகளிடுவது. சில சமயங்களில் ஒரே நாளில் 1500 முட்டைகள் வரை இடும். சோம்பன்கள் எவ்வித வேலையையும் செய்யாது. கூடு கட்டுவது, உணவு சேகரித்துக் கொண்டு வருவது, இளரிகளை ஊட்டி வளர்ப்பது முதலான அனைத்து வேலைகளையும் செய்வது பணித் தேனீக்களே.

முட்டைகளிடவும் தேனைச் சேகரித்து வைத் துக்கொள்வதற்காகவுமே தேன் கூடுகள் கட்டப்படுகின் றன. இந்தக் கூடு ஆறு பக்கங்கள் கொண்ட ஏராளமான நுண்ணறைகளைக் கொண்டது. நுண்ணறைச் சுவர் களின் பருமன் ஒரே மாதிரியாக இருக்கும். இந்த அறையில்தான் முட்டைகள் இடப்படுகின்றன. தேனும் மகரந்தமும் சேமித்து வைக்கப்படுகின்றன. கூட்டைச் சுத்தமாகவும் வெதுவெதுப்பாகவும் காற்றோட்டமுடைய தாகவும் வைத்துக்கொள்ளும் பொறுப்பு பணி தேனீக்களுடையது. இந்தக் கூடு பணி தேனீ சுரக்கும் ஒருவித மெழுகுப் பொருளிலிருந்து கட்டப்படுகிறது.

உருவத்தில் பெரிய இராணித் தேனீயின் அறை கூம்பு வடிவில் பெரியதாக அமைந்திருக்கும். நடுத்தர அளவுடைய சோம்பன்கள் அறை இராணித் தேனீயின் அறையை விடச் சிறியது. பணித் தேனீக்களின் அறை மிகச் சிறியது.

பணித் தேனீக்கள் தேனைத் தங்களது தேன் பையில் ஏந்தி வரு கின்றன. மகரந்தத்தைப் பின்கால்களில் பை போன்று அமைந்துள்ள மகரந்தக்



கூடையில் சுமந்து வருகின்றன். எடுத்து வந்ததை கூட்டிலுள்ள இளரிகளுக்கும் சோம்பன்களுக்கும் ஊட்டிய பின் மீதமுள்ளவை சேமிப்பறையில் சேமித்து வைக்கப் படுகின்றன.

தேனிருக்குமிடத்தை முன்னோடித் தேனீக்கள் முதலில் சென்று நோட்டமிட்டு வந்து மற்ற தேனீக் களுக்கு எட்டு எனும் எண் வடிவில் சுற்றிப் பறந்து தகவல் தெரிவிக்கும். இந்தத் தகவல் பரிமாற்றம் நடன மாடுவது போலிருப்பதால் இதற்குத் தேனீக்கள் நடனம் என்று பெயர்.

புதிய இராணித் தேனீ வளர்ந்ததும் சில சோம் பன்களுடன் வெளியே பறந்து சென்று இனச் சேர்க்கை புரிந்து திரும்புகிறது. பின் தனது முட்டையிடும் தொழி லைச் செய்ய ஆரம்பிக்கிறது. புதிய கூடு அமைக்கும் பணியும் துவங்குகிறது. குளிர்கால ஆரம்பத்தில் சோம் பன்கள் இறந்துவிடும்.

## பாம்பின் வேதனை



# வீடு

# வேலைக்குப்போகும் பெண்கள்

இன்றைய பொருளாதார நெருக்கடிகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பல பெண்கள் வேலைக்குப் போகின்றனர். இத்தகைய பெண்மணிகள் பல விதமான இடர்பாடுகளோடு தான் தம் வாழ்வை கொண்டு நடத்துகின்றனர்.

பொதுவாக எல்லாப் பெண்களுக்கும் இருக்கக் கூடிய பிரச்சினை வேலைப்பளு. காலை எழுந்ததும் சமைக்க வேண்டும். அடுத்து கணவன், பிள்ளைகளின் கடமைகள் இவ்வளவும் செய்துகொண்டிருக்கையில், வீட்டிற்கு விருந்தினர் வந்துவிட்டால் அதை விட



எத்தனையோ பெண்கள் நேரத்துக்கு உணவு அருந்தவே நேரமற்று தவித்துக்கொண்டு வேலைக்குப் போகின்றனர். இவ்வளவற்றையும் ஏன் அவள் தாங்கி நடக்கிறாள். தன்னுடைய குடும்பம் கஷ்டம் அற்று சிறப்பாக வாழ வேண்டும். பிள்ளைகளின் கல்வி நல்ல முறையில் அமைய வேண்டும் என்ற மனம் நிறைந்த எதிர்பார்ப்புக் களோடு தன்னை வருத்தி பணத்தைச் சேர்க்கின்றாள். எதற்காக, தன் பிள்ளைகளின் ஒளிமயமான எதிர்காலத் திற்காக இப்பெண் கொஞ்சம் கொஞ்சமாய் சேர்க்கிறான்.

இவளின் கடமையை குடும்பத்தில் உள்ளோர் புரிந்து கொண்டு மனித நேயத்தோடு நடந்தால் இப்

**வேலைக்குப் போகும் பெண் களுக்கு நிச்சயமாகக் கணவன்மாரின் ஒத்துழைப்பு வேண்டும்.**

பெண்களும் மனமகிழ்வடைவார்கள்.

வேலைக்குப் போகும் பெண்களுக்கு நிச்சய மாகக் கணவன்மாரின் ஒத்துழைப்பு வேண்டும் நாள் முழுக்க அலுவலகத்தில் இருந்து களைத்து வரும் மனையாளை மகிழவைத்து நாளைய விடியலை இன்பத்தோடு பிறப்பிப்பது கணவன்மாரின் பொறுப்பு.

உண்மையில் சில வீடுகளில் பெண் எவ்வளவு தான் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்தபோதும் அங்கே அவளை ஆதரவாய் நோக்குவோர் குறைவு என்றே சொல்லலாம்.

தலையிடி. வேறு ஒன்றும் இராது. உரிய நேரத்தில் எம் கடமைகளை முடித்து அலுவலகம் போகவேண்டும் என்ற நினைப்பு அவர்கள் மனதை ஆர்ப்பரித்துக்கொண்டே இருக்கும். ஒருவாறு எல்லாவற்றையும் நிறைவுசெய்து கொண்டு தன்னுடைய வேலைக்காக அலுவலகம் போகின்றாள். அங்கும் சில வேளைகளில் பல விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை பெண்களுக்கு ஏற்படுகின்றது.

வேலை முடிந்து வீடு வந்தால் பிறகும் வீட்டு வேலை. இப்படியே இவளின் வாழ்க்கை ஓய்வற்றுக் கிடப்பதை குடும்பத்தில் இருப்போர் கவனிக்கிறார்களா இல்லை. தம்முடைய நோய் துன்பங்களை இவளிடம் சொல்லும் கணவன் பிள்ளைகள் மனைவியின் உடல் நலத்தில் அக்கறை காட்டுவது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. எவ்வளவு களைப்போடு வந்தபோதும் தன்னுடைய கணவன் பிள்ளைகளின், நலனில் அக்கறை காட்டும் இல்லாள் மீதும் கணவன் பிள்ளைகளும் அக்கறை செலுத்த வேண்டும்.

இன்று வீட்டில் இருந்து வீண்வம்பளந்து கொண்டிருக்கும் பெண்களுக்கும் வேலைக்குப் போகும் பெண்களுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது.

ஏனெனில் வீட்டில் இருக்கும் கணவன் பிள்ளைகள் எல்லாம் அம்மா செய்வா எண்டு அவளின் தலையிலே போட்டுவிடுவார்கள். அவர்களின் தேவை களைப் பூர்த்தி செய்ய பெண் என்ன செய்கிறாள். தன்னுடைய உடல் உபாதைகளை மறைத்து வலுவை வரவழைத்து தன்னால் முடியுமானவரை யாவற்றையும் ஒரு இயந்திரம்போல் செய்து முடிக்கின்றாள். இயந்திர மும் எண்ணை இல்லாது இடையில் பழுதடையும் நிலையில்நின்று விடுகிறது. ஆனால் பெண் அப்படி அல்ல. தன் உடம்பை வருத்தி முறித்தும் தன் கணவன் பிள்ளைகளுக்காக இயங்குகிறாள்.

இப்படியான இக்கட்டுக்களில் வேலைக்கும் போய் உங்களை சிறப்பாக வாழவைக்கும் பெண்களின் நிலையை இனியாவது கண்திறந்து பாருங்கள். பெண் என்றால் அவளுக்கு ஓய்வு தேவை தன்னுடைய குடும்பச் சுமை குறைக்க. இன்று பல பெண்கள் குறைக்க முடியாத சுமைகளையும் சுகமெனச் சுமந்துகொண்டு தான் இருக்கின்றனர். இதையார் தான் உணர்கின்றனர்.

**சு.சிவாஜினி**



# கவலை எதற்கு..?

மனித மனங்கள் விலங்குகளிடமிருந்து வித்தியாசமானவை. எல்லோருக்கும் ஏதோவிதத்தில் கவலைகளும், பிரச்சினைகளும் உண்டு. அதை எதிர்த்துப்போராடவேண்டும்.

அதைவிட்டுவிட்டு எனக்குத்தான் எல்லாத் துயரங்களும் என்று எண்ணாதீர்கள் சிலர் இதற்காக ஒதுங்கி அழுவார்கள். அழுவதில் என்னபயன்!

அப்படியிருந்தால் கவலை இன்று எம்மோடு வளரும். அதனை எதிர்த்து வெற்றிகொள்ளுங்கள். நீங்கள் அதற்கு இடம்கொடுத்து விட்டீர்களானால் அது உங்கள் மேல் ஏறி செவியை கடிக்கும் அளவிற்கு வந்துவிடும். இதனால் உங்கள் மனமும் குட்டிச்சுவராகிவிடும்.

கவலையையும் சந்தோசமாக ஏற்றுக்கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள். எமக்கு இரவும் வேண்டும், பகலும் வேண்டும். அதேபோல் கட்டாயம் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரத்தான் வேண்டும். மனித வாழ்க்கையென்றால் அப்படித்தான்.

மனதில் இயல்பாக நம்பிக்கை உருவாகவேண்டும். அது

**மனதில் இயல்பாக நம்பிக்கை உருவாகவேண்டும். அது இல்லாவிட்டால் இந்த உடல் வெதும்பிப்போய்விடும்.**

இல்லாவிட்டால் இந்த உடல் வெதும்பிப்போய்விடும். எனவே மனம் இயல்பான நிலைக்குவர ஒரு சந்தர்ப்பம் அளியுங்கள். இது கஷ்டமான விடயம் அல்ல. கவலையை விடுங்கள்.

சில மனிதர்கள் உங்களை விளங்கிக்கொள்ளாமல் மற்றவர்களின் கதைகளைக் கேட்டு உங்களை கோபித்திருக் கலாம். அல்லது உங்கள்மேல் தவறான அபிப்பிராயம் வைத்திருக்கலாம். அதை நினைத்து நொந்துபோகாதீர்கள். யாரும் "நரம்பு இல்லாத நாக்கால்" எதையும் கூறுவார்கள். அதை நினைத்துக் கலங்காதீர்கள்.

அவர்களின் கதையால் நீங்கள் ஒருபோதும் பாதிக்கப்பட மாட்டீர்கள். அதை குப்பையில் போட்டு விடுங்கள். "காகம்திட்டி மாடு ஒருபோது சாவதில்லை" என்று ஒரு பழமொழி உண்டு.

உங்கள் உள்ளம் என்றும் உடைந்துபோகக்கூடாது. என்ன இந்த வாழ்க்கையென்று எண்ணமே தோன்றக்கூடாது.எவரும் எதையும் சொல்லட்டும். நீங்கள் இவற்றை மனதில் போட்டு வைத்தால் அடுத்த கட்ட வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கமுடியாது.

உங்கள் எதிர்பார்ப்புகள் சிலவேளை பயனளிக்காமல் போய்விட்டால் திடீர் என்று உடைந்து விடாதீர்கள்.

**எஸ்.பூலோஜினி**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்க ங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம் – 70

பெயர்:.....................................................

முகவரி:...................................................

...................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.


## வீட்டு மருத்துவக் குறிப்புகள் சில

*எறும்பு அல்லது வேறு வகை பூச்சிகள் கடித்தால் ஏற்படும் வலியையும் வீக்கத்தையும் போக்க கடிபட்ட இடத்தில் அப்பச் சோடாவைத் தண்ணீரில் குழைத்துத் தடவவும்.*

★ ★ ★ ★

*குளவி, தேனீ கொத்திய இடத்தில் ஒரு வெங்காயத்தை நறுக்கி அழுத்தித் தேய்க்கவும். வெங்காயச் சாறு விஷத்தை முறிக்கும்.*

★ ★ ★ ★

*வாழைத்தண்டை வாரம் இருமுறை சாப்பிட்டால் ஜீரணசக்தி அதிகமாகும். வாழைத் தண்டைத் துருவி சாறு பிழிந்து குடித்தால் வயிற்று வலிக்கு நல்ல கை மருந்தாகும்.*

★ ★ ★ ★

*பச்சை சுண்டைக்காயை வாரம் ஒரு முறை சமைத்து உண்டு வரவும். இது குடலுக்கும் நரம்புத்தளர்ச்சிக்கும் சிறந்த மருந்தாகும்.*

★ ★ ★ ★

*மாதுளம் பிஞ்சை மெதுமையானதாக அரைத்து மோரில் கலந்து குடித்தால் வயிற்றுக் கடுப்பு சரியாகும்.*

★ ★ ★ ★

## உருளைக்கிழங்கு மசாலா




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | - 250 கிராம் |
| வெங்காயம் | - 5 |
| பச்சைமிளகாய் | - 3 |
| கறிவேப்பிலை, கறுவா | - அளவாக |
| கடுகு | -1/2தே.க |
| பெருஞ்சீரகத்தூள் | 1/2 தே.க |
| மஞ்சட்தூள் | -1/2 தே.க |
| உப்பு | -அளவாக |
| தேங்காயெண்ணெய் | -1 1/2மேசைக் கரண்டி |

செய்முறை:-

★உருளைக்கிழங்கை அவித்து உரித்து அரைப்பதமாக உதிர்த்து மஞ்சள்தூள், உப்பு சேர்த்துக் கலந்துகொள்ளவும்.

★வெங்காயம், மிளகாய், கறிவேப்பிலை இவற்றைச் சுத்தம் செய்து குறுணலாக வெட்டி நன்றாகக்கொதித்த எண்ணெயிலிட்டு கடுகையும் சேர்த்துக்கொள்ளவும்.

★தாளிதப் பொருட்கள் பொன்னிறமாகியதும் உதிர்த்த உருளைக்கிழங்குக் கலவையை இட்டு பெருஞ்சீரகத்தூளையும் சேர்த்து நன்கு கிளறி இறக்கிக்கொள்ளவும்.

# விழிக்குறைக்கு ஒரு வழித்துணை வெள்ளைப்பிரம்பு





எங்களுக்கும் உறுப்புக்கள் உருவம், உணர்வுகள், பாசம், உணர்ச்சிகள், இல்லையா? ஒரே உணர்வு, எம்மையும் போஷிக்கின்றது. ஒரே ஆயுதங்கள் எம்மையும் காயப்படுத்துகின்றன. ஒரே நோய்கள் எம்மையும் பீடிக்கின்றன. ஒரே மருத்துவர்கள் எம்மையும் குணப்படுத்துகின்றனர். ஒரே பருவகாலங்கள் எம்மையும் உஷ்ணமாக்கி குளிரவைக்கின்றன. எங்களைக் குத்தினால் இரத்தம் பீறிடாதா? கூச்சம் காட்டினால் சிரிக்கமாட்டோமா? இவ்வாறு நாம் கேட்கவில்லை. உலகப்புகழ்பெற்ற நாடக ஆசிரியர் “வில்லியம் ஷேக்ஸ்பியர்” என்பவர் தன்னுடைய உலகப்பிரசித்திபெற்ற “வெனிஸ் நகரத்து வணிகன்” எனும் நாடகத்தில் கேட்கின்றார்.

பார்வையற்றவர்கள் தனித்து வீதிகளில் நடமாடுவதன் நோக்கம் என்ன? அவர்கள் ஏன் தமக்குத்தாமே பாதுகாப்பின்மையைத் தேடிக்கொள்ள வேண்டும்? அதனை விட அவர்கள் தம் வீடுகளில் தங்கியிருப்பது அதிகம் பாதுகாப்பானதல்லவா? இங்கனமாக சிலர் வினா எழுப்பக்கூடும். இத்தகைய வினாக்களுக்கு ஷேக்ஸ்பியர் மேற்கொண்ட கூற்று ஒரு தக்க பதிலாக அமையும்.

ஆம் விழிப்புலனற்றவர்களுக்கும் ஓர் இதயம் உண்டு. எல்லோரையும் போலவே அவர்களுக்கும் உணர்வுகளும், உணர்ச்சிகளும், பாசமும் நிறைந்திருக்கின்றன. அவர்களுக்கும் ஒரு வயிறு இருக்கின்றது. அதற்கும் பசிக்கத்தான் செய்கின்றது. எனவே சாதாரணமானவர்களைப் போலவே அவர்களுக்கும் கல்வி, தொழில் போன்ற அடிப்படைத் தேவைகள் இன்றியமையாதவையாகின்றன. அந்தவகையிலே அமெரிக்காவைச் சேர்ந்த கெலன் கெல்லர் பார்க்கமாட்டார், கேட்கமாட்டார், பேசமாட்டார். இவ்வாறு மூன்று புலன்களையும் இழந்திருந்தாலும் இன்று சிறந்த இலக்கியப்படைப்பாளர்கள் மத்தியிலே ஒருவராக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான திறமையுடைய விழிப்புலனற்றோரும் கல்வி கற்கவேண்டுமென்பதற்காகவே பிரான்ஸைச் சேர்ந்த “லூயி பிரேயிலி” என்பவர் பிரேயிலி முறையிலான எழுத்தைக் கண்டு பிடித்தார்.

இதன் பின்னரே விழிப்புலனற்றோர் கல்விகற்றனர். எனவே இத்தகைய விழிப்புலனற்றோர்களுக்கு வெளியுலகத் தொடர்பும் அவசியமாகின்றது. அந்தவகையிலே ஜோய்ஸ்கான் அவர்கள் விழிப்புலனற்றோர் பற்றிக் குறிப்பிடும்போது அது ஒரு அசௌகரியம் எனக்குறிப்பிடுகின்றார். இவர் அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு ஒரு நாயின் துணையுடன் வந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய விழிப்புலனற்றோர் தமது குறையை ஒரு பொருட்டாகப் பார்ப்பதில்லை. எடுத்துக்காட்டாக மில்ரன் என்ற ஆங்கில இலக்கியப் படைப்பாளி பல இலக்கியங்களைப் படைத்துக்கொண்டிருந்தார். திடீரென தனது பார்வையை இழந்தபோது இழந்த சொர்க்கம் (Paradiise lost) எனப்பெயரிட்டு ஒரு இலக்கியத்தைப்படைத்தார். பின்னர் அது ஒரு குறைபாடு இல்லையென உணர்ந்து மீண்ட சொர்க்கம் (Paradiise Agen;) என்ற இலக்கியத்தைப்படைத்தார். எனவே ஒரு சாதாரண மனிதனைப்போல விழிப்புலனற்றோருக்கும் பல அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. ஆகவேதான் இத்தகைய தேவைகளைப் பிறருடைய உதவியின்றிப் பூர்த்தி செய்வதற்காகப் பலர் வெள்ளைப்பிரம்பை உபயோகிக்கின்றனர். இதுவே அவர்களது வழித்துணையாகின்றது.

எனவே வெள்ளைப்பிரம்பு பற்றி நோக்குதல் சாலவும் பொருத்தமானது. அந்த வகையிலே 1953 ஆம் ஆண்டு அரிமா சங்கம் இவ்வெள்ளைப்பிரம்பை அறிமுகப்படுத்தியது. வெள்ளைப்பிரம்பு என்றால் என்ன? என்று இன்று பலரிடம் கேட்டால் விடையளிக்க மாட்டார்கள். வெள்ளைப்பிரம்பு என்பது சர்வதேச ரீதியாக சட்டரீதியாக கண்பார்வை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு அடையாளச்சின்னமாகும். நகர்க்காவலர்கள், தபாற்காரர்கள் போன்றோருக்கு வழங்கப்படும் விசேட அடையாளச்சின்னம் போல, விழிப்புலனற்றோர்களுக்கு வழங்கப்படும் விசேட அடையாளச் சின்னமே வெள்ளைப்பிரம்பாகும். இது சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

ஏனெனில் எமது நாட்டில் விழிப்புலனற்றோர் பாவிக்கும் வெள்ளைப்பிரம்புகளையே அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாட்டிலுள்ள விழிப்புலனற்றோரும் பாவிக்கின்றனர். இது அடையாளச் சின்னம் மட்டுமல்ல அது பார்வையற்றவரைத் தனித்து இயங்கவைக்கும் ஒரு சாதனமுமாகும். மேலும் இது அவர்களது கண்களுக்குச் சமமானதாக மதிக்கப்படுகிறது. இப்பிரம்பு பார்வையுள்ள வழிகாட்டியைப் போன்றது எனவும் கருதப்படுகின்றது. இவற்றைவிடவும் வெள்ளைப்பிரம்பு என்பதற்கு மேலான கருத்தும் உண்டு. அதாவது பார்வையற்றவர்களுக்கு பார்வையுள்ளவர்களிடமிருந்து உதவியைக்கோரும் அடையாளச்சின்னமாகும். பார்வையிழந்தவர்கள் இதன் உதவியுடன் நீண்டதூரம் தனித்து இயங்கிய போதும் கூட பல சந்தர்ப்பங்களில் பார்வையுள்ளவர்களிடமிருந்து தவிர்க்கமுடியாதபடி சில உதவிகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மக்கள், வாகனங்கள் நெரிசலாகவுள்ள வீதியைக் கடப்பதற்குச் சிரமங்கள் இருக்கக் கூடும். அச்சிரமத்தைப் போக்குவதற்கு வெள்ளைப்பிரம்பு பொதுமக்களிடமிருந்து உதவிகோருகிறது. இவ்வெள்ளைப்பிரம்பு இவ்விதமாக பாதசாரிகளிடத்தில் உதவியைக் கோரும் ஒரு கருவியாகும். எனவே வெள்ளைப்பிரம்பு என்பது பல வழிகளில் விழிப்புலனற்றோருக்கு உதவிபுரிகின்றது என்பதை அறிய முடிகின்றது.

அடுத்ததாக வெள்ளைப் பிரம்பினை உபயோகிக்கும் முறையினை நோக்குமிடத்து வெள்ளைப் பிரம்பு பார்வையற்ற ஒருவர் பிறர் உதவியின்றி சுயாதீனமாக நடக்க எவ்வாறு உதவுகின்றது என்பது பலருக்கு புரியாத புதிராகவேயுள்ளது. அந்தவகையிலே அவற்றினை நோக்கின் ஒருவர் வெள்ளைப்பிரம்பினை வெறுமனே தட்டுவது போலவே தோன்றும். ஆனால் சற்று உன்னிப்பாக அவதானித்தால் அவர் அப்பிரம்பினை வலது இடது பக்கமாகத் தட்டுவது புலனாகும். மேலும் சற்று உன்னிப்பாக அவதானித்தால் பிரம்பால் வலது பக்கம் தட்டும் போது அவரது இடதுகால் முன்செல்வதையும் இடது பக்கம் தட்டும் போது வலது கால் முன்செல்வதையும் காணமுடிகிறது. ஆம் வெள்ளைப்பிரம்பைத் தட்டுவதில் ஒருவித ஒழுங்கும், நுட்பமும் உண்டு. இதில் வலது, இடது பக்கங்கள் முறையே ஒன்று இரண்டு என இலக்கங்கள் இடப்பட்டுள்ளன. இவர்கள் வீதியிலுள்ள பள்ளம் மேடுகளைக் கண்டுகொள்வதற்காகவே இப்பிரம்பு தட்டப்படுகிறது.

மேலும் பல சந்தர்ப்பங்களில் பார்வையற்றோர் மிக நேர்த்தியாக ஓரம் பிசகாமல் நடந்து செல்கின்றனர். காரணம் மேலே கூறப்பட்ட ஒன்று. இரண்டு என்ற இலக்க விதிகளேயாகும். எனினும் ஒவ்வொரு கண்பார்வையற்றவரும் தாம் காலெடுத்து வைக்கும்போது அடுத்த ஒரு அடியை மட்டுமே காணுகின்றனர் என்ற உண்மையை பொது மக்கள் அனைவருமே அறிந்திருக்கவேண்டிய விடயமாகும். இச்சந்தர்ப்பத்தில் ஒரு பிரபல ஆங்கிலப் பாடலாகிய “லீட்கைன்ட்லி லைட்” என்னும் பாடலின் இரு அடிகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். “தூரக்காட்சியைப் பார்ப்பதற்கு நான் கேட்கவில்லை, அடுத்த ஓர் அடியை எடுத்துவைக்க விரும்பினால் போதும்” இவ்விரு அடிகளிலும் கூறப்பட்ட விதமாக அடுத்த ஓர் அடியை எடுத்து வைக்க உதவுவதே வெள்ளைப்பிரம்பாகும். மிகுதி அடிகளையும் தூரக்காட்சிகளையும் அவசியம் ஏற்படும் போது காட்டிக்கொடுக்க வேண்டியது பொதுமக்களுடைய கடமையும் பொறுப்புமாகும். மேலும் இவர்கள் வெள்ளைப்பிரம்பை இரண்டாக மடித்தால் ஒருவர் வீதியை கடக்கப் போகிறார் என்று அர்த்தம். நான்காக மடித்தால் பஸ்ஸில் ஏறப்போகிறார் என்று அர்த்தம், இவ் நான்கு துண்டங்களும், உறுதி, ஊக்கம், உழைப்பு, உயர்வு என்பதைக் காட்டிநிற்கும்.

மேலும் வெள்ளைப்பிரம்பும் சட்டமும் என்பதை எடுத்துக்கொண்டால் 1930 ஆம் ஆண்டு அமெரிக்கா இலினோய்ஸ் மாவட்டத்திலுள்ள பியோரியா எனுமிடத்தில் “வெள்ளைப்பிரம்பு கண்பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமென சட்டம் கொண்டுவரப்பட்டது” இதனைச் சாதித்தவர்கள் “ லயன்ஸ் கழகத்தினராவர்” இதனைத் தொடர்ந்து பல நாடுகள் வெள்ளைப் பிரம்பிற்கு சட்ட அங்கீகாரம் அளித்தனர். எனினும் ஒரு சில சட்ட உரிமைகள் மாத்திரமே சட்டத்திலுள்ளன. அவையாவன;

☞ வெள்ளைப்பிரம்பைத் தாங்கிச் செல்பவர்களுக்கு வீதியில் முதல் நடந்து செல்வதற்கு உரிமையுண்டு.

☞ அடுத்து விழிப்புலனற்றவருக்கு வீதியை முதலில் கடக்க உரிமையுண்டு.

☞ மேலும் கண்பார்வையற்ற ஒருவர் வெள்ளைப்பிரம்பை நான்காக மடித்து வீதிக்குக் குறுக்கே நீட்டினால் அவர் பஸ்ஸில் ஏறப்போகின்றார் என்பதை அறிந்து அது பஸ்தரிப்பிடம் இல்லாவிட்டாலும் சாரதி பஸ்ஸை நிறுத்தி அவரை ஏற்றிச் செல்லக் கடமைப்பட்டுள்ளார்.

☞ மேலும் பல நாடுகளில் ஒரு சைக்கிள் ஓட்டியால் அல்லது வாகனச் சாரதியால் கண்பார்வையற்ற ஒருவருக்கு நீதிமன்றம் செல்லக் கூடியளவிற்கு ஆபத்து ஏற்படுமாயின் நீதிமன்றில் ஏனையோருக்கு வழங்கும் தண்டனையிலும் பார்க்க கடுமையான தண்டனை வழங்கவேண்டும் எனச் சட்டவல்லுனர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறாக சிறப்பும் மேன்மையும் வழங்கப்படும் வெள்ளைப்பிரம்பிற்கு ஓர் பாதுகாப்பு தினம் அவசியம். எனவேதான் இவ்வெள்ளைம்பிரம்பு பாதுகாப்பு தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. இது அநேக நாடுகளில் ஒக்டோபர் 15 ஆம் திகதியே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1969 ஆம் ஆண்டு இலங்கையில் நடாத்தப்பட்ட சர்வதேச விழிப்புலனற்றோர் சம்மேளனத்தின் கூட்டத்தில் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன்று “லயன்ஸ்” கழகம் வெகுவிமர்சையாகக் கொண்டாடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போதும் வெள்ளைப்பிரம்பு ஊர்வலம் அவர்களின் செயல்திட்டக் காட்சி, வெள்ளைப்பிரம்பு பிரசாரக்கூட்டம், வெள்ளைப்பிரம்பு வழங்கல், பார்வையற்றோரின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்று வருவது வழக்கம். அதைவிட பார்வையற்றோருக்கான பலவித செயல்திட்டங்களும் இத்தினத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இத்தகைய சட்ட அங்கீகாரம் வெள்ளைப்பிரம்பிற்கு வழங்கப்பட்டாலும் அதனை கடைப்பிடிக்க ஆண்டுதோறும் வெள்ளைப்பிரம்பு தினம் கொண்டாடப்பட்டாலும் பார்வையற்றவர்கள் வீதியில் தக்க பாதுகாப்பைப் பெறுவது பொது மக்களது மனிதாபிமானத்திலேயே தங்கியுள்ளது. பார்வையற்றவர்களும் மனித ஜீவன்களே. அவர்களும் இச்சமூகத்தின் ஓர் அங்கத்தினரே.

சாதாரண பிரஜைகளைப் போல் இவர்களும் உள்ளனர் என்பதனை அனைத்துப்பொது மக்களும் உணர்ந்து அவர்களுக்கும் சமவாய்ப்பு வழங்கினால் அவர்கள் மற்றவர்களுக்குச் சுமையாக இருக்க மாட்டார்கள். மனிதாபிமானமே வெள்ளைப்பிரம்பிற்குத் தக்க பாதுகாப்பையளிக்கும். எனவே ஒவ்வொரு பொதுமகனும் வெள்ளைப்பிரம்பைத் தாங்குவோரை பாதுகாப்பது தமது கடமை, பொறுப்பு என உணரவேண்டும். வெள்ளைப் பிரம்பை மதிக்கவேண்டும். அதாவது அவர்களுக்கு அவசியமாக தேவைகள் ஏற்படும் போது அதனைச் செய்து கொடுக்கவேண்டும் என்பதேயாகும். எனவே மனிதாபிமானமே வெள்ளைப் பிரம்பை மதிக்கும்.

ஆகவே இவற்றை மனதில் கொண்டு பொதுமக்கள், வாகனச் சாரதிகள், சைக்கிளோட்டிகள், பாதசாரிகள் ஆகியோர்கள் மனிதாபிமானமாக நடந்து விழிப்புலனற்றோருக்கு உதவவேண்டும். இவ்வெள்ளைப்பிரம்பைப் பற்றி பாடசாலை மாணவர்களே அதிகம் அறிந்திருக்கவேண்டும்.

ஏனெனில் இளவயதில் இவர்களது மனதில் பதியும் கருத்து நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கக் கூடியவை. அவர்களால் பலருக்கு அதனைப் பரப்ப முடியும். இவற்றை விட போக்குவரத்து வீதிகளில் அதிகமாகப் பயணிப்பவர்களும் இவர்களே. எனவே அவர்கள் வெள்ளைப்பிரம்பைப்பற்றி அதிக கவனம் செலுத்தவேண்டும் என்பது அவசியமாகின்றது.

எனவே வெள்ளைப்பிரம்பு தினம் ஒக்டோபர் 15 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு பொது மக்கள் அனைவரும் மனிதாபிமானத்துடன் செயற்பட்டு வெள்ளைப்பிரம்பிற்கு அதிக மதிப்பளிப்பார்களென பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நாளாம் வெள்ளைப்பிரம்பு பாதுகாப்பு நாளிலிருந்து வெள்ளைப்பிரம்பிற்கு மதிப்பளிக்க நீங்களும் உறுதிசெய்தல் வேண்டும்.

**இனியவாழ்வு இல்லம், வள்ளிபுனம்.**

கால் நடை வளர்ப்பவர்கள் தங்கள் கால் நடைகளுக்கு உணவூட்டல் ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது. எனவே கால் நடை வளர்ப்பவர்கள் மேச்சல் தரையிலும் அக்கறை காட்டுவது அவசியமானதாகும்.



உண்மையில் கால்நடை பண்ணைகள் வைத்திருப்போர் தமது கால் நடைகளில் இருந்து உயர்ந்த பட்ச வருமானத்தைப் பெற்றுக்கொள்ளவே முயல்வர். இதற்கு அவர்கள் கைக்கொள்ள வேண்டிய பிரதான்மான அம்சமாகக் கருதப் படுவது கால்நடைகளுக்கு வழங்கப்படும் தீவனமே ஆகும்.

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

முக்கியமாக ஒரு பண்ணையில் மொத்தச் செலவில் கிட்டத்தட்ட 70% தொடக்கம் 80% மான செலவு தீவனத்திற்காகவே செலவாகின்றது. அதனால் தான் தீவனத்திற்கான செலவினைக் குறைப்பது முதன்மைக் காரணியாகக் கருதப்படுகிறது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் கால் நடைகளுக்கான மேச்சல் தரைகளை உருவாக்குவதன் மூலம் கால்நடைகளுக்காக தனியே தீவனம் செயற்பாடு இல்லாமற் போகின்றது.

இவ்வாறு மேச்சல் தரைகளை உருவாக்குவதன் மூலம் கால் நடைகளுக்கு சிறப்பான உணவூட்டலை செய்வதுடன் வேறுபல நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவையாவன,

தரிசு நிலங்களிலிருந்து உச்ச பயன் பெறல், கட்டாக்காலி கால் நடைப் பிரச்சினையை தீர்த்தல், கால்நடைகளுக்கான கிரமமான உணவு வழங்கல் அதன் மூலம் கூடிய உற்பத்தியை பெற்றுக்கொள்ளலாம்.

இதுதவிர பண்ணைகளை [illegible]த்திருப்போர் தத்தமது வளவுகளின் வசதிக்கு ஏற்ப மாற்று [illegible]களைக்கண்டு கொள்ள முடியும்.

தாம் வளர்க்கும் கால் நடைகளுக்கு ஏற்ப குடியிருப்பு காணிகளில் புல் வகைகளையும், வேலிகளில் இலை குழைகளுக்கான மரங்களையும் உருவாக்கி பயன்படுத்தலாம்.

புல்வகைகளில் நேப்பியர், முள்முருங்கை, கிளிசறியா, இப்பிலிப்பில் போன்றவற்றை இலை குழைகளுக் காக பயன்படுத்தலாம்.

தற்போது கிளிநொச்சியில் ஊற்றுப்புலம் மற்றும், அக்கராயன் குளம் போன்ற பகுதிகளில் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் மேச்சல் தரைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கால்நடை வளர்ப்போர் இதனை பயன் படுத்த ஊக்கப்பட வேண்டும்.

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

1972இல் தனது அமர்வுகளைத் தொடங்கியது. இந்த அமர்வுகள் 1976வரை தொடர்ந்தன.

தண்டனை வழங்கும் அதிகாரத்தை இந்த ஆணையகத்திற்கு பீலிக்ஸ் டயசின் சட்டம் வழங்கியது. றோகண விஜேவீரவும் இன்னும் பல உறுப்பினர்களும் ஆணையத்தின் முன் நிறுத்தப்பட்டனர். கிட்டத்தட்ட 390 உறுப்பினர்களுக்கு ஆணையம் கடும் காவல் தண்டனை வழங்கியது. றோகண விஜேவீர உட்பட ஐவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப் பட்டது. பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் ஏற்கனவே விசாரணையின்றி சிறிலங்காப்படை, இந்தியவிமானப்படை, தரைப்படை கூட்டு முயற்சியில் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதை ஞாயப்படுத்தும் வகையில் சிறிலங்கா இராணுவத்தின் லெப்.ஜென் சிறில் றணதுங்க இலண்டன் ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் "வியற்நாம், மலேசியா நாடுகளில் நடப்பவற்றிலிருந்து நாம் பாடம் கற்றுள்ளோம். இவர்களை நாம் முற்றாக அழிக்கவேண்டும்" என்றார். இவர் பிற்காலத்தில் வடமராட்சி மீதான ஒப்பரேஷன் லிபரேஷனை இதே நோக்குடன் நடத்தினார்.

அரசு நாடாளுமன்றத்தில் வெளியிட்ட தகவல்களின் படி 18,000 சிங்கள இளைஞர்கள் கைதாகி மறுவாழ்வு முகாம்களில் அடைக்கப்பட்டனர். இவர்களுக்கான தொழிற் பயிற்சி வழங்கப்பட்டது. மகசீன் சிறைச்சாலையில் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு பாதுகாப்புகள் நிறைந்த சிறையில் றோகண விஜேவீர அடைக்கப்பட்டார். 1977இல் புதிதாகப் பதவிக்கு வந்த ஜெயவர்த்தனா அரசு பொது மன்னிப்பு வழங்கியதோடு றோகணவிஜேவீரவையும் விடுதலை செய்தது. நவம்பர் 02,1977ஆம் ஆண்டு விஜேவீர விடுதலையானார். ஏன் விடுதலை செய்தீர்கள் என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது "இந்தநாட்டில் ஒரு நெல்சன் மண்டேலாவை உருவாக்க நான் விரும்பவில்லை" என்று ஜெயவர்த்தனா பதிலளித்தார். இது சாதுரியமான பதிலாக இரு[illegible]லும் அதற்குப் பின்னால் ஒரு கபட நோக்கம் இரு[illegible]து. எஸ்.எல்.எவ்.பிமீது குறிப்பாக அதன் தலைவி மீது றோகணவிஜேவீர தாக்குதல் நடத்துவார் என்று ஜெயவர்த்தனா எதிர்பார்த்தார். அது நடக்கவில்லை.

# மண் புழு உயிர் உரம்

மண் புழு உயிர் உரம் என்பது மண்புழுவின் கழிவுகளை குறிக்கும் சாணம். இலை, தழைகள், போன்றவற்றை மண்புழு உணவாக உட்கொண்டு கழிவுகளை வெளியேற்றுகிறது. இதை மண்புழு மட்கு, மண் புழுக் கழிவு அல்லது மண்புழு உயிர் உரம் என்று கூறுகின்றோம்.

மண்புழு உயிர் உரம் சோம்பு, சீரகம் போன்ற வடிவத்தில் கோப்பிக் கொட்டை நிறத்தில் இருக்கும். இந்த வடிவமும் நிறமும் மண்புழுக்களுக்கு அளிக்கப்படும் உணவிற்கு ஏற்ப சிறிது மாறாமல் இந்த உரத்தில் வாசனை மற்றும் நாற்றம் எதுவும் இருக்காது. (பொதுவாக மண்புழு உரத்தில் 25-40% வரை இருக்கும்)நீர் இருப்பு வைக்கும் தன்மை இந்த உரத்தில் அதிகமாதலால் ஒரு வருடம் வரை வைத்திருந்தாலும். ஈரப்பதத்தை தக்க வைத்திருக்கும். இது ஒரு நடு நிலையான உரமாகும். மண்புழு உரம் மண்ணைவிட லேசாக இருக்கும். அத்துடன் இவ்வுரத்தில் நுண்ணுயிர்கள் மிக அபரிமிதமான வளர்ச்சியடையும்.

மண்புழு உரத்தில் பயிருக்குத் தேவையான சத்துக்களான தழை, மணி, சாம்பல் சத்து(N.P.K) மற்ற இயற்கை உரங்களை காட்டிலும் அதிக அளவில் உள்ளது. இதைவிட கல்சியம், இரும்பு, கந்தகம், மக்னீசியம், மங்கனசு ஆகியவையும் தேவையான அளவில் உள்ளன. இது மட்டுமல்லாது வளர்ச்சி ஊக்கிகளான ஜிப்ரலின் ஒக்சிசன், சைற்றோகைனின் போன்றவையும் இருப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது. இது மண்புழு உரத்திற்கே மட்டுமுள்ள ஒரு சிறப்பம்சம். இந்தச் சத்துக்கள் அனைத்தும் தாவரங்கள் உடனே எடுத்துக்கொள்ளக் கூடிய வடிவில் இருக்கிறது.



மண்புழு உர உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் முழுவதும் மக்கிய பிறகுதான் மண்புழு உரமாக மாற்றப்படுகிறது. இதனால் இதில் மட்கு அதிகளவில் உள்ளது. தற்போது கிடைக்கும் இயற்கை உரங்களில் மண்புழு உரத்தில் தான் அதிக மட்கு உள்ளது. இதைவிட மண்புழு உரத்தின் காபன் நைதரசன் விகித மற்றைய இயற்கை உரங்களின் அளவை விடக் குறைவாகவே உள்ளது. அதாவது பொதுவான இயற்கை உரங்களில் 15,20 ஆக இருக்கும் காபன் நைதரசன் மண்புழு உரத்தின் 15 ஆக உள்ளது. இதிலிருந்து மண்புழு உரமே நன்றாக மக்கிய உரம் என அறியலாம்.

### மண்புழு உர தயாரிப்பு, உரத்தயாரிப்புக்கு ஏற்ற ரகம்:-

மண் புழுக்களில் மூன்று வகை உள்ளது. முதல் வகை மண்ணின் மேற்பரப்பில் வாழ்பவை. இரண்டாவது வகை- நிலத்தின் நடுப்பகுதியில் வாழ்பவை. மூன்றாவது வகை, மண்ணின் மிக ஆழத்தில் காணப்படுபவை. இவற்றில் மண்ணின் மேற்பரப்பில் இலை, தழை, சாணம் போன்றவற்றில் காணப் படும் முதல் வகை மண்புழுக்களே உரம் தயாரிக்க சிறந்தன.

உரம் தயாரிப்பதற்கு அந்தப் பகுதியில் காணப்படும் புழுக்களைத்[illegible] பயன்படுத்த வேண்டும் என்ற அவ[illegible]மில்லை. தொடர்ச்சியான மண்புழு தயாரிப்பதற்கு சிறப்பு மண்புழு ரகங்களை பயன் படுத்தினால் தான் வெற்றியடைய முடியும்.

மண்புழு உயிர் உரம் உலகில் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் சில ஆசிய ஐரோப்பிய நாடுகளில் அதிகம் பயன்படுத்தப்படும் மண்புழு வகைகள் "ஐசன்யாபேட்டிடா" மற்றும் "யுடில்லஸ் யூஜினா" என்பனவாகும்.

### மூலப் பொருட்கள்:-

சாணம், கோழி எரு, மற்ற விலங்குகளின் கழிவு, காய் கனிகளின் கழிவு, இலை தழைகள், தாவர கழிவுகள், காய்கறி சந்தை கழிவுகள், தென்னை நார் கழிவு, விவசாயம் சார்ந்த தொழிச்சாலைக் கழிவு, பசுந்தாள் செடிகள், புண்ணாக்கு வகைகள், உணவு விடுதிக் கழிவுகள், வேறு மட்கக் கூடிய பொருட்கள்.

மேற்கூறிய பொருட்களால் கிடைக்கும் பொருட்களை ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் கலந்து பயன்படுத்த வேண்டும். இந்தக் கழிவு ஒவ்வொன்றிற்கும் கார அமிலத்தன்மை மற்றும் மட்கும் தன்மை மிகவும் வேறுபட்டிருக்கும். உதாரணமாக தக்காளி போன்ற கனிகளுக்கு அமிலத்தன்மை அதிகமாக இருக்கும். தென்னை நார்க்கழிவு மட்க வைப்பதற்கு நீண்ட நாட்கள் ஆகும். இப்படி பலதரப்பட்ட கழிவுகளை அழிக்கும்போது சீரான தரமான மண்புழு உரம் கிடைக்க வாய்ப்பில்லை. இதனால் அவற்றின் கழிவுகளை அவற்றின் இயல்பிற்கேற்ப தகுந்த விகிதாசாரத்தில் கலந்து தேவைப்படின் நுண்ணுயிர்கள் விட்டு சிறிது காலம் மட்கச் செய்தபின் மண் புழுக்களுக்கு உணவாக அளிக்கலாம். களைகள், கிருமிகள், பூச்சி கொல்லி, விசிறிய தாவரக் கழிவுகள், இரசாயனப் பொருட்கள் கலந்த நகர்ப்புற கழிவுகள் ஆகியவற்றை பாவிக்காமல் இருப்பது நல்லது.

### குடில் அமைப்பு:-

மண் புழுக்களை அதிக வெப்பத்தில் இருந்தும் மண்ணில் இருந்தும் பாதுகாப்பதற்காக தொட்டி அல்லது பசுமைக்குடில் அமைக்கப்பட வேண்டும். குறைந்த அளவில் உரம் தயாரிப்பதற்கு தொட்டி முறை சிறந்தது. பசுமை குடில் போன்ற குடில்கள் "வின்ட்ரோ" என்று சொல்லப்படும் நீள வாக்கில் படுக்கை போன்ற அமைப்பினை ஏற்படுத்தி மண் புழுக்களை வளர்ப்பது அதிகளவில் உரம் தயாரிக்க சிறந்தது.

### சீதோஸ்ண நிலை:-

மண்புழு உரத் தயாரிப்பில் சில சீதோஸ்ண காரணிகளை கட்டுப் படுத்துவது அவசியம். அவைகள் முறையே வெப்பம், ஈரப்பதம், கார அமிலத்தன்மை, வெளிச்சம் ஆகியவையாகும். மண்புழு வாழ்வதற்கு ஏற்ற வெப்பநிலை 20-30$^{0}$C இந்த வெப்ப நிலையில் அதிக மாற்றம் ஏற்படும் போது மண்புழுக்கள் இறக்க வாய்ப்புண்டு. ஈரப்பதன் சரியாக பராமரிக்கப்படவேண்டும். ஈரப்பதன் குறைவாக இருந்தாலோ அல்லது அதிகமாக இருந்தாலோ அவைகள் வேறு இடத்திற்குச் சென்று விடும். மண்புழு குறைந்த வெளிச்சத்தில் தான் சிறப்பாகச் செயற்படும். அதனால் தயாரிப்பு குடில்களில் வெளிச்சம் குறைவாக இருப்பது அவசியம்.

### உரத் தயாரிப்பு:-

மண்புழு உரம் எவ்வளவு [illegible]ரிக்க வேண்டும் என்பதைப் பொறுத்து அதற்கு ஏற்ற இடம் வடிவமைக்கப்பட வேண்டும். ஒரு சதுரமீற்றரில் 2000-4000 புழுக்கள் வரை இருக்குமாறு அமைக்க வேண்டும். அதாவது பெரிய புழுக்கள் வகையென்றால் 2000 புழுக்களும் சிறிய வகை என்றால் 4000 என்ற அளவிலும் இருக்க வேண்டும். மேற்கூறியபடி சீதோஸ்ண நிலைகள் அனைத்தும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்போது மண் புழுக்கள் மூலப்பொருட்களை உணவாக உட்கொண்டு அதன் எச்சத்தை கழிவுகளாக மேற்பரப்பில் இட்டுவிடும்.

### புழு உர சேகரிப்பு:-

மண்புழுவின் கழிவுகள் அதன் படுக்கையின் மேற்பரப்பில்தான் இருக்கும். மேற்பரப்பில் உள்ள மண் புழுக்களும் அடியில் சென்றுவிடும். அப்போது மேலே உள்ள கழிவுகளை நாம் சேகரித்துக்கொள்ளலாம். இவ்வாறு சேகரிக்கப் பட்ட உரத்தை நிழலில் வைத்து பாதுகாக்கப்படவேண்டும். இந்த மண்புழு உரம் 1 வருடம் வரை வைத்திருந்தாலும் அதிலிருக்கும் சத்துக்கள் குறைவதில்லை. ஆனால் இவ்வாறு வைத்திருக்கும்போது அதனுடைய ஈரப்பதனை பராமரிப்பது அவசியம்.

### மண்புழு உயிர் உரம் பயன்படுத்தும் முறைகள்:-

மண்புழு உரங்களில் சத்துக்கள் அதிகம் இருப்பதால் மற்ற தொழு உரங்களைப்போல் அடி உரமாக பயன்படுத்தாமல் மேல் உரமாக பயன்படுத்தலாம். முடிந்த அளவிற்கு பயிர் வேர் பகுதியை மண்புழு உரம் சென்றடையுமாறு அளிக்கப்பட வேண்டும். மரத்தை சுற்றியுள்ள பாத்திகளில் மண்புழு உரம் இட்டு அதனை மண்கொண்டு மூடி விடுவது சிறந்தது. மண்புழு உரங்களோடு உயிர் உரங்களான அசோஸ்பிரில்லம், பாஸ்போ பக்றீரியா போன்றவற்றையும் இயற்கை பூஞ்சண தடுப்பான் (டிரைக்கோ டர்மா வீரிடி) ஆகியவற்றை சேர்த்து பயன்படுத்தும் போது அவை மண்புழு உரத்தில் அதிகமாக வளர்ச்சியடைந்து நிலத்திலும் நன்கு வளர்ச்சி பெற்று பெருகுகிறது. மண்புழு உரத்தை தொழு உரம் இயற்கை உரங்களோடு சேர்த்து பயன்படுத்தலாம்.

மண்புழு உரத்தில் அதிக அளவில் நுண்ணுயிர்கள் காணப்படுவதால் இதை இரசாயன உரங்களோடு சேர்த்து பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு செய்யும் போது அதிலுள்ள நுண்ணங்கிகள் அழிந்துவிடும் அபாயம் உள்ளது. ஒருவேளை இரசாயன உரமிட்ட நிலத்தில் மண்புழு உரம் இடவேண்டிய அவசியம் நேர்ந்தால் இரசாயன உரமிட்டு 15-20 நாட்கள் கழித்து பயன் படுத்தலாம்.

### மண்புழு உயிர் உரத்தின் பயன்கள்:-

* நீர் இருப்பு சக்தி அதிகளவு இருப்பதால் மண்ணின் ஈரத்தன்மையை உயரச் செய்து பயிருக்கு அதிக நாட்கள் தண்ணீர் கிடைக்கச் செய்கிறது.
* நிலத்தில் (Humas) இன் அளவு அதிகரிப்பதனால் நிலத்திலுள்ள நுண்ணுயிர்கள், உயிரிணங்கள், மண்புழுக்கள் ஆகியவற்றை வளர்ச்சியடையச் செய்கிறது.
* தாவரங்களுக்கு வேறுபட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் தொடர்ந்து அளிப்பதனால் தாவரங்களில் நுண்ணூட்டச் சத்துக்களில் குறைபாடு தவிர்க்கப்படுகிறது.
* மண்புழு உரத்திலுள்ள வளர்ச்சி ஊக்கிகள் வேர்களையும் பயிர்களையும் நன்றாக வளரச்செய்கிறது. இதனால் பயிருக்கு நோய் தடுப்பு சக்தி அதிகரிக்கிறது.
* களைகள் முளைத்தல் கட்டுப் படுத்தப்படுகிறது.
* பூ, காய், கனிகள் ஆகியவற்றின் தரத்தை உயரச் செய்கிறது. இதனால் கனிகளின் நிறம், வாசனை, சுவை ஆகியவை அதிகரிக்கின்றன.
* காய் கனிகளின் இருப்புத்தன்மை அதிகரிக்கிறது. அதாவது 8 நாட்கள் வைத்திருக்கக் கூடிய கனிகள் 10 நாட்கள் வரை கெடாமல் வைத்திருக்க முடியும். உதாரணமாக திராட்சையை கூறலாம்.
* மஞ்சள் இஞ்சி போன்ற நிலக்கீழ் தண்டு தாவரங்களில் விளைச்சலும் தரமும் அதிகமாக இருக்கும்.

என்ன மண்புழுவின் இந்தளவு சின்னஞ்சிறிய கழிவிலிருந்து இப்படி ஒரு உரமா? ஆச்சரியப்படுகிறீர்களா? சிறு துளிதான் பெரு வெள்ளம். உற்பத்தி செய்து பாருங்கள் உண்மை புரியும்.

சுமதி

நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

வடக்கு கிழக்கு மாகாண சபை

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் -II

## (நிகொட்-II)

நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆஅவ கடன் இல:- 2168-சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் -இல : 58

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவித்தி த் திட்டம் (NECORD -II) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ. அ.வ")கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னால் தொழில் தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| தொ இல | ஒப்பந்த இனங் காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ருபா) |
|---|---|---|---|---|
| 01 | NEP/NECORD-II/ID/01 | திருகோணமலை உப்புவெளி முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலைய மூன்று மாடி நிர்மாணம். | M4 கட்டடங்கள் | 260,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப்பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே. நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD குடன் M7க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்)விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்தி கரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான , அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு , அல்லது திருப்திகரமற்ற வேலைச்செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர், நிகொட் திட்டம் , 55,கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி:-026-2227434, பக்ஸ்:-026-2227401,இணையத்தள முகவரி:-www.necord.org ஈமெயில் :-necord@sltnet.lk)

06. கேள்வி ஆவணங்களை 21.10.2005 இலிருந்து 07.11.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 2,000/= ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர் , திட்டக்கேள்விச்சபை, "நிகொட்",55,கந்தசுவாமி கோவில் வீதி , திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு ,14.11.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகளிக்க முடியும்.

09. முன்கூட்டியே கேள்வி கோரல்பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 07.11.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

த.லங்காநேசன்,
தலைவர், கேள்விச்சபை,
வடக்குக் கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும்
அபிவிருத்தித்திட்டம்,
55,கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(சி.13048)

## அமெரிக்கன் DV2007 லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

DV 2006 இற்கான எமது நிறுவனம் மூலம் விண்ணப்பித்தவர்களில் பலருக்கு விசா கிடைத்துள்ளதை மிகவும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

அதேவேளை DV 2007 இற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2"x2" கலர் படம் ஒன்றுடன் எமது நிறுவனங்களுக்கு உடன் சமுகம் தரவும்.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993 (சி-12973)



விசேட தீபாவளி சலுகை

V.D.O பிரதி உணவு, உடை, மற்றும் அன்பளிப்புப் பொருள்களானாலும் எந்த அளவினதானாலும்

| சுவிஸ்லாந்துக்கான | லண்டனுக்கான |
|---|---|
| 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/= | 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/= |

ஐரோப்பா, கனடா ஆகிய நாடுகளுக்கான பொதிகளுக்கு விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993 (சி-12974)


## பணிநிலைக்கான வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன் வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 31/10/2005 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

* பணிநிலைகள் :-
  1) ஆளுகை அலுவலர்,
  2) கணக்குப் பதிவாளர்,
  3) களஞ்சியக் காப்பாளர்,
  4) கணினித் தரவுப் பதியுநர்,
  5) இயந்திர இயக்குனர்,
  6) சிற்றூழியர்.
* கல்வித் தகைமைகள் :-

| | | |
|---|---|---|
| பணிநிலை | -01 - | க.பொ.த (உயர்தர) தேர்வில் தேர்ச்சியடைந்து இருந்தல் வேண்டும். |
| பணிநிலை | -02 ,03 - | க.பொ.த (உயர்தர) தேர்வில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும். |
| பணிநிலை | -03 - | க.பொ.த சாதாரண தரத் தேர்வில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனம் ஒன்றில் கணினித் தேர்வில் தேறியிருத்தல் வேண்டும். |
| பணிநிலை | -05,06 - | ஆண்டு 8 இல் கல்வி கற்றிருப்பதுடன், பணிப்பட்டறிவும் இருத்தல் வேண்டும். |

* வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:-
  பொறுப்பாளர்,
  மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
  நாகதம்பிரான் வீதி,
  ஆனந்தபுரம்,
  கிளிநொச்சி.
* நேர்காணல் நடைபெறும் நாள் :- 04/11/ 2005 காலை 09.00 மணி
* நேர்காணல் நடைபெறும் இடம் :- மனிதவள மேம்பாட்டுப் பகுதி, நாகதம்பிரான் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
* குறிப்பு :-
  1) நேர்காணலுக்கு வருகை தருவோர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை ஏனை சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிகளுடன் வருகை தருக.
  2) பணிநிலை வேண்டுகையில் பணிநிலைகளைக் குறிப்பிட்டு அனுப்புக.

(சி. 13044)

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பொங்குதமிழ் வீரமும் புரிந்திடும் அவன் தீரமும்
சங்கு முழங்கும் ஒலியும் சரியா அவன் உறுதியும்
தெங்குபாடும் தென்றலும் சேர்ந்து தெறிக்கும்
கடலலையும்–தன்
பங்கு புகழ் பாடி நிற்குதடா
வெங்களம் ஆடி நிற்கும் வெற்றித்திருமகன்
சங்கத் தமிழ்த் தலைவன்
தன்னிகரில்லா எம் தலைவன்– தமிழ்
பங்கம் விளைவித்த பகைவன் தன் பகை முடிக்க
தங்கக்கையதனால் தானே அரவணைத்து
வங்கக்களமாடி வாகைசூடி வா என்று விடைகொடுக்க
கலாத்தன் தம்பியவன் கரிகாலன் புலிப்படையின்
வரியண்ணன் பணியேற்று வரிப்புலி சோதர் சேர்ந்து
தரங்கெட்ட பகைவருடன் படகேறிக் களமாடி
கடலன்னை மடிதன்னில் காவியமாகிப்போனான்.

**கடற்புலி**
**லெப். கேணல் கலாத்தன்**
**(செங்கண்ணன்)**
**சுந்தரலிங்கம் ஶ்ரீகரன்**

தாயின் மடியில் : 1975 – 01 – 16
தாயக மண்ணில் : 2001 – 10 – 21

தகவல்:
குடும்பத்தினர்,
மருதங்கேணி வடக்கு,
தாளையடி.

(6868)



உலா 55

# ஏ9-ஏரம்பு

# நயவஞ்சகங்களுக்கு நாங்கள் பலியாகலாமோ...?

குஞ்சுகள், நடுசுகள், மற்ற என்னை மாதிரி பழசுகள் எல்லாருக்கும் வணக்கம்! எப்பிடி உங்கட பாடுகள் போகுது? என்ரை பாட்டை என்னத்தைப் பெரிசாய் சொல்லிறது. அண்டைக்கு நான் நிண்ட வீட்டுக்கு முன்னால் சங்கக்கடை மனேச்சரோட சிக்கல் பட்டிட்டன். ஒண்டுமில்லை, அந்தாள் எனக்குத் தீபாவளி வாழ்த்துச் சொன்னது. நான் "என்ன நடந்தது?" எண்டு விளங்காமல் கேட்டன். அந்தாளும் "என்ன உமக்குத் தெரியாதோ? நரகாசுரனை அழிச்ச நாள்" எண்டிச்சிது. "அதார் நரகாசுரன்? அழிக்கப்பட வேண்டிய அளவுக்கு அந்த மனுசன் என்ன செய்தது?".

"என்ன ஏரம்பர்! உது கூடத்தெரியாதே? இந்திரனுக்குத் துன்பம் விளைவிச்ச அசுரனை விஷ்ணு அவதாரம் எடுத்து வதம் செய்தது". "ஆர் உவன் இந்திரனோ? அட படுபாவி! போறவாற பொம்பிளையளோட எல்லாம் சேட்டை விடிற இந்திரன் எல்லே. அந்தமாதிரி அம்சமாய் அஞ்சு பேர் நிரந்தரமாய் இருந்தும் அங்கை இஞ்சை எண்டு கடைசியாய் முனிவரின்ரை மனிசியையே அறியாயப்படுவான் மாறுவேசம் போட்டுக்கொண்டுபோய் ஏமாத்திட்டான்!

அப்பிடிப்பட்ட உதவாதவனுக்கு ஆர் என்ன துன்பம் விளைவிச்சாலும் எங்களுக்கென்ன? அதுக்கென்னதுக்கு விஷ்ணு மினைக்கெட்டு அவதாரம் எல்லாம் எடுத்தவர்? எட எங்கட சொந்தக்காரப் பொம்பிளைப் ... யளோட ஆராவது ... விட்டால், ஆரின்ரை பக்கம் நீங்கள் நிற்பியள் ? சமுதாயப்பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கிற உப்பிடிப்பட்டவங்களைச் சும்மா விடக் கூடாது", எண்டு நான் உணர்ச்சி வசப்பட்டுக் கெந்திப்போட்டன். அங்கை கடைக்கு வெடி, பூவிறிஸ், வாழ்த்துமடல்கள் வாங்க வந்து நிண்ட இரண்டொருபேர் என்ரை கருத்தை ஆமோதிச்சு வாங்காமலே திரும்பிப்போயிட்டினம். அதால மனேச்சருக்கு என்னில கோபம். நீங்களே சொல்லுங்கோ பார்ப்பம், நான் இப்ப என்ன பிழையாய் கேட்டிட்டன்?

> எங்கை எங்களை கொளுவி விடலாமெண்டு ஆமிக்காரர் அலையிறாங்கள் பாருங்கோ! எங்கட இயக்கம் ஆயுதத்தையும் சீருடையளையும் ஒப்படைக்கோணும் எண்டு வலிஞ்சுகட்டிக்கொண்டிருக்கிற அதே தரப்புதான், சின்னச்சின்ன முரண்பாடுகளுக்கிள்ளை சிக்கிற எங்கட சனத்துக்கு ஆயுதங்களை விநியோகிச்சு அநியாயம் பண்ணிறாங்கள்.

மற்றது பாருங்கோ. தெரிஞ்ச சனங்கள் எல்லாம் சொன்னதுகள் தான், உது உமக்குத் தேவையில்லாத சோலி எண்டு. உங்கால அடிதடி நடந்த பக்கம் போகவேண்டாம் எண்டு. இருந்தும் எனக்கு மனசு கேட்கேல்லை. அதிலையும் பாருங்கோ, இன்னும் கொஞ்சக்காலம் இதை எழுதிப்போட்டு, வேற ஏதாவதிலையும் இறங்குவோம் எண்டொரு யோசனை இருக்கிது.

அதுக்கு முன்னால எங்கட நாலு பிரச்சினையளை எழுதிப்போடோணும் எண்டு நான் இருக்கேக்கிளை, வியாழன் மாறுது, குரு பெயருது எண்டு ஆக்கள் சொல்லிறதுக்காக அடங்கியிருக்கிற ஆள் நானில்லை. அதுதான் சொல்வழி கேட்காமல் வெளிக்கிட்டனான் எட இந்த நேரத்தில ஒளிச்சிருந்து உயிர் பிழைக்கிறதெல்லாம் ஒரு பிழைப்பே!

உந்த ராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளை இருந்த இரண்டரை லட்சம் சனம் சேர்ந்து பொங்கு தமிழ் நடத்தியிருக்கிற காலத்தில, சாகப்போகிற வயசில நான் ஒளிக்கிறது விடுதலைக்கு வித்திட்ட இந்த யாழ்ப்பாண மண்ணுக்குச் செய்யிற துரோகம் எண்டு நினைச்சுத்தான் வெளிக்கிட்டனான்.

பேரினவாதக் கட்சியள் இரண்டும் வசனங்களை மாத்திப் பேசினாலும் எங்கட இனத்தின்ரை உரிமையள் விசயத்தில ஒத்த மனப்பான்மையைத்தான் கொண்டிருக்கிதுகள். அப்பிடியிருந்து கொண்டு இஞ்சை எங்கட ஊர்வழியில சச்சரவுகளை உண்டாக்கி விடிறதில இறங்கியிருக்கிறாங்கள் படுபாவியள். சில சமயங்களில எங்களை அவங்கள் நாசமாக்கிறதுக்கான சந்தர்ப்பங்களை நாங்களே அவங்களுக்கு வழங்கிற சம்பவங்களும் நடக்கிறது மிச்சம் வேதனையாய் இருக்கிது மனசுக்கு. உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்:

சகோதர அன்புக்கு உலகத்திலையே ஒப்பில்லாத எடுத்துக்காட்டாய் விளங்கிறது எங்கட பிள்ளையாரும் முருகனும் தான். அதிலையும் தம்பி முருகன் மாம்பழ விசயத்தில பிள்ளையார் தன்னைச் சுத்தீட்டார் எண்டு கோபிச்சுக்கொண்டு பழனிக்குப் போனநேரம், உடன பிள்ளையார் பின்னால போய் தனக்குக் கிடைச்ச ஞானப்பழத்தை அவருக்கே குடுத்த சம்பவங்களும், அவையளுக்கிடையில சின்னச்சின்ன கோபதாபங்களுக்கு அப்பால இருக்கிற விட்டுக்கொடுப்பையும் அன்பையும் உணர்த்திது.

சண்டையள் வரக்கூடாது எண்ட காரணத்துக்காகத் தான் தனித்தனியான தெய்வத்தோற்றங்களை ஒண்டுக்கொண்டு உறவான குடும்ப உறுப்பினர்களாக பிற்காலத்தில சமயப் பெரியார்கள் சித்தரிக்கவேண்டி ஏற்பட்டிது. அப்பிடியிருக்க உப்பிடி கடவுளின்ரை ஆலயங்களைக் காட்டி அடிபட்டு, சிங்களப்பலியெடுப்புகளுக்கு நாங்கள் இரையாகப்படாது பிள்ளையள்!

மற்றதொரு நல்ல விசயமாக சூழல் விழிப்புணர்வு நாள் எங்கட நாடு முழுக்க பின்பற்றப்பட்டதைச் சொல்லலாம். ஆனால், அண்டைக்கு இஞ்சை என்ரை பள்ளிக்கூடக் கால கூட்டாளி பென்சனியர் பேரம்பலத்தார் சொன்ன விசயத்திலயும் எல்லாரும் விழிப்பாய் இருக்கோணும். அந்தாளின்ரை கதையின்படி இனி எங்கட சூழல் எல்லாம் கெதியில அழகாயும் சுத்தமாயும் வந்திடுமாம். ஏனெண்டால் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் வந்ததுதான் அதுக்குக் காரணமாம்.

ஆளாளுக்கு நாங்கள் எல்லாரும் கண்ணை மூடிக்கொண்டு குப்பையளைக் கொட்டிட்டு, சூழல் ஆணையம் எல்லாம் செய்யுமெண்டு நாங்கள் இருப்போமாய் இருந்தால் ஒண்டுமே நடக்கப்போறேல்லை. ஆணையம் இருக்கிறது விழிப்புணர்வை மக்கள் மத்தியில கொண்டுவாறதுக்கே தவிர, நாங்கள் கொட்டிற குப்பையளை அள்ளிறதுக்கில்லை.

அதால அந்த ஆணையம் சொல்லிற விசயங்களில இருக்கிற நியாயங்களை உணர்ந்து செயற்படோணும். 'ஊசி போடிறவர் டொக்ரர், பிளான் போடிறவர் எஞ்ஜினியர், கண்டபாட்டுக்கு குப்பை போடிறவர் குப்பையர்' எண்டு நான் சொல்லிற பழமொழி இனிமேல் குப்பை போடேக்கிளை எல்லாருக்கும் ஞாபகம் வரோணும். அநாவசியமாய் தொட்டதுக்கும் பொலித்தீன் பையை பயன்படுத்திறதைத் தவிர்க்கிறதுக்காக வெளியால வெளிக்கிடிற நேரங்களில ஒரு பையை எடுத்துக்கொண்டு வெளிக்கிடிறது எவ்வளவு பிரயோசனமானது.

அதை விட்டிட்டு பிளாஸ்ரிக்கையும் பொலித்தீனையும் கண்டபாட்டுக்கு எறிஞ்சால், பின்னாடி அதுகளில இருந்து வெளிவாற டயக்சீன் உட்பட நச்சு வெளிப்பாடுகளால பிள்ளை குட்டி இல்லாமல் பாதிக்கப்பட வேண்டிற அளவுக்கு மோசமான விளைவுகள் ஏற்பட்டிடும். நான் சும்மா சொல்லேல்லை, வியட்னாம் உட்பட கன நாடுகளில பாதிக்கப்பட்ட சில பிரதேசங்களை வைச்சுத்தான் சொல்லிறன்.

ஆ... முக்கியமான விசயத்தைச் சொல்ல மறந்திட்டன். அண்டைக்கு இஞ்சால பிரச்சினைப்பட்ட தம்பியவையளை எதுக்கும் ஒருக்கால் பார்த்துக் கதைப்பம் எண்டிட்டு வெளிக்கிட்டன். என்ன இருந்தாலும் அடிபட்ட தரப்புகளுக்கு புத்திமதி சொல்லப்போகேக்கிளை வேட்டியோட போனால் எடுபடாது எண்டிட்டு, மடிச்சுக்கட்டின சாரத்தோட கிட்டத்தட்ட ஒரு சண்டியன் கணக்குக்கு ஒரு செற்அப்பில அங்கால சைக்கிளைத் திருப்பினன். சும்மா சொல்லக்கூடாது, உங்கள் தரவழி என்னைத் தெரிஞ்சாக்கள் தவிர மற்றாக்கள் அந்தக்கோலத்தில என்னைக் கண்டிருந்தால் 'பெரிய சண்டியன்' எண்டு நினைச்சு நடுநடுங்கியிருப்பினம்.

அப்பிடி சைக்கிளில போய்க்கொண்டிருக்கேக்கிள வழியில ஒருத்தர் கண்ணைக் காட்டி மறிச்சார். நானும் என்னடாவெண்டு இறங்கி விசாரிச்சன். "ஏதாவது பிறச்சினையா? பக்கத்து வீடு, வேற ஜாதிக்காறங்க, ஊர்க்காறங்க பிறச்சினை கொடுத்தா சொல்லுங்க! நீங்க ரொம்ப நல்லம். அவங்கள நீங்கள் சும்மா விடக்கூடாது. உங்கலுக்கு நாங்க ஆம்ஸ் டிலிவர் பண்ணிறது. நீங்கள் உங்கட எனிமீஸ் (Enemy-எதிரி) கூட சண்டை பண்ணிறது", மறிச்சவர் எனக்கு ஆலோசனை தந்துகொண்டிருந்தார். நான் ஏதோ பெரிய அடிதடிப்பேர்வழி எண்டு நினைச்சு, என்னை வைச்சு ஊர்வழியில குழப்பங்களை விளைவிக்கிறதுக்காக அவர் எனக்கு ஆயுதங்கள் தரப்போறாராம்.

எட பாவி! எங்கை எங்களை கொளுவி விடலாமெண்டு ஆமிக்காரர் அலையிறாங்கள் பாருங்கோ! எங்கட இயக்கம் ஆயுதத்தையும் சீருடையளையும் ஒப்படைக்கோணும் எண்டு வலிஞ்சுகட்டிக்கொண்டிருக்கிற அதே தரப்புதான், சின்னச்சின்ன முரண்பாடுகளுக்கிள்ளை சிக்கிற எங்கட சனத்துக்கு ஆயுதங்களை விநியோகிச்சு அநியாயம் பண்ணிறாங்கள். என்ரை பிள்ளையள்! உந்தக் கவிழ்வாங்களின்ரை நயவஞ்சகத்துக்குப் பலியாகிறதுக்கு நாங்கள் ஒருநாளும் இடம்கொடுக்கக் கூடாது. தயவுசெய்து எல்லாரும் புரிஞ்சு கொண்டு விழிப்பாய் இருங்கோ! எங்கட மண்ணில நிண்டுகொண்டு எங்களைக் கொளுவிவிடப் பார்க்கிற அவனைப் பார்க்க எனக்குப் பத்திக்கொண்டு வந்திச்சிது. "எங்கட எனிமியோட சண்டை செய்யத்தான் வேணும். ஆனால், இப்ப யுத்த நிறுத்த காலம். நாளைக்குச் சண்டையெண்டு வாறநேரம் எங்கட பிள்ளையள் தங்கட உயிரால விலை கொடுத்து எடுத்த ஆயுதங்கள் எங்கட இனத்திட்டை இருக்கிது. உன்ரை ஒண்டும் எனக்குத் தேவையில்லை", எண்டு சொல்லிக்கொண்டு சைக்கிளைத் திருப்பினன்.




சர்வதேச அளவில் எந்த விளையாட்டாக இருந்தாலும் வீரர்கள், வீராங்கனைகளுக்கு உடல் தகுதி மிகவும் அவசியமான ஒன்று. " சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்" என்பார்கள். நல்ல உடல் தகுதி இருந்தால் மட்டுமே விளையாட்டில் ஆயுளை அதிகரிக்க முடியும். சமீபத்தில் நடந்த சூப்பர் சீரிசை பார்த்திருப்பீர்கள். ஏழு நாட்டு வீரர்கள் ஒரு நாட்டுடன் மல்லுக்கு நிற்க முடியாமல் முழி பிதுங்கி நின்ற நேரம் அது. ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டியின் போது இங்கிலாந்தின் பீட்டர்சனுக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டது. உடனடியாக அவர் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பெரிய அளவில் பிரச்சினை இல்லை என்றாலும் பீட்டர்சனுக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடம் இருந்து அவசர தொலைபேசி அழைப்பு "பீட்டர்சன் அடுத்தபோட்டியில் களமிறங்க வேண்டாம். ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள், பாகிஸ்தான் தொடருக்கு உங்கள் சேவை அவசியம் தேவை" என்று கூறி 'லைனை' கட் செய்துவிட்டார்களாம். என்ன செய்வார் பீட்டர்சன்... பாவம்! பயிற்சியாளர் ரைட்டிடம் கூறி மூன்றாவது போட்டியில் இருந்து பின் வாங்கிவிட்டார்.

அடுத்தவர் பிளின்டொப்...! இவருக்கு மூன்றாவது போட்டியின் போது பொண்டிங் அடித்த பந்தை பிடிக்கப்போய் கையில் காயம் ஏற்பட்டது. இவர் துடித்தாரோ இல்லையோ இங்கிலாந்துத் தரப்பு 'ரென்ஷன்' ஆகிவிட்டது. 'பார்த்து பிளின்ட்டொப் சூப்பர் சீரிஸ் டெஸ்ட் போட்டியில் முடிந்தால் விளையாடுங்கள் இல்லாவிட்டால் பிளைட்டை பிடியுங்கள்... என்று மீண்டும் தகவல் காற்று வழி வரத்தொடங்கிவிட்டது. காயம் பெரிய அளவில் இல்லை என்று மருத்துவ அறிக்கை கூறிய பிறகுதான் சிட்னி டெஸ்டில் பிளின்டொப் விளையாட 'பச்சைக்கொடி' காட்டப்பட்டிருக்கிறது. இவர் அடிபட்ட அதே போட்டியில் அப்ரிடியும் கையில் காயப்பட்டிருக்கிறார். விரலில் ரத்தம் வேறு வழியத் தொடங்கிவிட்டது.

அடித்து ஆடுவதிலும் அற்புதமாக பந்தை சுழற்றுவதிலும் கில்லாடியான அப்ரிடியை 'இங்கிலாந்துத் தொடருக்கு ' வெற்றி ஆயுதமாக' கருதி வந்தார் பாகிஸ்தான் பயிற்சியாளர் பாக் உல்மர். காயம் ஆறிவிடும்... இங்கிலாந்தின் பிளின்டொப் பந்தை சொந்த மண்ணில் அப்ரிடி விலாசலாம் என்ற பிறகுதான் பயிற்சியாளர் பாக் உல்மர். மூச்சு விட்டிருக்கிறார். மொத்தத்தில் ஏழுநாடுகள் இணைந்து விளையாடினாலும் அணிப்பெருமையை விட நாட்டுப் பெருமையைத்தான் ஒவ்வொரு தரப்பும் சிந்தித்துப் பார்த்திருக்கிறது. இப்படி ஒரு எண்ணம் தோன்றும் போது ஏன் உலகலெவன் அணி என்ற ஒன்றை ஏற்படுத்த வேண்டும்... என்ன செய்யிறது! ஆஸி, அணி வெல்ல இந்த நாட்டுப் பற்றுதானே உதவியிருக்கிறது.



## உலகத்தின் பெருமையைவிட நாட்டின் பெருமை மேலானது..?

## காலில் பூட்டிய சக்கரம்..!

வயது மூண்டரை தான் ஆகிறது. அதற்குள் மரதன் ஓட்டம், கின்னஸ் சாதனை, ஒலிம்பிக் தங்கம் என நிறையக் கனவுகளை சுமந்து கொண்டு ஓடுகிறான் ஒரு குட்டிப் பையன். ஒரிஸா மாநிலம் புவனேஸ்வர் தெருக்களில் பிச்சை எடுத்த இந்தப் புத்தியா சிங் இன்று தனது திறமை மூலம் வறுமையை வென்று காட்டியுள்ளான்.

சின்னப் புத்தியா பிறந்தது கஞ்சிக்கே வழியில்லாத குடும்பத்தில். தந்தை பிச்சை எடுத்து பிழைப்பு நடத்தியுள்ளார். இவர் மரணம் அடைய தாயார் மூன்று பெண், ஒரு ஆண் குழந்தையுடன் அன்றாட வாழ்க்கையை நகர்த்தவே கஷ்டப்பட்டுள்ளார். பார்த்தார்... ஆண் குழந்தைக்கு கொஞ்சம் மார்க்கெட் இருக்கவே வெறும் எண்ணூறு ரூபாய்க்கு புத்தியாவை விற்றுள்ளார். விலைக்கு வாங்கியவரிடம் அவன் படும் கஷ்டத்தை ' அனாதைக் குழந்தை மீட்கும் அமைப்பின்' தலைவர் பிரன்ச்சிதாஸ் பார்த்தார். இவர் ஒரிஸா ஜுடோ சங்க செயலாளராகவும் உள்ளார். தனது கைப்பணத்தைக் கொடுத்து புத்தியாவை மீட்டுள்ளார்.

பின்னர் தனது பயிற்சிக் கூடத்திற்கு புத்தியாவை அழைத்துச் சென்றுள்ளார். குட்டீஸ் என்பதால் அந்த வயதுக்குரிய சேட்டைகள் செய்ய, கடுப்பாகிப்போன தாஸ் ஒரு நாள் அடித்து விட்டார். போதாக் குறைக்கு தனது பயிற்சி மையத்தை சுற்றி வரும்படி தண்டனையும் கொடுத்தார்.

ஏதோ ஒரு வேலையாக சென்ற தாஸ் ஏழு மணி நேரம் கழித்து வந்து பார்த்தபோது விடாமல் ஓடிக்கொண்டிருந்தான் புத்தியா. அந்த விநாடியில்தான் அவனுள் இருக்கும் அதீத திறமையைக் கண்டுபிடித்தார்.



அவனை நீண்ட தூரம் ஓடும் மரதன் வீரராக உருவாக்க முடிவு செய்தார்.

சத்தான உணவுகொடுத்தார். சரியான பயிற்சியும் அளித்தார். 'தினமும் ஏழு மணி நேரம் பயிற்சி செய்கிறான் பத்து மணி நேரத்தில் 48.கி.மீ ஓடுகிறான். பூரி முதல் கட்டாக் வரையிலான 90 கி.மீ தூரத்தை தொடர்ந்து ஓடி கின்னஸ் சாதனை படைக்க திட்டமிட்டுள்ளான். கின்னஸ் புத்தகத்தில் எட்டுவயது சிறுவன் 52 கி.மீ தொடர்ந்து ஓடியதே சாதனையாக உள்ளது. புத்தியா ஏற்கனவே பூரிமுதல் புவனேஸ்வர் வரையிலான 60 கி.மீ தூரத்தை 9 முறை கடந்துவிட்டான். இவனுக்காக விரிவாக திட்டம் வகுத்துள்ளோம். கின்னஸ் சாதனை புத்தகத்தில் இளம் மரதன் வீரராக நிச்சயம் இடம்பெறுவான்' என நம்பிக்கையுடன் கூறியுள்ளார் தாஸ்.

தாஸ் முயற்சிக்கும் விமர்சனங்கள் இல்லாமல் இல்லை. தடகள பயிற்சியாளர் அருண்தாஸ் கூறுகையில், " இளம்வயதில் நீண்ட தூரம் விடாமல் ஓடுவது நுரையீரல், இருதயத்தை பாதிக்கும். மரதன் வீரர்கள் பொதுவாக 12 வயதிலிருந்துதான் பயிற்சியை துவக்குகின்றனர். இந்த வயதில் கூட ஒரு வீரர் வாரத்திற்கு இரு முறை மட்டுமே தொடர்ந்து 15 கி.மீ தூரம் ஓடுவர்" என்றார்.

இப்படி விமர்சனங்கள் எழுந்தாலும் கூட ஊடகங்களின் ஒட்டுமொத்தக் கவனமும் புத்தியா மீது தான் உள்ளது. இவனைப் பற்றி டெக்கிமெண்டரி படம் எடுக்க மூன்று வெளிநாட்டு நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன. " பிரிட்டனை சேர்ந்த இரு நிறுனங்கள் தொடர்பு கொண்டுள்ளன. சீரியஸான படமாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு படமாக இருக்க வேண்டும்" என்றார் ஆர்வத்துடன் தாஸ்.

நீண்ட தூரம் ஓடுவது மிகவும் பிடிக்கும் என்கிறான் புத்தியா. "அதிகாலையில் எழுந்து விடுவேன். சிறிய பயிற்சிகளுக்குப் பிறகு ஓடத் தொடங்குவேன். ஓடும்போது எனக்குக் கால் வலி எதுவும் இல்லை. மிகவும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். வளர்ந்து பெரியவனானாலும் தொடர்ந்து ஓடுவேன்" என்று மழலை மொழியில் உறுதி கொடுக்கின்றார் புத்தியா.

---

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓயாத அலை 02 இன் மூலம் கைப்பற்றப்பட்ட கிளிநொச்சி முன்னரங்க கட்டடப் பகுதியால் நிரப்பப்பட்ட எதிரியின் முதலாம் நிலை கட்டளை மையத்தை கைப்பற்றியதாகும்.

தனது தனித்துவமானதும் இயல்பான வீரத்திலும் எளிமையாக கட்டளையை வழங்கி இலங்கை இராணுவ மேல் நிலை கல்வியையும் நீண்ட படைய அனுபவத்தையும் கொண்ட கேணல் உபாலி எதிரிசிங்கவை பின்வாங்க வைத்ததன் ஊடாக சேகர் ஓர் போர் அதிகாரி என்பதனை உறுதிப்படுத்தினான். சிறுவயதிலேயே போராளியாக இணைந்தவன் சிறு வயதிலேயே சிறந்ததொரு வேவு வீரனாகவும், வீரம்மிக்க சண்டை ஆற்றல் கொண்டவனுமாக வளர்ந்து மாவீரன் ராஜன் அவர்களின் உயர்நிலை படைய கற்கை நெறியிலும் பங்கேற்று புதியதொரு அறிவாற்றலை பெற்றதனால் தொடர்ந்து இயக்கத்தில் நடந்த அனைத்துத் தாக்குதல்களிலும் திறம்பட சண்டை செய்து பல வெற்றிகளை பெற்றுத்தந்து விடுதலைப் போராட்டத்தை வீச்சாக்கினான்.

ஆரம்பத்தில் 50 கலிபர் துப்பாக்கி அணியில் ஒருவனாகக் களமிறங்கியவன் தனது அயராத உழைப்பினால் பல 50 கலிபர், கொண்ட பெரியதொரு சண்டை அணிகளுக்கே பொறுப்பாளனாக உயர்ந்தான். தன்னைப் போலவே போராளிகளையும் நேசித்தவன். ஒவ்வொரு போராளிகளினதும் தனி பட்ட குடும்ப நலன்களில் அக்க உள்ளவனாகவே இருந்தான். பல போராளிகளை வீரமிகு சண்டைக் காரர்களாகவும் அணித்தலைவர்களாகவும் வளர்த்து விட்ட பெருமை அவனையே சாரும்.

எந்தச் சண்டைக்கும் முன் நின்று உழைத்தவன் கிளிநொச்சி டிப்போச்சந்தி சண்டைக்கும், ஓயாத அலைகள் 02 சண்டைக்கும், முன் நின்றே உழைத்ததோடு அதையும் கடந்து தடை அணியோடு முன்னகர்ந்து தடைஉடைக்கும் மட்டும் அவ்விடத்திலேயே நின்று தனது கட்டளைப் பீடத்தை செயற்படுத்தியதை இலகுவில் எவராலும் மறக்க முடியாது. 1998 ஆம் ஆண்டு 2 ஆம் மாதச் சண்டைக்கு மீனாட்சி அம்மன் கோயிலடியில் தடை உடைத்து அணி உள்நுழையும் போது அணிகள் நகர்கின்ற பாதையில் ஒரு பாழடைந்த கிணறு இருந்தது. அதில் போராளிகள் விழுந்து விடாதவாறு அதற்குப் பக்கத்திலேயே இருந்து தம்பி கவனமடா, டேய் கவனமடா, மச்சான் கவனமடா அண்ணை கவனம் என்று சொல்லிச் சொல்லி அனுப்பிய அந்தத்தளபதியை போராளிகளால் என்றுமே மறக்க முடியாது. அந்தளவு பாச்மும், பற்றும், அவனில் உருவாகி இருந்தது.

சேகர் இந்தத் தேசத்தை காக்கவென பல சிறிய பெரிய தாக்குதலென ஏராளமான சண்டை செய்து, அதில் காயமடைந்தும் வீரச்சாவடையும் வரையும் வீரமுடன் களமாடினான். தன் தாய்நாட்டை, தன் தலைவனை, தனது போராளிகளை, தனது உறவையென எல்லோரையும் நேசித்தான். தமிழீழம் கிடைத்தால் எல்லா மாவீரரின் வீட்டையும் போய் அவர்களின் உறவுகளோடு அவர்களின் வீரத்தை சொல்லவேண்டுமென தனது நாட்குறிப்பில் எழுதியவன், தன் வீரத்தை உலகிற்குச் சொல்லி தமிழனின் வீரத்திருவேட்டில் காவியமாகிவிட்டான்.


திருநெல்வேலியில் ஓர் புதிய உதயம்!



பூமியில் புதிதாக கால் பதிக்கும்
உங்கள் குழந்தையை வரவேற்க ...

Mother And Baby Care



குழந்தைகளுக்கான
* பால்மா வகைகள்
* உடைகள்
* விளையாட்டுப் பொருள்கள்

உட்பட உங்கள் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்தையும் மற்றும் தாய்மாருக்கான பொருள்களையும் ஓரே கூரையின் கீழ் அதிசயிக்கத்தக்க மலிவு விலையில் பெற்றுக் கொள்ளநம்பிக்கையான ஸ்தாபனம்

(சி13087)

Mother And Baby Care
108/1, Palaly Road, Thirunelvely. T.P: 0717556677





**அத்தியாயம்- 17**

**பகுதி -69**

நான் ஒரு இசைத்தட்டைப் போட்டு விட்டு குறுகிய காலத்துக்கு அத ஒலிக்க விட்டபின் அத நிறுத்தி விட்டு அது என்னெண்டு கேட்டா அவன் அதின்ர பேரைச் சொல்வான். பல மணித்தியாலங்களுக்கு இசைத தட்டுகள அவனுக்குப் போட்டுக் காட்டுறனான். அதுகள் என்னென்ன. எண்டு சொல்லுறனான். உண்மையச் சொல்லப்போனா நான் சொல்லுறதுகள் அவனப் போய்ச்சேருதா என்று தெரியாமலே சொல்லுறனான்.

அவன் மேசைகளுக்குக் கீழ ஒளித்துக் கொண்டிருக்கும் போதே நூற்றுக் கணக்கான புத்தகங்கள அவனுக்கு வாசிச்சிருக்கிறன். அவனோட நெடுகக் கதைக்கிறனான். அவனச் சுற்றி இருக்கிறதுகள அவனுக்கு விளங்கப்படுத்துறனான். நான் சொல்லுறதுகள் கேட்கிற அளவுக்குக் கிட்டவா அவன் இருக்கி



றான்...நான் காட்டுறதுகள பாக்கிறான் என்கிற உண்மைகளால ஊக்கி விடப்பட்டுத்தான் நான் திரும்பத் திரும்ப அதுகள செய்தனான்"

பெருமூச்சொன்றை வெளிவிட்ட அவள் மனம் கசந்து போனவள் போல் தலையை ஆட்டினாள். "ஏதாவதொன்றை எனக்கே மெய்ப்பித்துக்கொள்ளவேண்டியிருந்தது" என்று மீண்டும் தொடங்கியவள், " அவனால் கற்றுக்கொள்ள முடியும் எண்டு மெய்ப்பிக்க வேண்டியிருந்தது. அவனுக்குக் கற்பிக்க என்னால் முடியும் எண்டு மெய்ப்பிக்க வேண்டியிருந்தது. ஆனா அவனுக்கு எந்தளவுக்கு அவை போய்ச் சேர்கின்றன... அவை எல்லாம் அவனுக்கு எந்த அளவுக்கு பொருளுள்ளவையாய் இருக்கின்றன என்று ஒருபோதுமே எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அவன் அவன்ர அறையில தனியா இருக்கும்பொழுது நான் அவனுக்குக் கொடுத்த பொருட்களின் மீது குனிந்து நின்றபடி அவற்றைப் பார்ப்பதை அவதானித்துக் கொண்டிருப்பேன். 'அவனுக்கு இதுகள் பெறுமதியில்லாதவையாக இருந்தா அவன் இப்பிடிச் செய்யமாட்டான்' எண்டு எனக்கு நானே சொல்லிக் கொள்வேன். ஆனாலும் ஒரு போதும் எனக்கு அது நிச்சயமாகத் தெரிந்திருக்கவில்லை" என்று முடித்தாள்.

"அவனப்பற்றின உணர்வுகள பொறுத்த மட்டில நீங்கள் குழம்பிப் போயும் இரட்டைப்போக்குக் கொண்டவராயும் இருந்திருப்பீங்க" என்று என் கருத்தைச் சொன்னேன் "பரிசோதனைகள செய்துகொண்டு... அவதானித்துக்கொண்டு... உங்களப்பற்றியும் டிப்ஸைப்பற்றியும் சந்தேகப்பட்டுக்கொண்டு... எதிர்பார்த்துக்கொண்டு... ஏமாற்றம் அடைந்து கொண்டு... இப்பிடித் தோற்றுப் போனோமே எனறு எண்ணிக்கொண்டு... எப்படியும் அவனை எட்டிவிட வேணும் எண்டு நினைச்சுக் கொண்டு இருந்திருப்பீர்கள் அல்லவா?"

"ஓம்" என்றாள் அவள்.

" எப்பவும் அவனப் பரிசோதிச்சுக் கொண்டு... எப்பவும் அவன்ர இயலுமையப் பற்றி சந்தேகித்துக் கொண்டு... எப்பவும் அவன எட்டுறதுக்கு முயற்சி செய்து கொண்டு... அந்த முயற்சியாலேயே எங்களுக்கிடையில ஒரு சுவர எழுப்பிக்கொண்டிருந்தன். ஆனா என்ர முயற்சிகள சோரவிடாமச் செய்யுற அளவுக்கு அவன் ஏதாவது செய்துகொண்டிருந்தான். எந்தப்பிள்ளையும் இந்த அளவுக்கு துன்பப் படுத்தப்பட்டிருக்கும் எண்டு நான் நினைக்கயில்ல. அந்த சோதினையில சித்திபெறு... இந்தச் சோதனையில சித்திபெறு... எப்பவும்... எப்பவும் உன்ர இயலுமைய மெய்ப்பி எண்டு கொடுக்கப்படுகிற அழுத்தங்களால இந்த அளவுக்குத் துன்பப்பட்டிருக்காது. அவனட பேத்தியார் வாற நாட்களத் தவிர அவனுக்கு மன அமைதியெண்டது கிடைக்கவே இல்ல. அவயள் இரண்டு பேருக்குமிடையில நல்ல அன்னியோன்னியமான உறவு இருந்தது. அவவோட இருக்கயுக்க டிப்ஸ் கொஞ்சம் கலகலப்பா இருப்பான். அவவோடயும் அவன் கனக்கக் கதைக்கிறயில்ல. அவன் எப்படி இருந்தானோ அப்படியே அவனை அவ ஏற்றுக் கொண்டா. எப்பவும் அவனில நம்பிக்கை கொண்டிருந்தா. நான் இறுக்கமாக நடக்காம அவன்ர பாட்டில அவன விட்டா அவன் தன்ர கூட்டுக்க இருந்து மீண்டு விடுவானெண்டு நெடுகச் சொல்லுறவ. ஆனா என்னால அத நம்ப முடியேல்ல. நான் அவனுக்குக் கொடுத்து விட்ட மற்றக் குறைபாடுகள ஈடுசெய்ய அவன் நெருக்கமாக வேணுமெண்டு நான் நினைச்சன். அவன் இருக்கிற நிலைமைக்கு நான்தான் பொறுப்பு எண்ட உணர்வு எனக்குள் இருந்தது. அந்த வகையில ஒரு குற்ற உணர்வு எனக்கு இருந்துது."

திடீரென்று அவள் கண்களில் நீர் நிரம்பிக் கொண்டது. " அவனுக்கு இத நான் எப்பிடிச் செய்திருக்க முடியும் எண்டு எனக்கு தெரியவில்ல" என்று அழுதழுது சொன்னாள். "என்னுடைய புத்திசாலித்தனம் எங்கயோ பறந்து போயிருந்தது. நிர்ப்பந்தப்படுத்துவதாயும் நியாயமற்றதாயும் என்ர நடத்த இருந்துது. அவனட புதிரான நடத்தைக்குக் கீழே இயலுமை இருப்பதை மெய்ப்பிப்பதற்கு என்ன ஆதாரத்தை நான் காணவேணும் எண்டு நினைச்சேனோ அந்த ஆதாரத்தை நான் கண்டன். அவனுக்கு பிரச்சினைகள உருவாக்கி விட்ட ஏதோ ஒன்றை நான்தான் செய்திருக்கிறன் என்று ஏற்றுக்கொள்ள என்னால் முடியவில்ல. நான் அவனை நிராகரித்து விட்டேன்




என்று ஒப்புக்கொள்ளவும் முடியவில்ல. இனி அவன நான் நிராகரிக்க போறயில்ல என்கிறதால நான் இதச் சொல்லலாம். டிப்ஸ் என்ர பிள்ளை நான் அவனப்பற்றிப் பெருமைப் படுறன்" சொல்லிவிட்டு எதையோ தேடுவது போல் என்னைப்பார்த்தாள்.

"நீங்கள் டிப்ஸ் தொடர்பா கொண்டிருந்த உணர்வுகள ஏற்றுக்கொள்ளுறது உங்களுக்குக் கஷ்டமா இருந்திருக்கு. ஆனா இப்ப உங்கட உணர்வுகள் மாறியிட்டுது. நீங்கள் இப்ப அவன ஏற்றுக்கொள்ளுறீங்க. அவன நம்புறீங்க, அவனப் பற்றிப் பெருமைப்படுகிறீங்க... அப்பிடித்தானே? " என்று கேட்டேன்.

அவள் ஆம் என்பது போல் தலையை கடகடவென்று ஆட்டினாள். அவன்ர வேற திறமையொண்டையும் உங்களுக்குக் காட்ட வேணும். அவன் வாசிப்பான்... எழுதுவான்... எழுத்துக் கூட்டுவான்... விசயங்கள கற்றுக் கொள்வான். இதெல்லாம் உங்களுக்குத் தெரியும். அவன் கீறுற படங்கள் மிகவும் தனித்த பண்பு கொண்டவை. இஞ்ச பாருங்கோ அவன் கீறின படங்கள..."

அவள் தான் கொண்டு வந்திருந்த கடதாசிச் சுருள் ஒன்றை சடாரென்று என்னிடம் நீட்டினாள். அந்த சுருளுக்கு மேல் போட்டிருந்த ரப்பர் வளையத்தை கழற்றிவிட்டு அதை விரித்து என்னிடம் தந்தாள். "இதுகள பாருங்க... எவ்வளவு நுணுக்கமா எல்லாத்தையும் கீறியிருக்கிறான் எண்டு பாருங்கோ. அதுகள்ள தெரியிற காட்சித் திறனப் பாருங்க"

நான் அந்தச் சித்திரங்களைப் பார்த்தேன். ஒரு ஆறு வயதுப் பிள்ளைதான் அவற்றை உருவாக்கியது என்று சொல்ல முடியாத அளவுக்கு வித்தியாசமானவையாக அவை இருந்தன. அவன் கீறியிருந்த பொருட்கள் மிக நுணுக்கமாகக் கீறப்பட்டிருந்தன. ஒரு படத்திலே, குன்றொன்றின் மீது வளைந்து வளைந்து ஏறும் படிகளோடு கூடிய பூங்கா ஒன்றை வரைந்திருந்தான். அவற்றினுடைய காட்சித் திறன் குறிப்பிடத் தக்கதாயிருந்தது.

"ஓம். இதுகள் அசாதாரணமானவைதான்" என்றேன் வியப்போடு.

அவள் அவற்றைத் தனக்கு முன்னால் விரித்து வைத்துவிட்டு அவற்றை ஆராய்ந்தாள். பிறகு குழப்பம் நிறைந்த கண்களோடு என்னைப்பார்த்தாள். " அளவுக்கு மீறின அசாதாரணமானவை" என்று மெதுவாகச் சொன்னாள். " இந்தப் புதிரான இயலுமைகள் எல்லாம் என்னை வாட்டுவதற்கு அதுதான் காரணம். அவன் உளமாயை நோய் கொண்டவனாக இருக்கலாம் என்ற எண்ணத்தாலேயே நான் என்னைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தேன். அது உண்மையானால், இந்த மேலாண்மையான, இயல் கடந்த தான இயலுமையின் பெறுமதி என்ன? ஆனா இப்ப அந்தப் பயத்தில இருந்து நான் விடுபட்டிட்டேன். அவன் இப்ப முன்னையை விட அதிக இயல்பான முறையில நடந்துகொள்ளத் தொடங்கிவிட்டான்"

இந்தத் தாய் மருத்துவம் படித்தவர். தனது நோய்நிர்ணயம் சரியானதாக இருந்திருக்கலாம் என்றும் அறிந்திருந்தாள். அவள் டிப்ஸ் மீது திணித்த வழமைக்கு மாறான நடத்தை, அவனை அவனது குடும்பத்தினர் மற்றும் அவன் பாடசாலையில் சந்தித்திருக்கக் கூடிய வேறு பிள்ளைகள் மற்றும் வளர்ந்தவர்களிடமிருந்து அன்னியப்படுத்தி விட்டிருக்கலாம். ஒரு பிள்ளை, தனக்கு இயலுமை இருக்கிறது என்று மெய்ப்பிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படும் பொழுது, அதன் பெறுபேறுகள் அநேகமான சந்தர்ப்பங்களிலே படு நாசகாரமானவையாக அமைந்து விடுகின்றன. ஒரு பிள்ளைக்கு அன்பு, ஏற்றுக்கொள்ளப்படுதல், புரிந்து கொள்ளப்படுதல் முதலியவை அவசியமானவையாக இருக்கின்றன. நிராகரிப்பு , சந்தேக்கங்கள் , முடிவே இல்லாத சோதனை செய்தல்கள் முதலியவற்றை எதிர்கொள்ளும்படி அவன் செய்யப்படும் பொழுது அவன் நாசமாக்கப்பட்டு விடுவான்.

"பல விசயங்கள் குறித்து இன்னும் எனக்குக் குழப்பமாயிருக்கிறது" என்றாள். டிப்ஸுக்கு மேலாண்மையான இயலுமை இருந்தால் அது வீணாக்கப்படக் கூடாது. அவனது அடைவுகள் பெருமை கொள்ளத்தக் கவைதான்" என்று தொடர்ந்து சொன்னாள்.

"அவனுடைய ஒட்டுமொத்த முன்னேற்றம் குறித்து நீங்கள் குழப்பமடைந்திருந்தாலும் அவனுடைய இந்த அடைவுகள் எல்லாம் உங்களுக்கு பெறுமதியானவையாய் இருக்கின்றன. அப்படித்தானே?" என்று கேட்டேன்.

"ஓம்" என்றாள் அவள். "அவனுடைய அடைவுகள் மிக முக்கியமானவை. அவனைப் போலவே எனக்கும்தான். அவன் இரண்டு வயதாக இருந்த காலம் எனக்கு நினைவில் இருக்கிறது. அப்போதுதான் அவன் வாசிக்கக்கற்றுக்கொண்டான்.

(தொடரும்)

# உலகை ஆட்டிப் படைக்கும் புதிய புதிர் விளையாட்டுக்கள்

**புதிர் மூன்றிற்கான விடையினை சரி பார்த்துக் கொள்ளுங்கள்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 2 | 7 | 3 | 4 | 6 | 8 | 5 |
| 3 | 8 | 6 | 5 | 9 | 2 | 1 | 4 | 7 |
| 4 | 5 | 7 | 6 | 8 | 1 | 9 | 2 | 3 |
| 2 | 9 | 5 | 8 | 7 | 3 | 4 | 6 | 1 |
| 1 | 4 | 3 | 2 | 6 | 5 | 7 | 9 | 8 |
| 7 | 6 | 8 | 1 | 4 | 9 | 2 | 5 | 3 |
| 8 | 7 | 4 | 3 | 2 | 6 | 5 | 1 | 9 |
| 6 | 3 | 1 | 9 | 5 | 7 | 8 | 2 | 4 |
| 5 | 2 | 9 | 4 | 1 | 8 | 3 | 7 | 6 |

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

**புதிர் -04**

அதனுடைய சித்திர வதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின்பத்தை உணருங்கள்.

இந்தப்புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத் திய எண்ணை

## சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல்லாம் தர்க்கபூர்வமானமனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும் தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன்படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

*(இதற்கான விடை அடுத்தவாரம்)*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 6 | | | 7 | | 8 | |
| | | | 3 | 6 | | 1 | | 2 |
| | 1 | 7 | | | 4 | 5 | | 3 |
| 4 | | | | 2 | 3 | | 5 | |
| 6 | | 3 | | | | 2 | | 7 |
| | 8 | | 4 | 7 | | | | 6 |
| 9 | | 1 | 7 | | | 4 | 3 | |
| 7 | | 8 | | | 9 | | | |
| | 6 | | 8 | 4 | | 7 | | 2 |

# அந்த நினைவு..!

இது நடந்தது 1997 ஆம் ஆண்டு காலப்பகுதி, நானும் என்னுடன் நான்கு போராளிகளும் தென்மராட்சிப் பகுதியில் ஒரு குழுவாக இராணுவம் மீது தாக்குதல் நடத்துவதற்கு நின்ற காலப்பகுதி இரவு முழுவதும் சரியான வேலை. எங்கு மூலையில் இராணுவத்தை தாக்கலாம் என்பதுதான் எங்கள் திட்டம்.

ஒரு இடத்தில் கிளைமோர் குண்டு வைத்துவிட்டு இரவு வந்து இன்னுமொரு தங்குமிடத்தில் படுத்துவிட்டோம். காலை 5.30 மணிக்கு நாய்கள் மிகவும் வேகமாக குரைக்கும் சத்தம் கேட்டு எழுந்து எங்களின் சண்டை நிலைக்கு ஏற்ற மாதிரி இருந்தோம். விடிந்துவிட்டது. ஒரு சத்தமும் இல்லை. எழுந்து பக்கத்து வீட்டுத் தங்கை ஒருவரை றோட்டுப்பக்கம் பார்த்து வரும்படி கூறிவிட்டு நாங்கள் இருந்தோம். அப்படி ஒன்றும் இல்லை என்று தங்கை வந்து கூறியதும், எங்களின் இலக்கைச் செய்வதற்கு நாங்கள் ஆயத்தமானோம். அப்போது திடீர் என்று ஒரு ஐயா ஓடிவந்தார். " தம்பி" ஆமி வருகிறான் என்று. நாங்கள் தேநீர் குடிப்பதற்கு ஆயத்தமாக இருந்த எல்லாம் மறந்து வேலியால் ஏறி ஒரு வெட்டைப்பகுதி அதற்குள் சிறிய கோயில். கோயிலில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் ஒரு தாமரைக்குளம். நாங்கள் ஓடி கோயிலுக்குப்பின்னால் இருந்து விட்டோம். மிகவும் களைப்பு. அப்படியே வயல் வரம்பில் தலை வைத்து தூங்கும் அளவிற்கு வந்து விட்டோம். திடீர் என்று நான்தான் கண்முழித்தேன் எம்மில் இருந்து 75 மீற்றர் தூரத்தில் பதுங்கிக்கொண்டு ஆமி வந்துவிட்டான். நான் உடனே கத்திக்கொண்டு ஆமிவாறான் எழும்புங்கள் என்று கூறிக்கொண்டு எல்லோரையும் கூட்டிக்கொண்டு ஓடி ஒரு குளத்திற்குள் இறங்கி மறுபுறம் செல்வதற்கு நீந்திக்கொண்டு இருந்தோம். நாங்கள் எல்லாம் சம்புப்புல் தாமரைப் பகுதிகளால் சென்று கொண்டிருந்தோம். அப்போது இராணுவம் குளத்திற்குள் இறங்கவில்லை. கரையில் நின்று சுட்டான். டொங்கான் செல் அடித்தான். அப்போது ஒரு போராளி சம்புப்புல் தாமரை இல்லாத வெட்டையில் சென்றுவிட்டார். நான் கத்தினேன் தம்பி என்னிடம் வா உந்தப்பக்கம் போகாதே வெட்டையாக உள்ளது என்று. அது அவருக்குக் கேட்கவில்லை போல் உள்ளது. நான் எட்டு மீற்றர் அழவில் நின்று பார்த்துக்கொண்டு நிக்கின்றேன்.




மற்ற இரண்டு போராளிகளும் கரை சேர்ந்து போய்விட்டார்கள். ஒரு செல்வந்து இவருக்கு அருகில் விழுந்ததை நான் கண்டேன். இரத்த தண்ணீர்மட்டும் மேலே வந்தது " அம்மா" என்று மட்டும் ஒரு சத்தம் கேட்டது.

என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. குப்பியைவிட வேறு எதுவும் இல்லை. நீந்திக் களையில் படுத்துவிட்டேன். களை தாங்கமுடியவில்லை.

அப்போது மாடுமேய்க்கும் ஐயா ஒருவர் அருகில் வந்து தம்பி நான் மாட்டைக் கலைத்துக் கொண்டு உன் அருகில் வருகின்றேன். மாட்டுடன் சேர்ந்து நீங்களும் அருகில் உள்ள பற்றைக்குள் மறைந்து கொள் என்றார். அப்படியே போய் பற்றைக்குள் இருந்து ஒரு தெரிந்த ஆதரவாளரிடம் ... இங்கு வரும்படி கூறுங்கள் என்றேன். அப்படியே அந்த ஐயா செய்து மாலை அளவில் அவர் மாடுகளுடன் வந்து என்னைக் கூட்டிச்சென்றார். அங்கு சென்று நான் இருந்தபோது ஆதரவாளர்கள் வந்தார்கள். அண்ணாக்கள் உங்களுடன் நின்ற தம்பியை ஆமிக்காரர் தூக்கிக்கொண்டு போகின்றார்கள். ஆள் இறந்துவிட்டார் என்று பின் எங்களின் இரண்டு போராளிகளும் என்னுடன் வந்து சேர்ந்தார்கள். அந்தச் சம்பவம் நடந்து 31 ஆம் நாள் கிராமத்தில் கைக்குண்டுத்தாக்குதல் செய்து ஒரு இராணுவம் கொல்லப்பட்டது. இரண்டு பேர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலில் அந்தக் கிராம மக்களின் முழுப் பங்குடன் எங்களால் செய்து முடிக்கப்பட்டது.

**பொ.ஸ்ரார் சாயித்தியன்.**



## தெருப்பேச்சு

"மழை ஒரு மாதிரிக் கால்வச் சிட்டுது.இனி திரும்பிப் போக வழிதெரியாமத் தான் நிக்கும்"

"எங்க திரும்பிப் போறது நாலாபக்க நாடுகள்ளயும் வெள்ளப் பெருக்கும் அழிக்குது பூகம்பமும் அழிக்குது"

காஷ்மீர் பூகம்பத்தோட பாகிஸ்தான் ராணுவம் போட்டுதாமே. இந்திய ராணுவம் மட்டுந்தான் எல்லையில நிக்குதாம்."

"எங்க என்ன நடந்தா எங்களுக்கென்ன எங்கட பக்கம் ஒண்டும் வராமப் பாக்கோணும்"

ஓகோ பம்பாய்க்கும் பூகம்பம் வருமாம் இஞ்சால தாவாமக் கையால பிடிக்கப் போறியோ.

"அ....ஆர் சொன்ன... அப்ப இஞ்சால வந்தா எங்கட சனம் எங்கபோறது"

"அட அட அட கட்டி வச்சிருக்கிற தெல்லாம் அடுக்குமாடி கவுண்டுகொட்டுப் பட்டுப் போகும் இருக்கிறது கொட்டில் இதுபோனா இன்னொண்டு...."

"உனக்கென்ன யேமனால கொண்ணை யாக்கள் அனுப்பிற புளிச்சலே வறையில கதைக்கிறாய். இந்தக் கொட்டிலும் இல்லாட்டி... நாங்கள் எங்கபோற"

" சொறி' மச்சான் நீ வருத்தப்படுவாய் எண்டு நான் நினைக்கேல்ல"

"அ.... சொறியெண்டா அது பொல்லாதது. சொறியச் சொறியச் சுகமாயிருக்கும். பிறகு சிரங்கு முத்தி படுவனாக்கி படுவன் முத்தினா ஆளக் கொண்டு போயிரும். முதல் மருந்தெடு போ.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –142



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –142

..........................................................

..........................................................

..........................................................

..........................................................


பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –141



இசைநிலா,
இரணைப்பாலை ,
புதுக்குடியிருப்பு.

### பரிசுக்குரிய வரிகள்

ஆறறிவு படைத்தவனே
அள்ளிப் பருகி –குடி நாசமாக்கினான்
நீயென்ன விதிவிலக்கா
உன் குடியும் இனி நாசம்தான்.

### பாராட்டுக்குரிய வரிகள்

அஃறினை உயிரே யாரைப் பிரதிபலிக்கிறாய்
அரசியல் வாதிகளின் போதையையா?
ஐரோப்பிய யூனியனின் பேதமையையா?
சமாதான தேவதையின் வேதனையையா?

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

புகைத்தால் புற்று -நோய்
தண்ணி அடித்தால் இதயம்-இல்லை
மானிடனுக்கே இது -புரியவில்லை
உனக்கா இது-விளங்கப் போகுது.

து.ஆனந்,
. முள்ளியவளை.

மனிதா மதுவையுண்டு புத்தி பேதலித்த உன் வீட்டில் வளர்த்த
பூனையே போதைக்கு அடிமையாகிவிட்டது-பார்த்தாயா?
சற்று உந்தன் பிள்ளைகளின் நிலையை சிந்தித்துப்பார்
அவர்கள் நிலையும் சீர் கெட்டிட நீயே வழி வகுத்திடலாமா?

சு.சி.தமிழினி,
புதுக்குடியிருப்பு.

தற்கொலை செய்யவில்லை-நீ
விடியலுக்கான உண்மையை நீயும்
உலகிற்குச் சொல்ல நினைத்ததால்
விசக்கிருமிகளினால் கொல்லப்பட்டவன்.

க.துஷ்யந்தி,
உடையார்கட்டு.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்
அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு




... பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-04 | 21-10-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-246



குமரகுருவில் தீபாவளித் திருவிழா

20% சிறப்புத் தள்ளுபடி யுடன் மாபெரும் மலிவு விற்பனை!

குமரகுரு புடவை

அழகுப் பொருள் வாணிபம்

யாழ். சாலை, கிளிநொச்சி. (சி-12975)

# விமானம் மூலம் உளவு நடவடிக்கை

# யுத்த நிறு.உடன்பாட்டிற்கு முரணானது!

## கண்காணிப்புக்குழு பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டொட்டிர்

(கொழும்பு)

**சிறிலங்கா இராணுவத்தின் உளவு நடவடிக்கையானது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முரணானது என்று இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.**

கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டொட்டிர் கூறியதாவது;

சிறிலங்கா இராணுவத்தின் ஆளில்லாத வேவு விமானம் விழுந்து நொருங்கியதாக எங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தகவல் தெரிவித்தனர். சிறிலங்கா இராணுவமும் தங்களது ஆளில்லா விமானம் காணாமல் போயுள்ளதாக தெரிவித்தது.

இந்த ஆளில்லா விமானம் வேவுப் பணிகளுக்காக சிறிலங்கா இராணுவத்தால் பயன்படுத்தப் படுவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றம்சாட்டி இருந்தனர். ஆனால் சிறிலங்கா அரசாங்கம்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் வீழ்ந்ததன் மூலம் படையினரின் வேவு நடவடிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

### கணகாணிப்புக்குழுவினரிடம் ஞானம் தெரிவிப்பு

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளை ஆளில்லாத வேவு விமானத்தின் மூலம் படைத்தரப்பினர் வேவுபார்த்துள்ளமை இந்த விமானம் விழுந்ததில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல் துறையினருக்கும் இடையில் நேற்றுப் புளியங்குளத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புப்பூனைப் படையிடம் பயிற்சி பெற்ற படையினர் மகிந்த,ரணிலின் பாதுகாப்பிற்கு

தேர்தலின் போது அரசியல் உள்நோக் கங்களுடன் இருபிரதான வேட்பாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்பதால் இருவருக்குமான பாதுகாப்புக்கள் அதிகரிக்கப் பட்டடி ருப்பதாக சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறியுள்ளார்.

சந்திராபெர்னாண்டோ மேலும் கூறியுள்ளதாவது:

இரு வேட்பாளர்களும் பங்கேற்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## உலக உணவுத்திட்ட களஞ்சியத்தில் பழுதடைந்த உணவுப் பொருட்கள்

### *63071கி. கி உணவுப் பொருட்கள் தடுத்து வைப்பு*

(அலுவலகசெய்தியாளர்)

மக்கள் பாவனைக்கு உதவாத பெருந்தொகையான உணவுப் பொருட்கள் நேற்று தருமபுரம் பொதுசுகாதாரப் பரிசோதகரின் பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டு பொருட்கள்யாவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்ட பரந்தன் களஞ்சியத்தில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு சுகாதாரப் பரிசோத காினால் பரிசோதன்ன மேற்கொள்ளப் பட்ட பொழுது புழு, மற்றும் வண்டு களுடன் காணப்பட்ட மக்கள் பாவனைக்குதவாதவையான 20421.5 கிலோ சோளம் மற்றும் சோயாமா கலவை .உற்பத்தித் திகதி, காலாவதித்திகதி. பொதி இலக்கம் எனபன குறிப்பிடப்படாத கோதுமை

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் ஒருவர் சுட்டுக்கொலை

அக்கரைப்பற்று ஆயிஸிபா லியா மகாவித்தியாலய பின் ஒழுங்கையில் நேற்று முன்தினமிரவு 7-50 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 'ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 10ஆண்டுகளாக வெளி நாடு ஒன்றில் பணியாற்றிய இவர் மூன்று மாதங்களுக்கு முன்னரே நாடு திரும்பியதாகவும், நேற்று முன்தினம் அயல் வீட்டார் ஒருவரை சிகிசசைக்காக அட்டாளைச் சேனையிலிருந்து அக்கரைப்பற்றில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவின் பிரசன்னத்துடன் திருமலையில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு

திருகோணமலை மாவட்டத் துக்கான தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வு நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 9.00 மணிதொடக் கம் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறவுள்ளது. இதனை முன் னிட்டு பல்வேறு வேலைத் திட்டங் கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. பாராளுமன்ற உறுப்பினர் களான இரா.சம்பந்தன். துரைரெட்ண சிங்கம் ஆகியோரது தலைமையில் பாடசாலைகள் ரீதியில் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வவுனியாவில் நடை பெற்ற தமிழ் தேசிய நிகழ்வுக்கு வலுச்சேர்க்கும் முகமாக இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இது விடயமாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் மாலை பத்திரிகை யாளர் களைச் சந்தித்து இது பற்றி விளக்கமளித்தார்.

தமிழ் எழுச்சி நிகழ்வில் பங்கு கொள்வதற்காக தமிழ் பேசும் மக்கள் மிகவும் ஆர்வமாக இருக் கின்றார்கள். இளைஞர்கள், பல் கலைக்கழக மாணவர்கள், தொழில் நுட்பகல்லூரி மாணவர்கள் இது பற்றி மக்களுக்கு விளக்கமளிக் கும் நிகழ்வுகளை செய்து வரு கின்றனர் எனத் தெரிவித்த அவர் தமிழ்தேசிய எழுச்சி மாநாடு மூலமாக தமிழ் மக்கள் தங்களது உணர்வுகளை

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பிற்கு 55 மோப்ப நாய்கள்

சனாதிபதித் தேர்தல் பாதுகாப் பிற்காக 55 ஜேர்மனி மோப்ப நாய் களை சிறிலங்கா அரசாங்கம் இறக் குமதி செய்துள்ளது. என்று கண்டி பொலிஸ் பொறுப்பதிகாரி லால் செனவிரட்ன தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

வெடிகுண்டுகளை மோப்பம் பிடித்துக் கண்டறியும் பயிற்சி பெற்ற 55நாய்களை ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். இந்த நாய்கள் பெல்ஜியம் மலோனை

(IV ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி செய்த புரிந்துணர்வு ஒப்பந்தமே நாட்டில் சமாதானம் நிலவக் காரணம்

### *-மகிந்த கலந்துகொண்ட கூட்டத்தில் சந்திரிகா*

ஐக்கிய தேசியக் கட்சி செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந் தத்தன் மூலமே நாட்டில் சமாதானம் நிலவுகின்றது. இந்தப் புரிந்து ணர்வு ஒப்பந்தம் காரணமாகவே, தடைப்பட்டிருந்த வெளிநாட்டு முதலீடுகள் குவியத் தொடங்கின. வெளிநாட்டு முதலீட் டாளர் கள் நம் நாட்டிற்குப் படையெடுக்கத் தொடங்கினர் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகாவின் 10 ஆண்டு கால சனாதிபதி சேவை யைப் பாராட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இரத்தி னபுரி புதிய நகர விளையாட்டரங்கில் நடைபெற்றது. இக் கூட்டத் தில் கலந்து கொண்ட சனாதிபதி மேலும் தெரிவித் திருப்ப தாவது, சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சார்ந்த பொது சன ஜக்கிய

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு விடுதியில் தங்கியிருந்த பெண் படையினரால் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவு

இரு நாட்களுக்கு முன் கொழும்பு மருதானையில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த பெண்ணொருவர் சிறிலங்காப் படையினர் ஐவரால் கடத்தப்பட்டு பாலியுல் வல்லுறவிற்கு உட்படுத் தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பிட்ட படையினர் ஐவரும் பின்னர் இராணுவப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் முறைப்பாட்டைத் தொடர்ந்து முக்கிய சந்தேக நபர் ஒருவர் மருதானைப் பொலிஸ் நிலையத்திலும், ஏனையவர்கள் நால்வரும் நாரஹேன்பிட்டி இராணுவ முகாமொன்றில் இராணுவப் பொலிசாராலும், கைது செய்யப் பட்டுள்ளனர்.இராணுவ பொலிசாரால் கைது செய்யப்பட்ட நால்வரும், இன்னும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அமெரிக்கத் தூதுவர் திருமலை விஜயம்

(திருகோணமலை)

அமெரிக்காவின் இலங்கைக்கான தூதர் ஜேம்ஸ்லன்ஸ்ரட் நேற்று முன்தினம் திருகோணமலை நகருக்கு ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு வந்தார். அவருடன் அவரின் செயலாளர், பாதுகாப்பு அதிகாரி, அரசியல் செயலாளர் ஆகியோரும் வந்திருந்தனர். திருகோணமலை நகரின் தற்போ தைய நிலவரம் பற்றி படைஅதிகாரிகள், பொலிசாருடன் கலந்துரை யாடிய அமெரிக்கத்தூதர் லன்ஸ்ரட்,போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின திருகோணமலை மாவட்டத்தலைவர் ஆர்தர் ட்வீட்டனை அவரின் அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார் . அதற்கு முன்பாக இலங்கை இராணுவ திருகோண மலை மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமித்பால சூரியவை அவரின் பிளான்டின் பொயின்ட் தலைமை அலுவலகத்தில்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தவறிவிட்டது

சின்னரெத்தினம் மகாலிங்கம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும், எமது நிறுவன அடையாள அட்டையும் கிளிநொச்சி பேருந்து நிலையத்திற்கும், விசுவமடு, றெட்பானா, மு/ பாரதி வித்தியாலயத்திற்கு மிடையில் தவறவிடப்பட்டுள்ளது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது அருகேயுள்ள காவல் பணிமனையில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். சுமார்30இலட்சம் ரூபா பெறுமதியான தொண்டமனாறு வீடு நஸ்ட ஈடு, நிறுவனத்திற்கான கட்டடச் செலவு சிட்டை ஆவணங்கள், நிறுவன அடையாள அட்டை இவை சம்பந்தமாக நிறுவனத்தலைவருடன் ஞாயிறு நாளில் நேரில் எடுத்துரைக்க விசேட ஒழுங்கு செய்து தருமாறும் தலைவரை மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சி.மகாலிங்கம், காட்டுவளவு,
வல்வெட்டித்துறை.

(6868)

## வரிவிளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

புகைப்படத்துறையில் புதிய நுட்பங்களை உருவாக்கக் கூடிய **Adobe Photoshop** வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகளுக்கு:-வின்நெற் கணணி பயிற்சிநிலையம், டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள இரண்டு இஞ்சின்கள் England Lister (16hp, 12hp ) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு சுதா அரைக்கும் ஆலை, புளியடிச்சந்தி, விசுவமடு. (6858)

## பிற்போடப்பட்டது

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் இனறு வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமக்களுக்குவழங்கப்படவிருந்த காணி அனுமதிப்பத்திரங்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் வழங்கப்பட மாட்டாதெனவும், அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் கரைச்சிபிரதேச செயலக காணி அலுவலர் செ.சிறிரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

## கண்ணீரஞ்சலி

எமது திரு.சக்திதரன் ஆசிரியரின் தந்தையான அமரர் திரு.ச.கந்தசாமி அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தரம் 8 மாணவர்கள்,
மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்.

(6869)

## துயர் பகிர்கின்றோம்

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்தவரும், போராளி ஓவியநாதன், மாவீரர் மேஜர்முத்தவன் ஆகியோரின் அன்புத்தந்தையுமான திரு.வெ.கிருஸ்ணன் அவர்கள் 17.10.2005 அன்று காலமானார் என்ற செய்தியறிந்து மிகவும் துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் போராளி ஓவியநாதன் அவர்களின் துயரிலும் பங்குகொண்டு அமரர் வெ.கிருஸ்ணன் அவர்களுக்கு எமது இதய அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செஞ்சோலைக்
குடும்பத்தினர்.

(6870)

## 04ஆம் ஆண்டு நினைவு மலர்



அன்னையின் மடியில்

21 □ 11 □ 1982

தாயக விடுதலைக்காய்

21 □ 10 □ 2001

### கடற்புலி லெப்.நாவரசி

(சன்முகசுந்தரம் பிறேமினி)

மாறாயிலுப்பை, நெடுங்கேணி

அன்னை அரவணைப்பில் அயராது முத்தமிட்டாய்
உன் நிழல் இன்று தானைத்தலைவன் வழியில்
இணைந்தாய் உன் உடன் பிறந்த சகோதரத்தை
இனை பிரிந்து இடையில் சென்றது ஏன்? நான்கு
ஆண்டு சென்றாலும் அழியாது உன் பூமுகம்
என்றும் எங்கள் அன்பு மறவா அன்புத்தங்கை நாவரசி.

கடந்த 21.10.2001 அன்று முல்லைக் கடற்பரப்பில் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த நாவரசியுடன் வீரகாவியமான அனைத்து மாவீரச் செல்வங்களையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

(6629) மாறாயிலுப்பை, நெடுங்கேணி.

தகவல்:-
கா.மணியம், குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி



இ.மலரினி
160 புள்ளி
மாவட்டநிலை-01



பா.றேமன்
136 புள்ளி



வி.தட்சாயினி
131 புள்ளி

2005ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்களையும், வழிகாட்டிய ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

(சி.13102)

## 18 ஆம் ஆண்டில் நீங்காத நினைவு உன் பாதத்தைப் போற்றி...

தாய் மடியில்
04 □ 01 □ 1959



தாயக மண்ணில்
21 □ 10 □ 1987

மூத்த உறுப்பினர்

### லெப்.கேணல் சந்தோசம் மாஸ்டர்

[கணபதிப்பிள்ளை உமைநேசன்]

முன்னாள் திருமலை மாவட்டத் தளபதி.

பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞானபீடம் ஏறி
விடுதலைக்காக எழுந்த புலி~நீ
தலைவரோடொன்றி திருநெல்வேலி சமரில் நின்றாய்
திருமலை சென்று பகை வென்ற தளபதி
எம் திசை வந்த அநநயரை திகை கொள்ளவைத்த தீரன்
உயிர் ஈந்து பதினெட்டு ஆண்டுகள் ஆகினும்
உன் பாதச் சுவடுகளைப் பற்றி
எழும் உன் சந்ததி.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6851)

Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | solidar An INGO consortium including NPA, SAH and ASB

## கூறுவிலை கோரல்

செம்பியன் பற்று வடக்கிலேயோ அல்லது வத்திராயனிலேயோ (வடமாராட்சி கிழக்கு) சுனாமியால் அழிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைத்தல்.

ஏ.எஸ்.பீ., என்.பீ.ஏ மற்றும் எஸ்.ஏ.எச். ஆகிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமாகிய சொலிடாரினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செம்பியன்பற்று வடக்கிலும், வத்திராயனிலும் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்காக சீல் வைக்கப்பட்ட கூறு விலைப்பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றீர்கள். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் 20 தொடக்கம் 50 வீடுகள் தத்தமது தராதரத்திற்கும் தகுதிக்கும் ஏற்றவாறு கட்டவிரும்புவோரை இதில் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஒப்பந்தக்காரர்கள் கூறுவிலைப்பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கீழ் காணும் முகவரியில் ரூபா 3000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி கூறு விலை விண்ணப்பப்படிவங்களும், ஆவணங்களும் 26.10.2005ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ள வேண்டும்.

Solidar/ ASB Construction Office,
160 Mile Post,
Farm Point,
A9 Road,
Paranthan.

தொலைபேசி – 021 228 5147 (சி-13103)

ஒக்ரோபர் வாசிப்பு மாதம்
அரங்கினூடு கற்றல் கற்பித்தல்
வாசியுங்கள்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு

வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு
AHAVILI,3,Torrington Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

# மகிந்தவுக்கு தைரியம் இருந்தால் தமிழர்களிடம் மட்டும் வாக்கெடுப்பு நடத்தட்டும்

## - பெ.சந்திரசேகரன் சவால்!

சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு தைரி இருந்தால் தமிழர்களிடம் இனப்பிரச்சினைக்கு தீர்வு தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தட்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் சவால் விடுத்துள்ளார்.

அவர்வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், இனவாத அரசியலுக்கு இந்நாட்டு வரலாற்றில் புது வடிவம் கொடுக்கப்படுவதை நிரூபிப்பதாக மகிந்த ராஜபக்ஷவின்தேர்தல் அறிக்கை எழுத்து மூலம் உறுதிப்படுத்தியிருக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஓர் இனம் செறிவாகவும்தனித்துவத்தோடும், தனியான கலை, கலாச்சார, பாரம்பரியங்களோடும் பல தலைமுறைகளாக வாழ்ந்தால் அப்பிரதேசம் அங்கு வாழும் மக்களின் தாயகமாகக் கொள்ளப்படல் வேண்டும் என்பதை ஐக்கியநாடுகள் சபையே தனது சாசனத்தில் ஏற்றுக் கொண்டுள்ளது. இத்தகைய தாயகத்திற்கு உரிமை கோருகின்ற சகல தகுதிகளும் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு உண்டு என்பதே வரலாறு காட்டும் உண்மை.

இந்த தேர்தல் அறிக்கை மூலம் தமிழர்களின் தாயக கோட்பாட்டையே தகர்க்க நினைப்பது தமிழ் சமூகத்தின் ஆணிவேரை ஆட்டிப்பார்க்கின்ற அகோரத்தனமாகும்.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக போராடி வரும் தமிழ் இனத்தை ஒற்றை ஆட்சிக்குள் பலாத்காரமாகக் கட்டிப்போட நினைப்பது தமிழர்கள் சரணாகதி அடைந்துவிடவேண்டும்- அடங்கிப்போகவேண்டும் என்ற ஆணவத்தின் அடையாளமாகவே வெளிப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்விற்கு சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என்பது உச்சகட்டமான கோமாளித்தனமாகும்.

சனத்தொகையில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக அதிக விகிதாசாரத்தில்இருக்கும்போது தமிழர்களுக்குச் சாதகமான ஆணையை பெரும்பான்மை மக்களிடம் இருந்து எப்படி எதிர்பார்க்க முடியும்?

இவர்களுக்குத் தைரியம் இருந்தால் தமிழ் மக்களிடம் மட்டும் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்திப்பார்க்கட்டும். அப்படி நடந்தால் தனி நாடுதான் தமக்குள்ள ஒரே தீர்வு என்பதை தமிழர்கள் ஒட்டு மொத்தமாக தடுமாற்றமின்றி வெளிப்படுத்துவார்கள்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணத்திற்காக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளையும் பொதுக்கட்டமைப்பையும் மகிந்த ராஜபக்ஷ நிராகரித்திருப்பது மனிதாபிமான உணர்வுகளோடு கூட தமிழ் மக்களைகரிசனையாக கவனிக்கின்ற இதயம் இல்லாதவர் என்பதையே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

# காணாமற்போன சிங்கள ஓட்டுநரை தேடும் பணியில் தமிழீழ காவல்துறை

தமிழீழ நிர்வாகப்பகுதியான திருகோணமலை சேருவில பிரதேசத்தில் காணாமல் போன சிங்களவரான உழவியந்திர ஓட்டுநரை தமிழீழ காவல் துறையினர் தேடி வருகின்றனர்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சிங்கள வாகன ஓட்டுநரின் புகைப்படத்துடன் அவர் குறித்த விபரங்களை தமிழீழ காவல்துறையினரிடம் கையளித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதையடுத்து இந்தத் தேடுதல் நடவடிக்கையை தமிழீழ காவல்துறை மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஒக்ரோபர் ஐந்தாம் நாள் முதல் ரஞ்சித் ஜயசிறி (வயது-40) என்ற சிங்கள ஓட்டுநர் சேருவில பிரதேசத்தில் காணாமல் போயுள்ளார். ஆழிப்பேரலை மீளமைப்புப்பொருட்களை ஏற்றி வந்த போது அவரது உதவியாளருடன் காணாமல் போனதாகக் கூறப்படுகிறது.

சிங்கள வாகன ஓட்டுநர் காணாமல் போனது தொடர்பாக கடந்த சனிக்கிழமை சிங்களவர்கள் திருகோணமலையில் முழு அடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ்டொட்டிர் கூறுகையில், காணாமல் போன சிங்களவரின் குடும்பத்தினருடன் தொடர்பில் இருந்து வருகிறோம். தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் சிறிலங்கா சமாதான செயலகத்திடம் இது தொடர்பிலான தகவல்கள் கையளிக்கப்பட்டுள்ளன என்றார்.

# சட்டத்தரணி வேடமிட்ட பெண்ணுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

கொழும்பு நீதிமன்றத்தில் சட்டத்தரணியைப் போன்று வேடமிட்டு நடமாடிய போது கைது செய்யப்பட்ட பெண்ணிற்கு 12 மாதகால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதிபதி குசலா சரோஜினி வீரவர்த்தன இந்த உத்தரவைப் பிறப்பித்தார். இது தவிர 1,500 ரூபாஅபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத்தை அறவிட்ட பின்னர் சந்தேக நபரைவிடுதலை செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதி, சந்தேக நபரின் நன்னடத்தைக் காலத்தையும் விளக்க மறியல் காலத்தினையும் கவனத்தில் எடுத்து இந்த தண்டனையை விதித்துள்ளார். இது போன்ற குற்றச்செயல்களில் அவர் மீண்டும் ஈடுபட்டால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் சந்தேக நபரை நீதிபதி எச்சரித்துள்ளார்.

சந்தேக நபரான இந்தப் பெண்ணிடமிருந்து மூன்று அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டிருந்தன. அது குறித்து விசாரணைகளை மேற்கொண்டதில் அவர் மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

# மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து தமிழ்கூட்டமைப்பு கடும் விமர்சனம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக விமர்சனம் செய்துள்ளது.

தமிழ்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இது குறித்துக் கூறியதாவது:

ஒற்றையாட்சி முறையின் கீழ் அதிகாரப்பகிர்வு என்பது சாத்தியமல்ல. ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண முடியாது என்பதை 50ஆண்டுகாலத்திற்குமுன்பே தமிழர்கள் நிராகரித்து விட்டனர்.

ஆழிப்பேரலை மீளமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பு என்பது தமிழர்களின் மனிதாபிமான பிரச்சினைகளுக்கான ஒரு சிறிய கட்டமைப்பு. அதைக்கூட மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் அறிக்கையில் நிராகரித்து விட்டார்.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுக்கு முந்தைய தீர்வான இடைக்கால நிர்வாகசபை கோரிக்கையையும் மகிந்த நிராகரித்து விட்டார். அமைதி முயற்சிகளுக்குப் பாதகமாகவே மகிந்தவின் தேர்தல் அறிக்கையின் அனைத்து அம்சங்களும் உள்ளன என்றார் அவர்.

# கடன் அட்டை மோசடி இருவருக்கு விளக்கமறியல்

இங்கிலாந்து தனியார் வங்கிகள் சிலவற்றில் கடன் அட்டைகளை மோசடி செய்து 10இலட்சம் ரூபாவிற்கும் மேல் பெறுமதி வாய்ந்த பொருட்களைக் கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, உப்புவெளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த லக்ஷ்மன் சஞ்சீவ மற்றும் சிவசுப்பிரமணியம் பிரகாா் ஆகிய இருவரையே கொழும்பு கோட்டை நீதவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# விமான நிலையத்தில் பாலியல் வல்லுறவு நான்கு ஊழியர்கள் கைது!

சிறிலங்கா விமானநிலையத்தில் குவைத் செல்ல இருந்த இளம் பெண் பயணியை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய ஊழியர்கள் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் பத்தாம் திகதி குவைத் செல்லும் விமானத்திற்காக இளம் பெண் பயணி ஒருவர் விமான நிலையத்தில் காத்திருந்தபோது இந்தக்கொடூரம் நிகழ்த்தப்பட்டது.

குவைத் செல்வதற்காக காத்திருந்த அந்தப்பெண் பயணியிடம் விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர் முதலில் விசாரணை நடத்தியுள்ளனர். அப்பெண் தான் குவைத் நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் செல்ல இருப்பதாகக் கூறியுள்ளார்.

பின்னர் தன்னைத் தொடர்ந்து வருமாறுகூறி பெண் பயணிகள் அறைக்கு அவரை அந்தப்பாதுகாப்பு உத்தியோகத்தர் அழைத்துச் சென்றுள்ளார். அறைக்குள் நுழைந்ததும் பாதுகாப்பு உத்தியோகத்தருடன் மேலும் மூவரும் சேர்ந்து அப்பெண்ணை வல்லுறவுக்குள்ளாக்கியுள்ளனர். நால்வரும் மது அருந்திய நிலையில் இச்செயலில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கொடூரத்தினால் அப்பெண் மயக்கமடைந்தார். மயக்கம் தெளிந்த நிலையில் தான் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட கொடூரத்தை அறிந்தார். பின்னர் விமானத்தைப்பிடித்து அந்தப்பெண் குவைத் சென்றடைந்தார்.

அங்கு சென்றபோது அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்ததால் குவைத் பொலிசாரிடம் தனக்கு நேர்ந்த கொடூரத்தை விளக்கினார். இதையடுத்து அந்தப்பெண்ணை மீண்டும் கொழும்புக்கு அனுப்பி வைத்த குவைத் பொலிசார் இது தொடர்பாக சிறிலங்கா பொலிசாருக்கும் தகவல் தெரிவித்தனர்.

கொழும்பு திரும்பிய அந்தப் பெண் கொழும்பு விமான நிலைய பொலிஸ்நிலையம் மற்றும் வெல்லாவ பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணையை விமான நிலைய நிர்வாகமும் மேற்கொண்டு வருகிறது.

பொலிஸ் மற்றும் விமான நிலைய நிர்வாக விசாரணைகளின் முடிவில் இக்செயலில் ஈடுபட்ட நான்கு விமான நிலைய ஊழியர்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் இருவர் விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்றும் இருவர் கடைநிலை ஊழியர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

குற்றவாளிகள் அனைவரும் அடையாளம் காட்டப்படுவதற்காக விரைவில் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.


## சாவு அறிவித்தல்

### ஆனந்தகிருஸ்ணர் ஸ்ரீபாஸ்கரன்

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தகிருஸ்ணர் ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் 20.10.2005 வியாழக்கிழமை காலமானார். அன்னார் ஆனந்தகிருஸ்ணர் இராஜலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், ஸ்ரீரஞ்சினி, ஸ்ரீதரன், ஸ்ரீவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாலன், சுகந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிரோஜன், லாவண்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜித், சில்பா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2005) பிற்பகல் 2.00 மணியளவில் வியாபாரிமூலையில் அமைந்துந்துள்ள அவரது வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

தகவல்:-
குடும்பத்தினர்.

(சி.13089)



## முக்கிய அறிவித்தல்

### கட்டாக்காலி நாய்கள் அழித்தல்

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்குள் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் வேலைத்திட்டம் 24.10.2005 திங்கட்கிழமை முதல் தமிழீழ சுகாதாரசேவையினருடனும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருடனும் இணைந்து தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தாங்கள் வளர்க்கும் வளர்ப்பு நாய்களுக்கு உரிய உரிமத்தைப் பெற்று நோய்த்தடுப்பூசியினை நாய்களுக்கு வழங்கி கட்டி வளர்க்கவும்.

ஏனைய நாய்கள் அனைத்தும் கட்டாக்காலி நாய்களாகக் கணிக்கப்பட்டு பிடித்து அழிக்கப்படும்.

தங்களுக்குத் தேவையற்ற நாய்களையும் குட்டிகளையும் கட்டாக்காலி நாயழிப்புச் சேவையில் ஈடுபடும் வாகனத்தில் ஒப்படைப்பவர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக நாயொன்றிற்கு20/- வீதம் வழங்கப்படும்.

பொன்.நித்தியானந்தம்,
கரை. விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.13104)

# லெப்.கேணல் மறவன் பயிற்சிப்பாசறையிலிருந்து ஆறாவது துணைப்படை அணி பயிற்சி முடித்து வெளியேறியது

லெப். கேணல் மறவன் பயிற்சிப் பாசறையிலிருந்து ஆறாவது துணைப்படை அணி பயிற்சிகளை நிறைவுசெய்து வெளியேறியது.

தமிழீழக் கடற்படையின் துணைப படையினருக்கான பயிற்சிகள் லெப். கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றன. ஏற்கனவே இப் பயிற்சிக் கல்லூரியிலிருந்து ஐந்து அணிகள் வெளியேறியுள்ள நிலையில் நேற்று 200 பேர் கொண்ட ஆறாவது அணி வெளியேறியது.

வடமாரட்சிகிழக்கு வத்திராயன் பகுதியில் நடைபெற்ற இப்பயிற்சி நிறைவு விழாவில் பயிற்சிகளை முடித்து கொண்ட வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 200 பேர் கொண்ட அணியே நேற்று வெளியேறியது.

இப்பயிற்சி நிறைவு விழாவினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச்சுடரினை தமிழீழ கடற்படையின் யாழ். மாவட்ட தளபதி கலாத்தன் ஏற்றி வைத்தார்.



தமிழீழ தேசியக் கொடியினை முதன்மை பயிற்சி ஆசிரியர் சின்னமணி ஏற்றினார். தொடர்ந்து லெப். கேணல் மறவனின் திருவுருவப் படத்திற்கான சுடரினை லெப்கேணல் மறவனின் புதல்வன் ஏற்றிவைக்க மலர் மாலையினை தமிழீழ கடற்படையின் வடமராட்சிகிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவன் ஏற்றினார். தொடர்ந்து பயிற்சியை முடித்து வெளியேறிய துணைப் படை வீரர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. தொடர்ந்து பயிற்சியின்போது திறமையாகச் செயற்பட்ட வீரர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் தமிழீழ கடற்படையைச் சேர்ந்த காதர், தமிழீழ கடற்படையின் யாழ். மாவட்ட துணைத்தளபதி ஆண்டான், வடமாரட்சிகிழக்கு செயலணிக்குழுப் பெறுப்பாளர் பாலையா, பயிற்சி ஆசிரியர் யசோ, ஆகியோர் கலந்து கொண்டனர். (ச.தீ)

# பேச்சுவார்த்தைக்கான இடத்தெரிவில் நோர்வேயின் முயற்சியில் முன்னேற்றமில்லை

## சிறி. அரசு அறிவிப்பு

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுக்களை நடாத்தும் இடத்தைத் தெரிவு செய்வதற்காக நோர்வே விசேட தூதுவரின் முயற்சியில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று சிறிலங்கா அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று வியாழக் கிழமை ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய சிறிலங்கா அரசாங்கப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா கூறியதாவது;

சிறிலங்காவுக்கு வருகை தந்த நோர்வேத் தூதுவர் டொன் புறூவ் ஹொவ்டே சிறிலங்கா அரசாங்கத்துடனும் விடுதலைப்புலிகள் தரப்பிலும் பேச்சுக்களை நடாத்தினார்.

விடுதலைப்புலிகளுடனான நோர்வேத் தூதுவரின் சந்திப்பில் அவர்கள் தங்களது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாக நோர்வேத் தூதுவர் தெரிவித்தார்.

இதனால் தற்போதைய முட்டுக் கட்டையான நிலையை நோர்வேத் தூதுவர்களின் பயணத்தால் அகற்ற இயலவில்லை என்றார் அவர்.

சிறிலங்காவில்தான் அமைதிப் பேச்சுக்களை நடாத்த வேண்டும் என்பதில் சிறிலங்கா அரசாங்கம் உறுதியாக நிற்கிறது.

ஆனால் ஆட்கொலைகள் நாளாந்தம் அதிகரித்து வரும் சிறிலங்காவின் பிரதேசத்தில் இந்த அமைதிப் பேச்சுக்களை நடாத்த முடியாது என்றும் நடுநிலை நாடொன்றிலோ அமைதியாக உள்ள விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான கிளிநொச்சியிலோ இந்தப் பேச்சுக்களை நடாத்த வேண்டும் என்றும் விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் பேச்சுவார்த்தைக்கான இடத்தெரிவு குறித்து முடிவு செய்ய நோர்வே விசேட தூதுவர் டொன் புறூவ் ஹொவ்டே சிறிலங்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இருதரப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்பில் எவ்வித இறுதி முடிவும் எட்டப்படாத நிலையில் வெறும் கையுடன் அவர் நோர்வே திரும்பியுள்ளார்.

# கிளி. பொன்னம்பலம் மருத்துவமனையில் இருதய மருத்துவ நிபுணரால் நாளை சிகிச்சை

கிளிநொச்சியில் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் யாழ்போதனா மருத்துவமனையிலிருந்து வருகைதந்திருக்கும் இருதய ம்ருத்துவ நிபுணரால் இருதயநோய்கள், மாரடைப்பு,உயர் குருதியமுக்கம்,மூட்டுவாதம்' ,இருதயக் கட்டமைப்பில் பாதிப்பு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட கருவிகளினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. பயன்பெற விரும்புவோர் பொன்னம்பலம் மருத்துவமனை, கிளிநொச்சி வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கபடுகின்றனர். நாளை காலை 8.00மணிமுதல் மாலை3.00வரை இதற்கான சிகிச்சை நடைபெறவுள்ளது.

# சம்பா, வெள்ளைநாட்டை உற்பத்திசெய்வதன் மூலம் சந்தைப்படுத்தல் பிரச்சினையைத் தீர்க்க முடியும்

## -கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்

(அலுவலக செய்தியாளர்)

சந்தைப்படுத்தக்கூடிய நெல்லினங்களை உற்பத்தி செய்வதன் மூலமே கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நெல் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இவ்வாறு நேற்று கிளி. மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற விவசாயக்குழுக் கூட்டத்தில் கிளி. அரசஅதிபர் தெரிவித்துள்ளார்.

நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையினால் 2005/2006 காலபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென கமக்கார அமைப்பினர் தெரிவித்த கருத்திற்கு பதிலளிக்கையிலேயே கிளி.அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்த நெற்செய்கையினை மேற்கொள்வதனாலேயே மேற்படி நெல்லினை உடனடியாக சந்தைப் படுத்த முடியாத நிலை தோன்றுகிறது.

இருந்த பொழுதிலும் காலபோகத்திற்கும் சிறுபோகத்திற்குமான நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கென 70 மில்லியன் ரூபா கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் மூலமாக நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

மேலும் இந்த நிலையினை மாற்றியமைப்பதாயின் சந்தைப்படுத்தக் கூடிய சம்பா மற்றும் வெள்ளை நாடு இன நெல் உற்பத்தியினை மேற்கொள்ளும் பொழுது சம்பா நெல்லினை 16 ரூபா 50 சதமாகவும் வெள்ளை நாட்டினை 15ரூபா 50 சதமாகவும் கொள்வனவு செய்ய முடியும். குறிப்பாக நிவாரணக் கொடுப்பனவுக்கென வெள்ளை நாட்டினை ரூபா.15.50 சதத்திற்கு கூட்டுறவுச் சங் கங்கள் மூலம் கொள்வனவு செய்யப்படுமெனவும் எனவே விவசாயிகள் 2005/2006 காலபோக நெற்செய்கையில் மேற்படி இன நெல்லினை உற்பத்தி செய்துபயன்பெறுமாறும் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம்கேட்டுள்ளார். (சோ)

## பாதுகாப்பிற்கு....

இனங்களைச் சேர்ந்தவை. சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் பரப்புரைக் கூட்டங்களை நடாத்தும் இரு பிரதான வேட்பாளர்களின் அனைத்துக் கூட்டங்களுக்கும் இந்த நாய்கள் கொண்டு செல்லப்படும். சிறப்பு வாகனங்களில் ஒவ்வொரு இடத்திற்கும் ஏற்றிச் செல்லப்படும் இந்த நாய்களுக்கு பதப் படுத்தப்பட்ட உணவுகளையும் ஏற்பாடு செய்துள்ளோம் என்றார் லால் செனவிரட்ன

## அக்கரைப்பற்றில்....

உந்துருளியில் அழைத்து வந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவருடன் வந்த அயலவர் மருத்துவரிடம் சிகிச்சை பெற உள்ளே சென்றவேளை இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

## உலக உணவுத்திட்ட...

மா 42650 கிலோ ஆகியன கண்டுபிடிக்கப்பட்டு மேற்படி களஞ்சியத்தில் தருமபுரம் பொது சுகாதார பரிசோதகரினால் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இப் பொருட்களின் தரம் குறித்து ஏற்கனவே வாய் மொழிமூலமாக பொது சுகாதார பரிசோதகர்களினால் இந்நிறுவனத்திற்கு தெரிவித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சோ)

## அமெரிக்கா...

சந்தித்துப்பேசினார்.பொலிஸ் உயர் அதிகரிகளையும் தூதர் சந்தித்தார். திருமலை நகரில் புத்தர்சிலை நிறுவப்பட்டது. அதன் பின் நகரில் இராணுவத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டது. அடிக்கடி இடம்பெறும் கிரனேட் வீச்சுச்சம்பவங்கள் அவற்றின் பின்னணி ஆகியன குறித்து அமெரிககத்தூதர் சம்பந்தப்பட்ட பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் கண்காணிப்புக் குழுவினருடன் விரிவாகப்பேசியதாகக் தெரிவிக்கப்பட்டது. சனிக்கிழமை தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வு நடைபெறவிருக்கும் தருணத்தில் அமெரிக்கத்தூதரின் திருகோணமலை வருகை முக்கியமானதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகின்றது. (25)

## கறுப்புப்பூனைப்...

கும் அனைத்துக் கூட்டங்களுக்கும் கடுமையான பாதுகாப்பும் அதற்கென தனியே குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது. சனாதிபதியின் பணிப்பிற்கமைய இது மேற்கொள்ளப்படுகிறது. இந்த இரு வேட்பாளர்களதும் பாதுகாப்பிற்கென தனியே பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரும் நியமிக்கப் பட்டுள்ளார். இந்திய பிரமுகர்களுக்கான பாதுகாப்பை வழங்கும் கறுப்புப் பூனைப் படையினரிடம் பயிற்சி பெற்றவர்கள் இக்குழுக்களில் இடம் பெற்றுள்ளனர். சிறிலங்காவின் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகள் முழுமையாக கண்காணிக்கப்படுகின்றன என்றார்.

## விமானம்வீழ்ந்ததன்...

பிலேயே ஞானம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விமானத்தைத் தேடி நேற்று முன்தினம் மாலை இராணுவ உலங்குவானூர்தி ஒன்றும் தமது அனுமதியின்றி கனகராயன்குளம் பகுதியில் சுற்றிப்பறந்ததாகவும் இந்த இரண்டு செயற்பாடுகள் மூலம் படையினர் போர்நிறுத்த ஒப்பந்தத்தினை மீறி இருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தாங்கள் முறைப்பாடு செய்துள்ளதாக ஞானம் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கனகராயன் குளம் பிரதேசத்திலுள்ள கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம், கற்கடந்து ஆகிய கிராமங்களுக்கிடையில் காட்டுப்பகுதியிலேயே ஆளில்லாத வேவு விமானம் விழுந்ததாகவும் அப்பகுதி கண்ணிவெடிகள் உள்ள பிரதேசம் எனவும் ஞானம் தெரிவித்தார்.

## ஐ.தே.கட்சி...

முன்னணி கடந்த தேர்தல்களில் வெற்றி பெற்றமைக்குக் காரணம் எனது தலைமைத்துவமே அன்றி எனது தாய், தந்தை, கணவனின் செல்வாக்கல்ல. நான் முன்வைத்த தேர்தல் வாக்குறுதிகளே வெற்றியை உறுதி செய்தன. எமது சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள் என நம்புகின்றேன் என கேட்டுக் கொண்ட சந்திரிகா மேலும் தெரிவிக்கையில்,

11 ஆண்டு காலமாக இலங்கைக்கு வர மறுத்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இன்று இலங்கைக்கு வருகின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்த புரிந்துணர்வு சமாதான உடன்படிக்கையே ஆகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷ உட்பட பல சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

## கண்காணிப்புக்குழு..

வெளிக்கொணர்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்கள் இந்நிகழ்வுகளில் பங்குபற்ற வேண்டும் என மிகவும் அன்பாகக் கேட்டுக்கொள்வதாகவும் தாம் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கு, வெளியிடங்களில் இருந்து குறிப்பாக திருகோணமலையின் வடக்கு புறமான கிராமங்களான புல்மோட்டை, திரியாய், குச்சவெளி, கும்புறுபிட்டி, நிலாவெளி, சாம்பல்தீவு, சல்லி, கிராமக்களுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படடுள்ளதாகவும் அதுபோன்று கந்தளாய், முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம், ஆலங்கேணி, ஈச்சிலம்பற்று, மூதூர், மக்களுக்கும் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் தங்குமிட வசதிகளும் உணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மக்கள் இதில் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் தொவித்தார். இதற்காக செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது எனவும் அதன் ஊடாக அவ் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய எழுச்சிநாள் நிகழ்வுகளின் போது போர்நிறுத்தக்' கண்காணிப்பாளர்கள் சமுகம் அளித்திருப்பர் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்டத்தலைவர் ஆர்தர் ட்வீட்டன் தெரிவித்தார். தற்போது திருமலை நகரில் ஒருவித அமைதிநிலை காணப்படுகிறது. எழுச்சிநாள் நிகழ்வின் போது இதேநிலை நீடிக்கும் என்று நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். எழுச்சி நாள் நிகழ்வு பற்றி அதன் ஏற்பாட்டாளர்கள் கண்காணிப்புக்குழுவினருக்கு அறிவித்திருப்பதாகவும் ஆர்தர் ட்வீட்டன் தெரிவித்தார்.

## விமானம் மூலம்....

இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துவிட்டது. சிறிலங்கா இராணுவத்தின் உளவு நடவடிக்கையானது போர் நிறுத்த உடன் படிக்கைக்கு முரணானது.

விமானம் விழுந்து நொருங்கியமை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம். ஏற்கனவே உளவு விமானம் தொடர்பாக 6-7 முறை விடுதலைப்புலிகள் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

தற்போதைய சம்பவம் தொடர்பாக இதுவரை உத்தியோகபூர்வமாக முறைப்பாடுகள் எதனையும் செய்யவில்லை. இருப்பினும் முறைப்பாடு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றார் அவர். தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக இந்த விமானம் விழுந்து நொருங்கியதாக செய்தித் ஸ்தாபனங்களின் செய்திகள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல் தயாரிப்பான இந்த உளவு விமானம் மூன்று இலட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியானது என தெரிய வந்துள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்பு சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான விமானம் வடக்கு கிழக்கில் விழுந்து நொருங்கியமை இதுவே முதல் முறையாகும்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.